

மின்னலே
நீ வந்ததேனடி
எஸ்.உஷாராணி
மின்னலே நீ வந்ததேனடி
எஸ்.உஷாராணி
மின்னலே
நீ வந்ததேனடி
எஸ்.உஷாராணி

# மின்னலே நீ வந்ததேனடி

## 1

விசுதாவை அன்று அவள் மாமனார் அழைக்க வந்திருந்தார். விசுதா கிளம்பிக் கொண்டிருந்தாள். அவள் அப்பா கணேசன் ''நீ போகக்கூடாது. எதற்கு அந்த வீட்டிற்குப் போகணும்? இன்றுவரை வராதவங்க. நீ இருக்கியா இல்லை செத்தியா... என்றுகூட நினைக்காதவங்க இப்ப இங்கு எதுக்கு வரணும்?

''அவர்களுக்குக் காரியம் ஆகவேண்டும். அவர் மகன் கல்யாணத்திற்கு நீ இருந்தால் கவுரவமாக இருக்கும். பொண்ணு குடுக்கறவன் கேட்பானே... உன் இரண்டாவது மருமகள் எங்கே என்று? என்ன பதில் சொல்ல முடியும்? அப்படியே சொன்னால் எவன் பொண்ணு கொடுப்பான்?

''அதனால் வெளியே தெரியாமல் பேசி முடித்துக் கல்யாணத்திற்கு உன்னைக் கூப்பிட வந்திருக்காங்க. அதுவும் எனக்கு அழைப்பு இல்லை. அப்படி எதற்கு நீ போகவேண்டும். கல்யாணத்திற்கு வருபவர்கள் எல்லோரும் கேட்க மாட்டார்களா... என்ன பதில் சொல்ல முடியும். அவர்கள் அவமானப்படட்டும். அப்பத்தான் தெரியும் நாம் எவ்வளவு அவமானப்பட்டோம் என்று. இது உனக்குத் தெரியவில்லையே... என்ன பெண் நீ'' என்றார் கோபமாக.

''அப்பா என்னதான் இருந்தாலும் நான் அவர்கள் வீட்டு மருமகள். அவர்கள் என்னை எப்படி நடத்தினாலும் நான் பொறுத்துப் போகத்தான் வேண்டும். தப்பை நம் மேல் வைத்துக் கொண்டு அவர்களை ஏன் குறை சொல்ல வேண்டும்.''

கணேசன் ஆவேசமானார். ''தப்பு நம்மிடமா...? நீயே போதும் போல் இருக்கே. அப்படி நான் என்ன தப்புப் பண்ணிவிட்டேன். ஊரில் யாரும் பண்ணாததை. அவர்களுக்கு எத்தனை வருடம் உழைத்திருப்பேன். ஒரு நன்றி வேண்டாம். இவன் என்றைக்கு ஆபீஸ் வந்தானோ... அன்றில் இருந்து எனக்கு சனியன் பிடித்து விட்டது. இவன் நல்லா இருப்பானா... இவன் காரில் போகும்போது அடிபட்டுத்தான் சாகப் போறான்.''

''அப்...ப்...பா'' என்றாள் ஆத்திரமாக.

அவர் நிமிர்ந்து மகளைப் பார்த்தார்.

''உங்க மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கீங்க. அவருக்கு இப்படி சாபம் இட நீங்க யார்...? அவரை இப்படித் தரக்குறைவாகப் பேச. அவர் என் கணவர். இப்படி மரியாதை இல்லாமல் பேசினால் என்ன நடக்கும்



என்று தெரியாது. அவருக்கு அது மாதிரி நடந்தால் நான் உயிருடன் இருப்பேன் என்று நினைத்தீர்களா...?''

அவர் ஏளனமாகச் சிரித்தார்.

''என்...ன அவன் உன் கணவனா... எப்படி...? தாலி கட்டியதாலா...? அவன் முகம் உனக்கு ஞாபகம் இருக்கா...? கறுப்பா, சிவப்பா... என்று உனக்கு முழுவதும் தெரியுமா...? அவனைப் பற்றி உனக்கு என்ன தெரியும். ஒன்றுமே தெரியாத உனக்கு ஏன் இவ்வளவு கோபம் வரணும்?

''இப்பக் கல்யாணத்திற்காகக் கூட்டிப் போய்விட்டு, பிறகு உன்னை அனுப்பிவிடுவாங்க. இதுக்குப் பேர் என்ன...?

''நான் அவமானப்பட்டால் பரவாயில்லை. நீ அவர்கள் குடும்ப கவுரவத்தைக் காப்பாற்ற வேண்டும். அப்படித்தானே. இல்லை அங்கு போனால் தன்னை விரும்பி ஏற்றுக் கொள்வான் என்ற நினைப்பா...? அது கனவிலும் நடக்காது. ஏன்னா...? அந்த முரடனைப் பத்தி எனக்குத்தான் தெரியும்.

''அவன் என்ன முடிவு எடுக்கிறானோ... அதுதான் இறுதி முடிவு. கடவுளே வந்து சொன்னாலும் கேட்கமாட்டான். அத்தனை பிடிவாதம். அழுத்தக்காரன்.

''நீ வேண்டும் என்றால் அவனே வந்திருக்கலாமே... ஏன் வரவில்லை. இந்த முடிவு உன் மாமனார் எடுத்த முடிவு. நாலு பேர் தன்னைக் கேவலமாகப் பேசக்கூடாது என்ற காரணத்திற்காக வந்திருக்கார். இந்தப் பெரிய மனிதன் அன்று அவர் மகன் பேசும்போது இவர் கேட்டுக் கொண்டு சும்மாதானே இருந்தார். ஒரு வார்த்தை இன்று கூப்பிட வந்ததுபோல் அன்று கூட்டிப் போயிருக்க

லாமே... ஏன் கூட்டிப் போகவில்லை. அப்போ அவரும் திட்டம் போட்டுத்தானே... இப்படிச் சதி செய்திருக்கார்.''

''அப்பா நீங்கள் செய்ததும் தப்புத்தானே. நம்பினவங் களுக்கு நீங்கள் இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்ய லாமா...? அதனால் தானே என்னைப் பழிவாங்கி விட் டாங்க. இது இன்னமும் உங்களுக்குப் புரியவில்லையா...? இல்லை புரியாதமாதிரி நடிக்கிறீங்களா...?

''நீங்க செய்த தப்புக்கு அவர் மேல் ஏன் பழி போட் டீங்க. ஏன்னா... அவர்கள் குடும்பத்தில் அதை நம்பி விடுவார்கள் என்று நீங்கள் நினைத்தீர்கள். அது எப்படி நம்புவார்கள். தன் மகன் என்ன தப்பு பண்ணுவான். எதைச் செய்ய மாட்டான் என்று கூடவா... தெரியாது. பெத்தவங்களுக்கும் கூடப் பொறந்தவங்களுக்கும்.

''எதை வைத்து நீங்க பழி போட்டீங்க. உங்கள் மேல் அத்தனை நம்பிக்கை அவர்களுக்கு என்று தானே... அதை நீங்க வீணாக்கலாமா...? அதுக்கும் அவருக்கும் சம்பந்தமே இல்லாதபோது எப்படி நம்புவார்கள் என்று சொன்னீங்க.

''நீங்கள் சொன்னதை அவர்கள் நம்பவில்லையென் றாலும் அவருக்கு எத்தனை அவமானமாக இருந்திருக்கும். அவர்கள் வீட்டில் அவருக்கு என்ன மரியாதை இருக்கும். அவரை அவர்கள் சந்தேகக் கண்ணோட்டத்தில் தானே பார்ப்பார்கள். அவர் மனம் எத்தனை வேதனைப்பட்டிருக் கும். அவர்கள் நீ எடுத்தியா என்று கேட்கும்போது எத் தனை கூனிக் குறுகிப் போயிருப்பார்.''

''நீ என்ன அவனுக்கு வக்காலத்தா. தாலி கட்டிவிட் டுட்டுப் போனதுக்கே இத்தனை சப்போர்ட்டா. இன்னும் உன் கூடக் குடும்பம் நடத்தியிருந்தா நீயே என்னைப்



போலீசில் பிடித்துக் கொடுத்துருப்பே. உன்னை அவன் இப்படி விட்டுட்டுப் போயும் உன் திமிர் அடங்கலையே... அதுக்குத்தான் இப்படி இருக்கே வாழாவெட்டியா...'' சம்பட்டியால் அடித்ததுபோல் கேட்டார்.

அவளுக்கு நெஞ்சு வலித்தாலும் புரிய வைத்துவிட வேண்டும் என்ற நோக்கில் ''தன் வீட்டிலேயே தன்னைத் திருடினியா...? என்று கேட்டால் எப்படி இருக்கும். திருடின உங்களுக்கே இத்தனைக் கோபம் வரும்போது, அவர் மனம் எத்தனை பாதிக்கப்பட்டிருந்தால் இத்தனை அழகாகத் திட்டம் போட்டு என்னை மணந்திருப்பார். இதற்கெல்லாம் காரணம் நீங்கள்தான் அப்பா. இத்தனை யும் செய்துவிட்டு, இப்போ நல்லவங்க மாதிரி பேசு றீங்க. நீங்க செய்த தப்பை என்னால் சரிப்படுத்த முடி யாது என்றாலும், ஒரு சிறு துளியாவது பிராயச்சித்தம் செய்கிறேன். மறுபடியும் நீங்கள் செய்த தப்பை நான் செய்ய விரும்பவில்லை.''

''உன் அப்பா மானம் போனால்கூடப் பரவாயில்லை. நீ அந்த வீட்டு மானம் போகக்கூடாது என்று நினைக் கிறே... அப்படித்தானே. நீ போனால் இந்த வீட்டுக்கு மறு படியும் வரக்கூடாது. நீ அப்படியே போய்விடு'' என்றார் கோபமாக.

அவள் கண் நிறைந்துவிட்டது. 'அவர்களும் அங்கு வைத்துக் கொள்ள மாட்டார்கள். இங்கும் நான் வரக் கூடாது என்கிறார். நான் என்ன தப்பு செய்தேன். இந்தத் தண்டனையை அனுபவிக்க ஏன் தான் நான் பொண் ணாப் பிறந்தேனோ...' என்று நினைத்தாள்.

கணேசன் கத்திக்கொண்டே இருந்தார். ''நீயெல்லாம் ஒரு பொண்ணா. நீ உன் அம்மா மாதிரி தானே இருப்பே.

உன்னை வளர்த்ததுக்கு நான் அன்றே உன்னைக் கொன்னுருக்கணும். உனக்கு தாய்க்குத் தாயா... தந்தையா இருந்து வளர்த்ததுக்கு, நீ கொடுக்கும் மரியாதை இதுதானா. போய்ப் பார் ஊர் உலகத்தில் எத்தனை பெண்கள் பிறந்த வீட்டுக்காகப் பெத்தவனுக்காகப் பேசுறாங்க. உன் கண் முன்னாடியே அத்தனையும் நடந்து நீ என்னை மதிக்காமல் அவன் வீட்டிற்கே போறேன் என்கிறே...

''நீ என்னையே குறை சொல்றே... உன் அம்மா மாதிரித் தானே என்னை அவமானப்படுத்துவே. அவள் படுத்தின அவமானமே... இன்னும் என் நெஞ்சில் இரத்தமா வடியுது. அதில் நீ இன்னும் திராவகத்தை ஊற்று. நான் எரிந்து சாம்பலாகிப்போறேன்.

''நீ என்ன திட்டத்தோட அங்கு போறே என்று எனக்குத் தெரியும். எப்படியாவது அவனைத் தன் அழகைக் காட்டி மயக்கி விடலாம். அவனை தன் கைக்குள் போட்டுக் கொள்ளலாம். அவன் கூட எப்படியாவது வாழ்ந்து விடணும் உனக்கு அப்படித்தானே... என்கூட இருக்க உனக்கு விருப்பமில்லை. எந்தப் பெண்ணாவது இப்படிப் பேசுவாளா...? இந்த ஊரே என்னைக் காறித் துப்பும்படி செய்துவிட்டான். என் முகத்திற்கு நேரே... எப்படியெல்லாம் பேசினாங்க. அது உனக்கு மறக்கலையா...? நினைப்பிருந்தால் நீ போவியா...? அவன் இறந்து விட்டால் என்னுடன் தானே நீ இருக்கணும். அது மாதிரி நினைத்துக்கொள்'' என்றார் ஆவேசமாக.

''என்ன செய்வது எத்தனை பெண்கள் இளம் விதவையாக இருக்காங்க. அவங்கள்லாம் இப்படி உடம்பு சுகத்துக்கு ஆசைப்பட்டாள் முடியுமா... நீயும் அந்த மாதிரி



இருக்கப் பழகிக்கொள். அவன் இறந்து விட்டான். இனி அவன் நமக்கில்லை என்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்.

''இல்லை உடம்பு சுகம்தான் முக்கியம் என்றால் நான் இன்னொரு மாப்பிள்ளை பார்க்கிறேன். அவனைக் கல்யாணம் செய்து கொள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை'' என்றார்.

'ஒரு மாப்பிள்ளை பார்த்த லட்சணமே இப்படி இருக்கு. இதில் இன்னொன்றா. அவன் சொன்னது போலத்தானே இவரும் பேசுகிறார். அவன் எந்தப் பொய்யும் பேசவில்லை போல் இருக்கு. இவரைப் பற்றி நன்றாகப் புரிந்துதான் பேசியிருக்கிறான்.' மனதில்தான் நினைக்க முடிந்தது.

அவள் தன் இரண்டு காதுகளையும் இறுகப் பொத்திக் கொண்டாள். 'ஒரு அப்பா வாயில் இருந்து வரும் வார்த்தைகளா...? இப்படிக் குடித்துவிட்டு வந்து தாறுமாறாகப் பேசும் இவரிடம் என்ன சொல்லிப் புரிய வைக்க முடியும்.

'பெற்ற பெண்ணை இரண்டு வருடத்திற்குப் பிறகு வந்து கூப்பிடுறாங்க. அனுப்பி வைப்போம். இப்படியாவது அவள் போனால் ஏற்றுக் கொள்ள மாட்டாங்களா...? இப்படியே நாம் வைத்திருக்க முடியுமா... நமக்குப் பிறகு இவளுக்கு யார் துணை? வந்தவருடன் அனுப்பி வைப்போம். என் பொண்ணை இப்படியே விட்டு விடாதீர்கள். எப்படியாவது வாழவைங்க என்று கெஞ்ச வேண்டாம். ஒரு சொல் ஒரு வார்த்தை. வந்தவரை வா என்று சொல்ல வேண்டாமா...?

'தப்பும் செய்துவிட்டு பெண்ணையும் கொடுத்து விட்டு, இத்தனை வீம்பு தேவையா...? அவனவன்

பெண்ணைக் கொடுத்த வீட்டில், கையில் காலில் விழுந்து என் பெண்ணை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வெட்கத்தை விட்டு, மானத்தை விட்டு, எத்தனை பெரிய மனிதனாக இருந்தாலும் தன் பெண்ணின் சந்தோஷத்திற்காக வாழ்வுக்காக இறங்கி வருகிறான்.

## 2

'இவர் பிடிவாதமாக என் பெண் என்னோடு இருக்கட்டும் என்கிறார். அவரும் என்ன செய்வார். அன்று தான் எத்தனை அதிர்ச்சி. இப்படி நடக்கும் ஏமாற்றுவான் என்று இவர் கனவிலும் நினைக்கவில்லை.' அவன் அன்று பேசிய பேச்சுக்கள் மனதை ரம்பமாக அறுத்தது. கண்களை இறுக மூடிக் கொண்டாள். மூடிய விழிகளில் நீர் வழிந்தது.

'இவர் ஏதோ தப்பு செய்து விட்டார். அதற்காக இவன் இப்ப பழிவாங்கலாமா...? அப்பா சொல்வது போல் நான் போகாமல் இருக்கணும். அது என்னால் முடியவில்லையே... மனம் மாமனார் வந்ததில் இருந்து குரங்காட்டம் போடுகிறதே. அவர் நல்லாயிருக்காரா என்று கேட்க மனம் துடியாய்த் துடித்தது. ஆனால் வாய் வரவில்லை.

'எந்த உரிமையில் நான் கேட்க முடியும். கிட்டத்தட்ட இரண்டு குடும்பமும் மறந்தே விட்டிருந்த பிரச்சனை. இனி அவர்கள் வரமாட்டார்கள். தன்னை மறந்து விட்டார்கள். அவர்களுக்கும் எனக்கும் இனி எந்தத் தொடர்பும் இல்லை என்று முடிவான நேரத்தில் இன்று இவர் வந்திருக்கிறார்.'



இவளுக்கும் மனதில் எத்தனையோ தயக்கம். இல்லையென்று சொல்ல முடியாது. இத்தனை வருடம் இல்லாத அக்கறை இப்போ என்ன என்ற கேள்வி மனதில் எழுந்தது. அதை இவள் கேட்க முடியுமா...? அவர் பொதுவாக "என் சின்ன மகனுக்குக் கல்யாணம் வைத்திருக்கேன். அதனால் கல்யாணத்திற்கு விசுதாவைக் கூப்பிட வந்தேன். நீ சீக்கிரம் புறப்படும்மா" என்றார்.

இவள் 'கார்த்திக் இந்நேரம் வேறு கல்யாணம் கூட பண்ணியிருப்பான் என்று நினைத்திருந்தாள். இப்போ கல்யாணத்திற்கு வந்து கூப்பிடவும் கல்யாணம் ஆகவில்லை. அதனால்தான் மருமகள் என்று மற்றவர்களிடம் காட்ட கூட்டிப் போகிறார். அன்றே சொன்னானே... என் வாழ்வு ஏன் வீணாப் போகப் போகுது என்று. நான் இன்னொரு பெண்ணை மணந்து கொள்வேன் என்று. ஏன் மணக்கவில்லை. என்னையே நினைத்துக் கொண்டிருப்பானோ....' மனதில் ஒரு ஓரத்தில் சின்ன ஒரு துளி நப்பாசை இருந்தது.

'அந்த ஒரு துளி இருந்தால் அவன் வந்திருக்கணுமே கூப்பிட ஏன் வரவில்லை. நான் வரமாட்டேன் என்று சொல்வேன் என்று நினைத்துத்தான் தன் அப்பாவை அனுப்பி வைத்தாரா...' இதெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது.

'அப்பாவின் ஆதங்கம் புரிந்தது. அவரையும் ஒரு வார்த்தைக் கூப்பிடலாம். அவர் கூப்பிட்டாலும் இவர் வரமுடியாது. வந்தாலும் அந்த வீட்டிற்குள் நுழைய முடியாது. மரியாதை இருக்காது. ஒரு திருடனைப் பார்க்கும் பார்வையே... அவரை எரித்து விடும்.

மற்றவர்கள் தன்னைச் சாதாரணமாப் பார்த்தாலும், தன்னைச் சந்தேகக் கண்ணோடுதான் பார்க்கிறார்களோ...

என்ற ஐயம் தோன்றும். அங்கு வருபவர்கள் பாதிப்பேர் அப்பாவுக்குத் தெரிந்தவர்களாகத்தான் இருக்கணும். இவர் எந்த முகத்தைக் கொண்டு வரமுடியும். அவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும் அவனே மறுபடியும் அவமானப்படுத்த மாட்டான் என்று என்ன நிச்சயம்.

மண்டபத்துக்குள்ளேயே வராதே என்றால் இதைவிட ஒரு அவமானம் உண்டா. இது தெரிய வேண்டாமா அப்பாவிற்கு. நீ போய்ட்டு வாம்மா என்று சொல்ல வேண்டாமா. என் மனமே ஒரு நிலையில் இல்லை. அங்கே எனக்கே என்ன வரவேற்பு இருக்குமோ. அவன் என்கூடப் பேசுவானோ... மாட்டானோ...' இவளுக்கு மனதில் பயமாகத்தான் இருந்தது.

'இவர் வந்து கூப்பிடுவது வீட்டிற்குத் தெரியுமோ தெரியாதோ தெரியாமல் வந்து எப்படிக் கூட்டிப் போக முடியும். மகனுக்குத் தெரிந்தால் நிச்சயம் என்னைக் கூட்டிப் போக வரவிட்டிருக்க மாட்டான். இவர் தெரியாமல் தான் வந்திருக்கணும்.

பிரச்சனை வந்தாலும் இவர் பார்த்துக் கொள்வார். இத்தனை பெரிய மனிதர் வந்து கூப்பிடுகிறார். நான் மறுக்க முடியுமா...? அதாவது என் நினைப்பு இன்னும் அவர்களுக்கு இருக்கத்தான் செய்கிறது. அவர்கள் கவுரவத்துக்காகக் கூப்பிட்டாலும், என்னையும் ஒரு மனுஷியாக நினைத்துக் கூப்பிடுகிறார்களே...' என்று ஆர்ப்பரிக்கும் மனதைச் சமாதானப்படுத்தினாள்.

இவளுக்கும் இஷ்டமில்லை. அப்ப.. ,ன்கூட வருவது. அங்கு எது நடந்தாலும் இனி அது அப்பாவைப் பாதிக்கக்கூடாது. அது என்னோடயே போகட்டும். இனி அவர் அவமானத்தைத் தாங்க மாட்டார். அவர் வயதிற்குக்கூட அன்று மதிப்பளிக்கவில்லை அவன்.



'எத்தனை கல்மனது இருக்க வேண்டும் அவனுக்கு. இப்படி அசிங்கப்படுத்த. ஒரு பொண்ணோட வாழ்வு பாழாப் போகப்போகுது என்று தெரிந்தும் இப்படிப் பண்ணிவிட்டானே. எத்தனை வெறி. புலியிடம் இருந்துகூடத் தப்பிப் பிழைத்து விடலாம் போலிருக்குது. இவனிடம் இருந்து தப்ப முடியாது போல் இருக்கே... உயிரை மட்டும் விட்டுவிட்டு உடம்பை அக்கு வேறா ஆணி வேறா பிரித்துப் போட்டது போல் மரணவலி அல்லவா அவன் அடித்த அடி. இனி எழவே முடியாதபடி.

தப்பைச் சகித்துக் கொள்ள மாட்டான் போல் இருக்கு. விட்டுக் கொடுக்கவும் மாட்டான் போல் இருக்கு. இப்படிப் பட்டவன்கூட எப்படிக் குடும்பம் நடத்த முடியும். விட்டுக் கொடுப்பதுதானே வாழ்க்கை. இவனுக்கு அது தெரியலியே... இப்படிப் பழி வாங்கினால் வாழ்க்கை நரகமாகி விடாதா...? மனிதர்கள் யார்தான் தப்பு பண்ண வில்லை. என் அப்பா தப்பு பண்ணினார் என்று இவன் தப்பு பண்ணவில்லையா... அப்போ இது தப்பில்லையா... இவன் செய்வது மட்டும் சரியா. தப்பே பண்ணாத நான் பாதிக்கலாமா... அதான் கேட்டானே... உன் அப்பா பண்ணின தப்புக்கு நீ தண்டனையை அனுபவி என்று. இப்போ இவன் பண்ணின தப்புக்கும் சேர்த்துத்தானே நான் தண்டனையை அனுபவிக்கிறேன். இந்த நியாய வாதிக்கு இது தெரியலையா...?

இப்போ நான் அவனைப் பழிவாங்க முடியுமா...? இப்படி இது தொடர்ந்தால் இந்த உலகமே சுடுகாடாய் ஆகிவிடும். இன்னும் மனிதர்களும், மனிதத் தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் இருப்பதால்தான் இந்த பூமி நிற்காமல் சுழல்கிறது. மழையும் பெய்கிறது.

இவன் என் அப்பாவுக்கும், எனக்கும் தண்டனை கொடுப்பேன் என்ற இவனுக்கும் சேர்த்து அல்லவா தண்டனையை கொடுத்துக் கொண்டிருக்கான். இப்போ யார் நல்லவன் என்று சொல்கிறார்கள். அவர் தப்புப் பண்ணினார் நீ அதற்குத் தகுந்தாற்போல் தப்பு பண்ணி ஈடுகட்டி விட்டாய். அவர் பெண்ணின் வாழ்வைக் கறுக்கி விட்டாய். இனிமே எங்கள் எல்லாருக்கும் சந்தோசம் என்று அன்று யாரும் ஆனந்தக் கூத்தாடவில்லையே. நடந்தது நடந்து விட்டது. இனி அவர் பெண்ணைத் தண்டிக்க வேண்டாம். கூட்டி வாடா என்று தானே எல்லோரும் சொன்னார்கள். இந்த அழுத்தக்காரன்தான் கேட்கவில்லை.

இவன் மட்டும் வாழ்வைத் தொலைக்கவில்லையா...? என் வாழ்வு மட்டுமா கெட்டது. இவன் இன்னொரு கல்யாணமும் பண்ணாமல், என்னையும் கூட்டிப் போய் குடும்ப நடத்தாமல் இவன் இளமையே வீணாக்கு கிறானே... இந்த ஆத்திரமும், கோபமும் எத்தனை பேர் வாழ்வை, நிம்மதியை அழித்து விட்டன.

இத்தனைத் திட்டம் போட்டுப் பழி வாங்கினானே... என் அப்பா எடுத்த பணம் திரும்ப வந்து விட்டதா... இல்லை இவன் மேல் போட்ட பழி இல்லையென்று ஆகிவிட்டதா...? ஒன்றுமில்லை. இவன் நிரூபித்து விட்டான். நான் நல்லவன் என்று. அதற்கு என் வாழ்வை, நிம்மதியை, சந்தோசத்தை விலையாக எடுத்துக் கொண்டான். இதுவும் ஒரு வகையான திருட்டுத்தானே... இதை ஏன் அவன் உணரவில்லை.

இதற்கு என்ன உரிமையிருக்கு இவனுக்கு. எந்த உரிமையில் இப்படி என் கழுத்தில் தாலிகட்டி இப்படி அவமானப்படுத்தினான். நான் அவமானப்பட்டேன். அதனால்தான் இப்படிப் பண்ணினேன் என்கிறானே... இப்போ நான் பட்டிருக்கும் அவமானத்திற்கு இவன் என்ன பதில் சொல்வான். நீ என்னைப் பழி வாங்கினே என்று நான் இவனைப் பழி வாங்க முடியுமா...? எனக்குத்தான் அந்த மாதிரி எண்ணம் வருமா...? என்னதான் இருந்தாலும் எனக்குத் தாலிகட்டியவர் ஆயிற்றே. இனி நான் வேறு யாரையும் மனதாலும் நினைக்க முடியுமா...?



இனி நீ எனக்குத் தேவையில்லை. நான் வேறொரு பொண்ணைப் பார்த்துக் கொள்வேன் என்றான் அன்று அத்தனை பேர் முன்னாடியும். நான் அந்த மாதிரி தான் சொல்ல முடியுமா... ஏன் நினைக்கத்தான் முடியுமா... இந்தப் பாழும் மனசு அவன் இப்படி அசிங்கப்படுத்தியும். அவனிடம் தானே ஓடுகிறது நினைப்பு, அவனை நினைத்தாலே... ஒரு இன்பச் சிலிர்ப்பு உடம்பில் சிலிர்க்கிறதே... மனதில் தாமரை மொட்டு மடல் விரித்தாற் போல் ஒவ்வொரு இதழாய் விரியும்போது ஏற்படும் சிலிர்ப்பு உள்ளத்தில் ஏற்படுகிறதே... இது எதனால்.

என் அப்பா செய்த தப்பு மாபெரும் குற்றந்தான். ஆனா அவன் செய்தது மன்னிக்க முடியாத செயல் இல்லையா... நடு ரோட்டில் நிர்வாணமாக நிறக வைத்து அடித்ததுபோல் அடித்து விட்டானே... அன்று அந்த மரண வலியைத் தாங்க முடியாம அந்த சின்னஞ்சிறு இதயம் வெடித்துச் சிதறி விடாதா... என்று இருந்ததே... இந்தத் தவிப்பிற்கும் முழு காரணம் அவன்தானே... இதையெல்லாம் அவனிடம் கேட்பது யார்...? கேட்கத் தான் முடியுமா...? அவன் பிடிவாதக்காரன் சின்ன வய்தில் இருந்தே என்கிறார்கள் அவன் வீட்டாரே... நான் இப்போ போய் பேச முடியுமா...?'

என்ன தான் அவனாலே... இவள் இதயம் நைந்தாலும் அவள் அப்பா சொன்ன ஒரு வார்த்தையை மறக்க முடியாமல் துடித்தாள். தன் துடிப்பை வெளிக் காட்ட முடியாமலும், மாமனார் முன் அழுக முடியாமலும் தன்னைக் கட்டுப்படுத்த அவள் திணறிய திணறல், எங்கே தன்னையும் மீறி அழுகை சத்தம் வெடித்துச் சிதறிவிடுமோ என்று பல்லை இறுகக் கடித்துக் கொண்டாள்.

'தன் கணவனை இறந்து விட்டான் என்று நினைத்துக் கொள் என்கிறாரே... இவர் எல்லாம் என்னைப் பெத்தவரா... இந்த ஆத்திரமும், திமிரும் தானே என் வாழ்க்கையைப் பாழாக்கின. இன்னும் அடங்கவில்லையே.. அவன் இறந்து விட்டால் இந்த உலகில் எனக்கென்ன வேலை இருக்கு. மகள் வாழாவிட்டாலும் பூவும், பொட்டுமாக இருக்க வேண்டாமா... என்னை வா என்று கூப்பிட வேண்டாம். அவன் நன்றாக இருந்தாலே போதும்.

அப்பா இந்த வார்த்தை சொன்னதில் இருந்து எப்போ அவனைப் பார்ப்போம் என்றிருந்தது.' இவள் கனவிலும் நினையாதது. மாமனார் இப்படி வந்து கூப்பிடுவார் என்று. 'தன் வாழ்வு இவ்வளவுதான் என்று நினைத்திருந்தாள். எப்படி வந்து கூப்பிடுவார்கள். அவன் சம்மதிக்கணுமே... அவன் சம்மதம் இல்லாமல் அந்த வீட்டிற்குப் போக முடியுமா...?

அப்பா பேச்சை மறுத்துப் போகவும் பயமாக இருந்தது. மாமனார் வந்து கூப்பிட்டும் போகாமல் இருக்க பயமாக இருந்தது. பெரியவரே வீடு தேடி வந்து கூப்பிடும் போது, வீட்டில் உள்ளவர்களுக்குத் தெரியாமலா இருக்கும். நான் வரப்போவது. ஒரு வேளை எல்லோரும் பேசி முடித்து இங்கேயே இருக்கட்டும் என்று கூட்டிப் போகிறாரோ... அது மாதிரியும் தெரியவில்லை.



என்னை அங்கேயே இருக்கச் சொல்வதென்றால் ஒரு வாரத்திற்குத் தேவையான துணிமணிகளை மட்டும் எடுத்து வைத்துக் கொள்ளம்மா என்று சொல்லியிருக்க மாட்டாரே... என் அப்பாவிடமும் சொல்லியிருப்பாரே... 'உங்கள் மகளை நான் என் வீட்டிற்கு மருமகளாகக் கூட்டிப் போறேன் என்று அதுவும் சொல்லவில்லையே... கல்யாணம் முடிந்ததும் என்னை அனுப்பி விடுவார்கள். அதனால் தான் எதுவுமே சொல்லவில்லை இவர். என்னை அங்கு வைத்துக் கொள்ள மாட்டார்களா...?' அவள் இதயம் ஊமையாய் அழுதது.

இந்த ஊர் மக்கள் அவளைப் பேசிய பேச்சு. பண்ணின ஏளனம். 'வாழாவெட்டி வர்றா.. ஒதுங்கிப்போ...' என்ற மட்டமான வார்த்தைகள். ஒரு பாவமும் அறியாமல் இத்தனையும் சுமந்தாள்.

இவள் அப்பாவிற்கு கடன் கொடுத்தவர்கள் எல்லாம். 'நானும் உனக்குத் தாலி கட்டட்டுமா...' என்று தவறான முறையில் பேசினர்.

இரண்டு வருடத்திற்குப் பிறகும் இன்னும் சிலர் இவள் இதயத்தைக் கீறி அதில் வடியும் இரத்தத்தை ரசித்தனர். இரண்டு வருடம் ஆகியும் இரத்தம் வடிந்தது. எந்த வேதனையாயிருந்தாலும் காலம் அதை மாற்றும் என்பார்கள். இவளுக்குக் காலம் அதிகமாகத்தான் வேதனையைத் தந்ததே தவிர குறையவில்லை. இப்பொழுது எல்லாம் மனம் வலித்தாலும் முதலில் மாதிரி வீட்டில் நடுங்குவதில்லை. ஒரு பிரைமரி ஸ்கூலில் டீச்சராக வேலை பார்க்கிறாள். அந்த மழலையின் சிரிப்பில், பேச்சில் தன்னை மறந்து கவலைகளை மறந்தாள் சிலமணி

வீட்டிற்கு வந்ததும் மனம் செக்கு மாடாய் சுழலத் தொடங்கி விடும்.

அவள் அப்பா எந்நேரமும் குடித்துவிட்டு வீட்டில் படுத்துக் கிடந்தார். அவர் உடம்பு பாதியாய் இளைத்து விட்டது. தான் செல்லமாக வளர்த்த மகள் வாழ்வு இப்படிச் சீரழிந்து விட்டதே... என்று மனதுக்குள் குமைந்தார். மகளைப் பார்க்கும் போதெல்லாம் அவர் மனம் குத்திக் குதறிற்று. என்னால்தான் என் மகள் வாழ்வு பறிபோயிற்று.

அவர் வீட்டை விட்டு எங்கும் செல்வதில்லை. வெளியில் போனால் தான் தன் மகளை ஒத்த வயதினர் கணவனுடனும், குழந்தையுடனும் ஜோடியாகச் சென்றால் இவர் மனம் சொல்லிலடங்காய் வேதனைப்படும். என் பெண்ணும் இப்படி இருந்தால் இந்த இரண்டு வருடத்தில் ஒரு குழந்தை பிறந்திருக்கும். அது இப்போ வெறும் கனவாகப் போய்விட்டது.

தன் அருமை மகளை எப்படி வளர்த்தார். அவரின் கெட்ட பழக்கம் இப்படி அதள பாதாளத்தில் தள்ளிவிட்டது. மகளின் அழகு முகம் இப்போ எல்லாம் ஒரு சோகமே உருவாக இருந்தது. எனக்காக என் பெண் சிரித்தாலும் மனதில் குமைகிறாள் என்று தெரிந்தது கணேசனுக்கு.

அவரால் எதுவும் செய்ய முடியாத நிலமை. தன் இயலாமையை நினைத்துத் தன்னைத் தானே வருத்திக் கொண்டார். விசுதா அப்பாவுக்கு அத்தனை பணிவிடை செய்தாள். தன் அப்பாவிற்காக முகத்தில் வாடாத புன்னகையை பூசிக் கொண்டாள். 'நான் சந்தோசமாகத் தான் இருக்கேன் அப்பா, நீங்கள் கவலைப்பட வேண்டாம்' என்பது போல் நடந்து கொண்டாள்.

இன்று அவள் மாமனார் ஜனார்த்தனன் வந்து கூப்பிடும் வரை. 'அப்போ இதுவரை நீ இருந்ததெல்லாம்



வேசமா... நீ அவனைத்தான் நினைத்திருந்தாயா...? உன் அப்பாவைக் கேவலப்படுத்தியவனை நீ பார்க்கப் போகிறாயா...?' என்று கோபப்பட்டார்.

இவர் அவன் செய்ததைத்தான் சொல்கிறாரே தவிர - நான் இந்தத் தப்பைச் செய்யவில்லை என்று இதுவரை இவளிடம் இவர் சொல்லவில்லை.

அவளுக்கும் கோபம் வந்தது. 'இத்தனை வருடம் வேலை பார்த்த அவர்களிடம் இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா...? அவர்கள் சும்மா விடுவார்களா...? அதுவும் அவர் மகன் மீதே பழியைப் போட்டால் எப்படி ஏற்றுக் கொள்வார்கள். தன் பிள்ளையைவிட உங்கள் மீது நம்பிக்கை இருக்குமா...?' என்று மனதில் திட்டினாள்.

அவளுக்கும் ஆசை இருக்காதா... தன் கணவனைப் பார்க்க வேண்டும் என்று. 'இரண்டு வருடத்திற்குப் பிறகுமா... இன்னும் அதே அளவு கோபம், பிடிவாதம் இருக்கும். இத்தனை வருடத்தில் கோபம் குறைந்திருக்காதா...? சிறு துளியாவது தன்னை ஏற்றுக் கொள்ள மாட்டானா...? ஒரு வார்த்தை வா விசுதா.. என்று அழைக்க மாட்டானா...?' அவள் மனதில் ஆயிரம் ஆசை, கற்பனைகள் வந்து போயின.

'அவன் பேசினால் நான் என்ன பதில் சொல்வது. ஐயோ... எனக்கு இப்பவே படபடப்பாக இருக்கே. சாதாரணமான கணவன் மனைவி என்றால் இப்படி இருக்காதோ... ஒரு எதிர்பார்ப்பு, ஏக்கம் இருக்குமோ... எனக்கு பயம்தானே அதிகமாக இருக்கு. அவனை நினைத்தால் ஒரு பரவசமோ... கிளுகிளுப்போ... வரவில்லை. பயம் உடம்பெல்லாம் நடுங்கியது.

நான் அப்பாவைப் பத்தி நினைப்பதா... இல்லை அவனைப் பத்தி நினைப்பதா...? வீட்டில் உள்ள

மற்றவர்களைப் பத்தி நினைப்பதா...?' எதுவும் புரியாமல் தலை சுற்றியது அவளுக்கு.

'அப்பா சொல்வது போல் இன்று வந்த மாமனார். இதுவரை ஏன் வரவில்லை. இவர் சொன்னால் மகன் கேட்க மாட்டானா... எல்லாம் தெரிந்து தானே இவரும் என் கல்யாணத்திற்கு சம்மதித்திருப்பார். இப்போ ஏன் மௌனமாக இருக்கிறார்.' அவள் மனதில் கட்டுப்பாடற்ற கேள்விகள் எல்லாம் ஓடின.

அவளால் ஒன்றும் முடியாது. இவர்கள் சொல்வதைக் கேட்பதைத் தவிர. வா என்றால் போக வேண்டும். வராதே என்றால் போகாமல் இருக்க வேண்டும். இவளுக்குனு எந்த சுய விருப்பு, வெறுப்பு கிடையாது. இவளை யாரும் சட்டை பண்ணவும் இல்லை.

மனதில் ஓரத்தில் கணவனைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆசை இருந்தது. அவள் அப்பா கேட்டது போல் இவளுக்கும் அவன் முகம் கலங்கலாகத்தான் தெரிந்தது.

## 3

ஒரு போட்டோகூட இவளிடம் இல்லை. அவனைப் பற்றி இவள் வீட்டில் அப்பாவிடம் பேச முடியாது. பேசினால் அவ்வளவு தான். அவனைச் சரமாரியாக வசை மழை பொழியத் தொடங்கி விடுவார். அதைக் கேட்க சகிக்க முடியாமல் போய்விடும். அவனைத் திட்டும்போது இவளுக்குப் பொறுக்க முடியாது. பேசாதீங்கப்பா என்று சொன்னால் போதும். கூட கொஞ்சம் தொடங்கி விடுவார்.



அதனால் அவன் பேச்சை அவர் பேசுவதையே அவள் தவிர்த்து விடுவாள். அப்பா சொல்வது போல் அவன் குரலை அத்தனை சுலபமாக மறக்க முடியாது. அதில் தான் எத்தனை கோபம். ஆவேசம், சீற்றம். இத்தனை கொடூரமான வார்த்தைகளை இவள் கேட்டதில்லை. எரிமலையைவிட ரௌத்திரமாக இருந்தான்.

ஒரு வழியாக இவள் கிளம்பி உள் அறையில் இருந்த அப்பாவிடம் ''போய்ட்டு வர்றேம்பா'' என்றாள்.

''போ... வராதே...'' என்றார்.

அவர் காலில் விழுந்தாள். ''அப்படிச் சொல்லாதீங்கப்பா... எனக்கு உங்களை விட்டா வேற யார் இருக்காங்க. என்னை மன்னித்து விடுங்கப்பா. உங்களை அவமானப்படுத்தவோ... நோகடிக்கவோ... நான் செல்லவில்லை. என் மாமனார் வந்து கூப்பிடும்போது என்னால் தவிர்க்க முடியலேப்பா... நான் போய்ட்டு வர்றேன்ப்பா'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.

இதை வெளியே நின்று அவள் மாமனார் கேட்டுக் கொண்டிருந்தார். அவருக்கும் மனது கஷ்டமாக இருந்தது. 'இந்தப் பெண்ணிற்குத் தான் எத்தனை மனக்கஷ்டம். தன் அப்பாவையும் விடவில்லை. என்னையும் விட்டுத்தர முடியவில்லை.'

இவள் காரில் ஏறி உட்கார்ந்ததும் டிரைவர் காரை எடுத்தான்.

அவள் அப்பா வெளியே வந்திருக்காரா என்று வீட்டையே திரும்பித் திரும்பிப் பார்த்தாள். வாசலில் அவள் அப்பா இல்லை. அவள் கண் கலங்கியது. இதை ஜனார்த்தனன் கவனித்தார்.

தன் அப்பாவைத் தனியே விட்டு வர்றோம் என்று இருந்தது. இவர் கூப்பிடவும் ஒரு வேகத்தில் கிளம்பி விட்டாள். இப்படியே வீம்பு, போட்டி போட்டுக் கொண் டிருந்தால் எப்பத்தான் இதுக்கு முடிவு வருவது. இவ ளுக்கு இதில் துளிகூட விருப்பமில்லை.

'இத்தனை நாள் கூப்பிடவில்லை. நாமும் போக வில்லை. இப்படி வீடு தேடி வந்து கூப்பிடும்போது போகா மல் இருப்பது முறையா... நான் அப்படித்தான் இருந்து என்னத்த சாதிக்கப் போறேன்.'

அப்போது ஜனார்த்தனன் செல் ஒலித்தது. அவர் எடுத்து ''ஹலோ கார்த்திக் சொல்லு'' என்றார்.

கார்த்திக். அந்தப் பெயரைக் கேட்டதுமே இவள் உடம்பு சிலிர்த்தது. தன் கணவன் தான் பேசுகிறான் என்று தெரிந்து கொண்டாள். 'ஒருவேளை அவன் போய் கூட்டி வரச் சொல்லியிருப்பானோ... தானே வர சங்கடப் பட்டுக் கொண்டு சண்டை போட்டு விட்டு வந்து விட் டோமே இப்போ எப்படிப் போய் கூப்பிடுவது என்று தயங்கியிருப்பான்.

இதுவும் சரிதானே. அவன் வந்து, இவள் அப்பா மறுபடியும் பேசி பிரச்சனை பெரிசாவதைவிட, இவன் வராமல் அவன் அப்பாவை அனுப்பியதும் நல்லதுதான். இன்று அவள் அப்பா பேசிய பேச்சுக்கு கார்த்திக்கா இருந்தா இந்நேரம் சண்டை வந்திருக்கும். இவர் அத்தனை யும் கேட்டுக் கொண்டு பேசாமல் இருந்தார்.

தன்னைப் பற்றித்தான் விசாரித்திருப்பான். வர்றாளா... இல்லையா என்று. கார்த்திக் நான் வந்துவிட்டேன் உன்னிடம். தன்னிடம் எதுவும் பேசுவானோ... மாமனார் தன் செல்லை 'கார்த்திக் பேசுறான். உன்னிடம் பேச வேண்டுமாம் என்று கொடுப்பாரா' என்று பார்த்தாள்.



அவர் பேசிவிட்டு செல்லை பாக்கெட்டில் வைத்தார். இந்த பேதைப் பெண்தான். எத்தனை கற்பனையில் ஒரு நிமிடத்தில் மூழ்கி விட்டாள்.

பெரியகுளத்தில் இருந்து திண்டுக்கல் வந்து விட்டனர். இரவு டிபனை அங்கு முடித்துக் கொண்டனர். கார் சென்னை நோக்கி விரைந்தது. இவளின் மனமோ பின் னோக்கிச் சென்றது.

அந்த வீட்டிற்கு எப்படிப் போக வேண்டியவள், மாலை யும், கழுத்துமாக. பெண்ணும், மாப்பிள்ளையும் சேர்ந்து போக வேண்டியது. இப்போ இவள் மாமனாருடன் தனி யாக அதுவும் இரண்டு வருடம் கழித்து.

தன் புகுந்த வீட்டிற்கு இப்பத்தான் போகிறாள். புதுப் பெண்ணிற்கு எத்தனையோ மனக்கலக்கம் இருக்கும். ஆனால் அங்கு கட்டியவனின் அன்பும், அரவணைப்பும் இருக்கும். அவனின் அன்பே அவளுக்கு நூறு யானை களின் பலம் தரும். ஆனால் இவளுக்கோ... கட்டியவனின் அன்போ, பாசமோ இல்லை. மாறாக தீராத வெறுப்பும், கோபமும். இவள் எப்படி அந்த வீட்டில் இருக்கப் போகி றாள். மனதில் ஓரத்தில் ஆசை இருந்தது. நிரந்தரமாகத் தன்னை வைத்துக் கொள்வார்களா...? இருக்கச் சொன் னால் இருந்து விடுவது என்றும்,

உடனே மனம் கலைந்தது. 'தன் அப்பா சாப்பாட்டிற்கு என்ன பண்ணுவார். தன்னை விட்டால் அவருக்கும் வேறு யாருமில்லை. அவரை விட்டு விட்டு தான் எப்படி அங்கிருப்பது. அப்பா இதற்குச் சம்மதிப்பாரா... இப்படி சுயநலமாகச் சிந்திக்கிறானே. என் அப்பா எனக்காகவே வாழ்ந்தவர். என் அம்மா கொடுக்காத பாசத்தையும், அன்பையும் சேர்த்துக் கொடுத்தவர். நிமிடத்தில் என்

அப்பாவை எப்படி மறந்தேன் .அவர் சொல்வது போல் அவனுக்காக என் மனம், உடம்பு எல்லாம் ஏங்குதா... என் மனம் அவனை விரும்புமா... இத்தனை அவன் பேசியும்.

ஆம் விரும்பியது அவனை அவள் மனது. தாலி கட்டியவனை மனது ஏற்றுக் கொள்வது அத்தனை ஒன்றும் கடினம் இல்லை. கோபம் எவ்வளவு நாளைக்குத்தான் இருக்க முடியும். நாள் செல்லச்... செல்ல... மாதங்கள் கரைய... வருடங்கள் ஓட... அதுவும் பிறை நிலவாகத் தேய்ந்து போனது.' என்று அவள் நினைத்தாள். அது தேயவில்லை என்பதை பிற்காலத்தில் உணர்ந்தாள். காலம் அவளை உணர வைத்தது.

அவள் மாமனார் அவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. இவளுக்கும் தயக்கமாக இருந்தது. மாமனார் என்றாலும் இவள் பேசியதில்லை, வீட்டில் உள்ளவர்களை விசாரிக்கலாம் என்றாலும் இவளுக்கு அவர்கள் முகம் நினைவில்லை. யாரை எப்படி விசாரிப்பது என்று பேசாமல் கண்ணை மூடி இருக்கையில் சாய்ந்தாள்.

நினைவுச் சுழலை சுழல விட்டாள். இவள் துள்ளித் திரிந்த காலம் அது. ஆம் அப்படித்தான் சொல்ல வேண்டும். இவள் படிப்பு முழுவதும் ஹாஸ்டலில் இருந்துதான் படித்தாள். இவள் அப்பா கணேசன் சென்னையில் ஜனார்த்தனன் கம்பெனியில் மேனேஜராக இருந்தார்.

அத்தனை நம்பிக்கையானவர். ஜனார்த்தனனும், அவர் மகன் ராம்மோகனும் ஆபீசை கவனித்துக் கொண்டனர்.

இளைய மகன் கார்த்திக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். ஜனார்த்தனனுக்கு மூன்று பையன்கள். ஒரு பெண். பெரியவன் ராம்மோகனுக்குக் கல்யாணம் ஆகி விட்டது.



சின்னவன் கார்த்திக் கொஞ்சம் பொறுப்பில்லாதவன். அவ்வப்போது வந்து ஆபீசில் மேனேஜரிடம் பணத்தை வாங்கிச் செல்வான். ஆனால் நல்ல புத்திசாலி, திறமையானவன்.

இதைப் பயன்படுத்திக் கொண்டார் கணேசன். தப்பே செய்யாதவர் தப்பு செய்ய ஆரம்பித்தார். அவனிடம் கொடுத்த தொகையைவிட அதிகமாகக் கொடுத்ததாகக் கணக்கெழுதினார்.

கணேசனுக்கு ஒரு கெட்டப் பழக்கம். குதிரை வால் மீது பணம் கட்டுவது. இதில் இருந்து எடுத்து அவர் குதிரை மீது கட்டினார். இது வெளியே தெரியாமல் இருந்தது.

இது எவ்வளவு நாளைக்குத்தான் தெரியாமல் இருக்கும். தப்பை எத்தனை நாள் திரை போட்டு மறைக்க முடியும். சூரியனைக் கண்ட பனி போல் அந்தத் திரையும் விலகியது. பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பது போல மாட்டிக் கொண்டார். பெரிய தொகையாக இரண்டு லட்சத்தைக் காணவில்லை.

ஆபீசில் கணக்குகள் தோண்டப்பட்டன. எப்படி பணம் குறையும் என்று கேட்டார் ஜனார்த்தனன்.

கணேசன் அதற்கு ''நான் இந்த சூட்கேசில்தான் பணம் வைத்திருந்தேன். நான் வெளியே போய் விட்டேன். நான் வரும்போது கார்த்திக் தான் இங்கிருந்து வெளியே போனார். அவர்தான் எடுத்திருக்கணும்'' என்றார் திடமாக.

ஜனார்த்தனன் அதிர்ந்தார்.. ''கார்த்திக்கா... அவன் எதுக்கு பண...த்தை. அதுவும் இரண்டு லட்சத்தை எடுக்கப் போறான்'' என்றார் திகைப்பாக.

கணேசன் தைரியமாக 'கார்த்திக்கை சொன்னால் அவனால் எதுவும் பேச முடியாது. தன்னிடம் எவ்வளவு

பணம் வாங்கியிருக்கான். நாம் இப்படி இதையும் அவன் தான் எடுத்திருப்பான் என்று சொன்னால் அவன் பதில் சொல்ல முடியாது. ஏன்னா... அவன் என்னிடம் பணம் வாங்கியதை அவன் அப்பாவிடம் சொல்லி விடுவேன் என்ற பயம் இருக்கும். எப்படியும் என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டான்' என்ற தைரியத்தில் தான் கணேசன் அப்படித் திட்டவட்டமாகச் சொன்னார்.

ஆனால் கணேசன் தப்புப் பண்ணி விட்டார். கார்த்திக் தன் அப்பாவிடம் கேட்டுத்தான் வாங்கிச் சென்றான் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. இது தெரியாமல் தான் தப்பிக்க கார்த்திக்கின் மேல் பழியைப் போட்டார். பின்னால் நடக்கப் போகும் விபரீதத்தைப் பற்றித் தெரியாமல் தான் இன்று சொல்லும் பொய் தன் அழகு மகளின் வாழ்வை தீக்கிரையாக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. இதெல்லாம் தெரிந்தால் மனிதன் ஏன் தப்பு பண்ணுகிறான்.

## 4

இதை ராம்மோகனோ... ஜனார்த்தனனோ நம்பவில்லை. கணேசன் தன்னிடம் 'கார்த்திக் உங்களுக்குத் தெரியாமல் பணம் என்னிடம் வாங்கினார். இது அப்பாவுக்குத் தெரிய வேண்டாம் என்றும் சொன்னார். நானும் சொல்லவில்லை. எதற்கு உங்கள் வீட்டில் என்னால் பிரச்சனை என்று. இந்தப் பணத்தையும் அவர்தான் எடுத்திருக்கணும். பணம் வேறு எங்கும் போகவில்லை. அவர் தப்பான வழியில் செல்கிறார் என்று நினைக்கிறேன்' என்றார் புத்தி சொல்வது போல்.



ஜனார்த்தனன் முகம் சுளித்தார்.

கணேசன் 'அவர் மகன் மீது பழி போட்டால் அதை மறைத்து விடுவார். தன் மீது அவருக்கு சந்தேகம் வராது. ஏன்னா இத்தனை வருடம் உண்மையான ஊழியனாக இருந்திருக்கேன்' என்று நினைத்தார்.

ஜனார்த்தனன் எதுவும் பேசவில்லை போய்விட்டார். 'கார்த்திக் இவ்வளவு பணம் வாங்கியிருக்க மாட்டான். எதற்கு அவனுக்கு இவ்வளவு பெரிய தொகை. தன்னிடம் கேட்காமல் இது வரை பணம் வாங்கியதில்லை.

ஆனால் கணேசனும் நம்பிக்கைக்குரியவர்தான். இது வரை எந்தத் தப்பும் நடந்ததில்லை. ஆனால் அவர் பேச்சில் ஏதோ முரண்பாடு தெரிகிறது. குறிப்பாக கார்த்திக்கை மட்டும் ஏன் சொல்கிறார். பணம் பெட்டியில் வைத்திருந்தேன் காணவில்லை என்றாலாவது ஆபீசில் எத்தனையோ பேர். பிறரை சந்தேகப்படலாம். இதில் சந்தேகப்படுவதற்கே வழியில்லை. பணப்பொறுப்பு அத்தனையும் கணேசனிடம். இதில் வேறு யாரும் தலையிடுவதற்கில்லை. ஏன் கார்த்திக் பெயரை இத்தனை அழுத்தமா... என் மனசில் படியும்படி சொல்கிறார்.

கார்த்திக் இவ்வளவு பணத்தை அப்பாவிடம் கேட்டா தரமாட்டார். அதனால் நாம் எடுத்துக் கொள்வோம். பிறகு கேட்டால் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்திருப்பானோ... இல்லை சொல்லலாம் என்று அவசரத்தில் எடுத்துவிட்டுச் சொல்ல மறந்து விட்டானோ...' இதில் அவருக்கே குழப்பமாக இருந்தது. யாரை சந்தேகப்படுவது என்று.

'மகனை எதற்கும் ஒரு வார்த்தை கேட்போம். எந்த நடவடிக்கை எடுக்குமுன், பிறகு என்னிடம் ஒரு

வார்த்தை நீங்கள் கேட்டிருக்கலாமேப்பா... என்றால் என்ன செய்வது?'

மகனைக் கூப்பிட்டுக் கேட்டார்.

கார்த்திக் இல்லையென்றான். ''நான் போனது உண்மை ஆபீசுக்கு. அவர் இல்லையென்றதும் நான் வெளியே வந்துவிட்டேன். அங்கு சிறிது நேரம்கூட இல்லை. இவ் வளவு பணத்தை நான் எதற்கு உங்களைக் கேட்காமல் வாங்கப் போறேன்.''

அவனுக்கு ஆத்திரம் தாள முடியவில்லை. வீட்டில் உள்ளவர்களுக்கும் அதிர்ச்சி. மேனேஜர் சொல்வதை நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடிய வில்லை. கார்த்திக் அவமானமாக உணர்ந்தான்.

''அப்பா பணத்தை நான் எடுக்கவில்லை. கொஞ்சநாள் பொறுத்துக்குங்க. நான் எடுக்கவில்லை என்று நிரூபிக் கிறேன். எனக்குக் கொஞ்சம் டைம் குடுங்க. என் படிப்பு முடியட்டும்'' என்றான்.

கார்த்திக்கின் படிப்பு முடிந்தது ஆபீஸ் வந்தான். கணேசனிடம் ஒரு வார்த்தை இதைப்பற்றி இவன் கேட்கவில்லை. கணேசனோ இந்தப் பிரச்சனை இதோட முடிந்து விட்டது என்று பேசாமல் இருந்தார். இது இனி தான் தொடரப் போகுது என்று தெரியாமல்.

கணேசன் தன் பேச்சு சாதுரியத்தால் மடக்கினான். பணத்தையும் அவர் கண்ணில் தாராளமாகக் காட்டி சொன்னான். இப்படியே அவர் செய்யும் தப்பைக் கண்டு பிடித்தான்.

'தன் மகளுக்குக் கல்யாணம் பேசி முடிக்கப் போறேன். என் ஊரில் ஒரு பையன் என் பெண்ணை விரும்புகிறான். அவனுக்குத்தான் பேசிமுடிக்கப் போறேன்' என்றார்.



கார்த்திக் திட்டம் போட்டான். 'இவரை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும். தன்னை தன் தந்தை, அண்ணன் குடும்பத்தார் முன்னிலையில் எப்படி தலை குனிய வைத்தாரோ... அதுபோல இவர் அவமானப்பட வேண்டும்' என்று நினைத்தான்.

அவருக்குத் தண்ணியை வாங்கி ஊற்றினான். அவர் மனைவி பற்றி மகள் பற்றி விசாரித்தான். ''உங்கள் மகளை எனக்குப் பிடித்திருக்குது நான் கல்யாணம் பண்ணிக் கிறேன்'' என்றான்.

அவர் போதையிலும் திகைத்தார். ''என்...ன சொல்..றே... கார்த்திக். என் மகளை உனக்குப் பிடிக்குதா...? என் அந்தஸ்து என்ன? உங்கள் அந்தஸ்து என்ன? நான் உங்கள் கம்பெனியில் ஒரு வேலை பார்க்கும் மேனேஜர். என் பொண்ணைப் போய்... இதற்கு உன் வீட்டில் சம்மதிப் பார்களா...? நீயே சம்மதித்தாலும் உனக்குப் பெரிய இடத்தில் அல்லவா பெண் எடுப்பார்கள். நாங்கள் சாதாரணமான குடும்பம்'' என்றார் வியப்புடன்.

''நிச்சயமாக. என் விருப்பம்தான் எல்லாமே. என் விருப் பத்தைத் தடுக்க யாருக்கும் உரிமையில்லை. வாழப் போறவன் நான். என் சம்மதம்தான் முக்கியமே தவிர அவர்கள் சம்மதமில்லை. அவர்கள் பார்க்கும் பெண் ணிற்குத் தாலி கட்டி குடும்பம் நடத்த. கல்யாணம்கிறது என் சொந்த விஷயம். பெண் எப்படி இருக்கணும். எப்படி வாழணும் என்று முடிவெடுக்க வேண்டியவன் நான். அவர்கள் அல்ல.

பணம் என்ன பெரிய பணம். எங்களிடம் இல்லாத இத்தனை சொத்தும் யாருக்காகச் சம்பாதிக்குறாங்க. பிள்ளைகள் எங்களுக்காகத்தானே... என்னைவிட

உங்களுக்குத்தான் தெரியும் எவ்வளவு சொத்து எங்கெங்கே இருக்கு என்று. இனி நானும் சம்பாதிப்பேன். என் மனைவியை ராணி மாதிரி காரில் கூட்டிக்கொண்டு வலம் வருவேன். வீட்டில் நான் பேசிக்கொள்கிறேன். முதலில் உங்க சம்மதத்தை சொல்லுங்கள். எனக்கு மனசு தான் முக்கியமே தவிர பணம் இல்லை. குஜராத்தில் ஒரே இரவு பூகம்பத்தில் கோடீஸ்வரர்கள் எல்லாம் பிச்சைக்காரர்களாக நடுரோட்டில் நிக்கலையா...'' என்றான்.

அவர் மீண்டும் தயங்கினார்.

''நான் அந்த மாப்பிள்ளையிடம் பணம் வாங்கி விட்டேன். என் மகளை உனக்கே தருகிறேன் என்று இப்போ எப்படி மாற்றிப் பேச முடியும்.''

''இவ்வளவுதானே... அவனுக்குப் பணத்தை நான் ....... கொடுத்து விடுகிறேன். உங்கள் மகள் அவனை விரும்புகிறாளா?'' என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான்.

''இல்லை. அவன் அவளை விரும்புகிறான். நான் அவளைப் பற்றிச் சொன்னேன். அவனை விரும்புகிறாளா... இல்லையா என்று தெரியவில்லை. விரும்பாமலா... நான் சொல்லும்போது பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பாள்.

இருந்தாலும் கார்த்திக் இந்தக் கல்யாணம் வேண்டாம். அவளை விரும்பும் அந்தப் பையனுக்கே கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடுகிறேன். பணம் ஒரு பிரச்சனை இல்லை என்று நீ சொன்னாலும் நான் ஓரளவுக்காவது சீர், நகை, என செய்ய வேண்டாமா...? உங்கள் வீட்டு விசேஷங்களைப் பார்த்திருக்கிறேன். அதில் எவ்வளவு நகை போட்டிருப்பார்கள் உங்கள் வீட்டிலும், விசேஷத்திற்கு வரும் பெண்களும் என் பெண் அருகே தனியாக நிற்பதை நான் விரும்பவில்லை.''



அவர் தன் பெண்ணின் மேல் வைத்திருக்கும் பாசத்தை அறிந்தான். அவரை எங்கே அடித்தால் விழுவார் என்று பார்த்து அடித்தான்.

அவரிடம் ''என்ன மாமா இப்படிப் பேசுறீங்க. இப்ப எல்லாம் தாலி கட்டிய பிறகுகூட மாப்பிள்ளையை மாத்துறாங்க. நீங்க என்னவோ இப்படிப் பேசுறீங்க. பெண்ணைத் தருகிறேன் என்றுதானே சொல்லியிருக்கீங்க. எதுவும் பேசி முடித்துவிடவில்லை. அவன் வந்து பெண் பார்க்கவில்லை. எதுவுமே நடக்காதபோது ஏன் இந்தத் தடுமாற்றம். இப்போ எல்லாம் பெண்களை ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று என்று மாப்பிள்ளை வந்து பார்த்து விட்டுப் போறான். பிடிக்கவில்லை என்று பார்க்கும் மாப்பிள்ளைக்கு எல்லாமே நாம் பொண்ணைக் கொடுத்து விடுகிறோமா... இல்லையே... எத்தனை ஜாதகம் பார்க்கிறோம். அத்தனைக்கும் பொருத்தம் இருக்குதா... இது மாதிரி என் பெண் இப்போ கல்யாணம் வேண்டாம் என்கிறா... சாரி இந்தா உன்னிடம் வாங்கிய பணம் என்று பேசி முடித்துவிட வேண்டியதுதானே. இந்தக் காலத்தில் உங்கள மாதிரி இப்படி நல்லவங்களைப் பார்க்கிறது அதிசயமாக இருக்கு'' என்று ஐஸ் வைத்தான்.

அவருக்கு உச்சி குளிர்ந்தது.

''என்ன மாமா உங்க மகளை நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால் இந்த ஆபீசில் மேனேஜர் மட்டுந்தானா. என்னுடைய மாமனார். என் அப்பாவுக்கு சம்பந்தி. உங்க அந்தஸ்து உயரும். சரிசமமாக உட்கார்ந்து பேசலாம். ஆபீசில் மாதா மாதம் இனி சம்பளம் வாங்க வேண்டியதில்லை. இது உங்க ஆபீஸ். உங்க மக சொத்து. இது எல்லாம் நினைவில் இல்லாமல் அந்த மாப்பிள்ளையைப்

பத்தி பேசுறீங்களே... உங்க பெண்ணை நான் கண் கலங்காமல் பார்த்துக் கொள்வேன். நகை நான் வாங்கிப் போட மாட்டேனா... என் மனைவி அடுத்தவர் முன் தலைகுனிய விடுவேனா... இப்பவே சொல்லுங்கள் நான்தான் நகை போடணும் என்று. நானே போய் வாங்கி வந்து இப்பவே உங்களிடம் கொடுக்கிறேன். அதை நீங்க போட்ட மாதிரி போட்டுக்கிட்டு வரட்டும். இதுதானே உங்க பிரச்சனை. எங்க வீட்டிலும் யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். நீங்களும் கடைசி வரை எங்களுடனே இருக்கலாம்.

என் வீட்டில் என்றால் கூட உங்களுக்குச் சிரமமாக இருக்கும். எனக்குக் கல்யாணம் ஆனதும் கொட்டிவாக்கத்தில் ஒரு பங்களா இருக்கே அது உங்களுக்குத் தெரியும் தானே அதில் போய் இருந்து விடலாம். நான் என் மனைவி, நீங்கள் கடைசி காலத்தை பேரன் பேத்தி என்று கழிப்பதை விட்டுவிட்டு இப்படிக் கடைசிவரை வேலை பார்த்துக் கஷ்டப்படணுமா...'' என்றான் கரிசனமாக.

மகுடிக்கு மயங்கியது பாம்பு. அதை மேன்மேலும் ஊதி ஆட வைத்தான்.

''உங்கள் மகள் அழகாக இருப்பாளா மாமா...'' என்றான். வெட்கப்படுவது போல்.

''ரொம்ப அழகு மாப்பிள்ளை. என் பெண்'' என்றார்.

''உங்களுக்குப் பரிபூரண சம்மதம்தானே'' என்றான்.

''சம்மதந்தான் மாப்பிள்ளை.''

''எதற்கும் உங்கள் பெண்ணிடம் ஒரு வார்த்தை...''

''நான் சொல்வதைத் தட்டமாட்டாள் மாப்பிள்ளை.''

வார்த்தைக்கு வார்த்தை மாப்பிள்ளை என்பதைக் கேட்டு வாய்க்குள் சிரித்தான்.



கார்த்திக் என்ன மாயம் பண்ணினானோ... மந்திரம் போட்டானோ தெரியவில்லை. அடுத்த மாதமே கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணினான்.

வீட்டில் அனைவருக்கும் முன்னால் சொன்னான். ''நான் மானேஜர் கணேசன் மகளைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். ஏற்பாடு பண்ணுங்கள்'' என்றான்.

அனைவரும் அதிர்ந்தனர்.

''என்..னடா... சொல்றே...'' என்றார் அப்பா.

''ஆமாப்பா. நான் மேனேஜர் மகளைக் கல்யாணம் பண்ண விரும்புகிறேன்.''

''என்ன திடீர்னு இந்த முடிவு. உனக்கு எப்படி அவளைத் தெரியும். இப்போ ஏன் இவ்வளவு அவசரம்'' என்றார்.

''எப்ப இருந்தாலும் நான் கல்யாணம் பண்ணத்தானே போறேன். நீங்க பார்க்கும் பெண்ணை அந்தப் பெண் இவளா இருக்கட்டுமே...''

''எப்ப இருந்து இந்த முடிவு. அவளோடு உனக்குப் பழக்கமா...?''

கண்களை இறுக மூடினான். இந்தக் கேள்வியின் வலியை உதட்டைக் கடித்து உள்ளுக்குள் அடக்கினான்.

''அப்போ அந்தப் பணத்தை எடுத்து அவளுக்குத்தான் குடுத்தியா'' என்றாள் அண்ணி.

அவன் கை முஷ்டிகள் இறுகின.

''இந்த கேள்விக்குப் பதில் கூடிய சீக்கிரம் அனைவருக்கும் தெரியும். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அவன் அம்மா ''ஏன்டா இப்படிப் பண்றே... அவர் குடும்பத்துக்கும் நம் குடும்பத்துக்கும் ஒத்து வருமா...?

இத்தனை வருடம் நம்மிடம் கைகட்டி வேலை பார்த்தவர். திடீர்னு அவரோட சம்பந்தி என்ற முறையுடன் பழக முடியுமா. இது நல்லாவா இருக்கு. பார்ப்பவர்தான் என்ன நினைப்பார்கள். இது நீயா எடுத்த முடிவா... இல்லை யாராவது போதனை தந்ததா'' என்றார் கோபமாக.

''யாரும் எனக்கு போதனை தரவில்லை. நான் நல்ல நிதானமாக யோசித்து எடுத்த முடிவு. இதில் எந்த மாற்றமுமில்லை.''

''அவருக்கு பெண் இருப்பது உனக்கு எப்படிடா தெரியும். எனக்கு இப்போ நீ சொல்லித்தான் தெரியுது'' என்றாள் அம்மா.

''எப்படியோ தெரியும். இது என்ன பெரிய தங்க மலை ரகசியமா... முடிந்து போனதைப் பத்தி இனி பேசி எந்தப் பிரயோஜனமும் இல்லை. இனி நடப்பதைப் பத்தித்தான் நான் பேச வந்தேன்.''

''உனக்கு அவர்கள் குடும்பத்தைப் பத்தி என்ன தெரியும். அந்தப் பெண் நம் குடும்பத்துக்கு ஏத்தவளா.., பண்பானவளா... என்று எதுவும் தெரியாமல் எப்படிடா கலியாணம் பேச முடியும்?''

''எனக்கு ஏத்தவளா இருந்தாப் போதும்மா. என்னிடம் பண்பா நடந்தா போதும். நான் தானே வைத்துக் குடும்பம் நடத்தப் போறேன். இதைப் பற்றியெல்லாம் நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம்'' என்றான் சுள்ளென்று.

''ஏன்டா இப்படிக் கோபப்படுறே... இது உன் வாழ்க்கைடா... ஒரு தரம் முடிவு எடுத்தால் மாற்ற முடியாது. உன் வாழ்நாள் முழுமைக்கும் நீ சந்தோஷமாக வாழணும். என்ன காரணத்துக்காக இந்த முடிவு நீயா எடுத்தே... பணம்தான் காரணம் என்றால் போயிட்டுப் போகுது.



இரண்டு லட்சம் தானே. சம்பாதித்துக் கொள்ளலாம். அதற்காக நீ ஏன் அவர் மகளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளணும். உனக்கு நல்ல பெண்ணாப் பார்த்து நானே கல்யாணம் பண்ணி வைக்கிறேன் அவசரப் படாதே... பின்னால் நீ வருத்தப்படுவே'' என்றார்.

''நல்லதோ கெட்டதோ என் வாழ்வை நானே பார்த்துக் கொள்கிறேன். உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது. அது மாதிரி பிரச்சனை வந்தால் நான் தனிக் குடித்தனம் போய் விடுகிறேன்'' என்றான் திட்டவட்டமாக.

''நாளைக்கு நீயே எங்களைச் சொல்வேடா... எனக்கு மட்டும் இல்லாத வீட்டுப் பெண்ணை பண்ணி வைத்து விட்டீங்க என்று.''

''நான் அது மாதிரிச் சொல்ல மாட்டேன் என்று உத்திரவாதம் தருகிறேன். வேணா ஒரு வெள்ளைப் பேப்பரில் எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தரட்டுமா...'' என்றான் ஆத்திரத்துடன்.

''நீ அந்தப் பெண்ணை விரும்புறியாடா... என்றார்.

''...............''

''ஏன்டா பதில் சொல்ல மாட்டேங்கிறே...''

''அம்மா நீங்கள் கத்துக் குடுத்ததுதான். பிடிக்காத கேள்விக்கு பதில் சொல்வது மடத்தனம் என்று.''

''பணம் போனாப் போகுதுடா. யாரும் இனி அதைப் பற்றிப் பேசமாட்டோம். அந்தப் பெண் வேண்டாம்டா...''

''எனக்கு அந்தப் பெண்தான் வேண்டும். எனக்குக் கல்யாணம்னு நடந்தா அந்தப் பொண்ணோடதான். இல்லையென்றால் நான் இப்படியே இருந்து விடுவேன். இத்தோடு இந்தப் பேச்சை விடுங்க'' என்றான். அவனின் பிடிவாதம் அனைவரும் அறிந்ததே... எல்லோரும்

பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பார்கள். இவனோ... ஆறு என்பான். அதை அடித்துக் கூறுவான். இவனிடம் இனி பேசிப் பிரயோஜனம் இல்லை என்று பேசாமல் இருந்தார்.

ஜனார்த்தனனும் ''விடுங்க நாம் வேண்டாம் என்று அவனே முடிவு எடுத்திருக்கான். அவன் முடிவில் தெளிவா இருக்கான். எந்தக் குழப்பமுமில்லாமல் அவன் தான் அப்படி முடிவெடுத்தான் என்று நானும் இருக்க முடியாது. பெத்தவன் ஆயிற்றே... எனக்குனு கடமையிருக்கே. நானே முன்னிருந்து கல்யாணம் பண்ணி வைக்கிறேன். ஏதோ இந்த அளவிலாவது வந்து சொன்னியே. கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு வராமல் அதுவரை என்னைத் தலை குனிய வைக்காமல் இருந்தியே ரொம்ப நன்றி. எப்போ எங்கே கல்யாணம் என்றும் நீ பிளான் பண்ணியிருப்பே. அதையும் சொல்லிவிடு. ஏற்பாடுகள் பண்ண வசதியிருக்கும்'' என்றார்.

''நீங்கள் எந்தச் சிரமமும் பட வேண்டாப்பா... எல்லாம் அவரே பார்த்துக் கொள்வார். கல்யாணமும் அவர்கள் ஊரில்தான்'' என்றார்.

''அப்போ தேதி முகூர்த்தம் எல்லாம் முடிவாகி விட்டதா...'' என்றார்.

அவன் மௌனமாக இருந்தான்.

''சரிப்பா. என்றைக்குனு சொல்லு. நாங்கள் அனைவரும் வருகிறோம்'' என்று விட்டுப் போய் விட்டார்.

மறு மாதமே முகூர்த்தம். விசுதா இதைக்கேட்டு அதிர்ந்தாள். மாப்பிள்ளை யார் என்று தெரிந்ததும் மீண்டும் பேரதிர்ச்சியடைந்தாள்.



''அ..ப்பா... உங்கள் கம்பெனியின் ஓனர் பையனா. இது எப்படி சாத்தியம். என்னை எப்படி இவர் கல்யாணம்...'' புரியாமல் வார்த்தைகள் வராமல் தவித்தாள்.

''அப்பா நீங்கள் நிதானத்தில் தானே இருக்கீங்க. ஏன் இப்படிப் பிதற்றுறீங்க.''

''ஏம்மா எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று நினைக்கிறாயா. நான் தெளிவாத்தான் இருக்கேன் மகளே... கார்த்திக் அதான் மாப்பிள்ளையின் பெயர். அவரே வந்து என்னிடம் கெஞ்சிக் கேட்டார். பிறகுதான் நானே சம மதித்தேன். அவர்கூட சொன்னார். உங்க பெண்ணிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கள் என்று. நான்தான் என் பெண் என் பேச்சை மீற மாட்டாள் என்று சத்தியம் பண்ணிச் சொன்னேன். இப்போ போய் இப்படி பேசுறே... இப்போ உனக்குத்தான் மூளை கலங்கி விட்டது. நல்ல பெரிய இடத்து மாப்பிள்ளை என்று சந்தோசமாக கனவு காண்பாயா... இப்படி எதிர்த்துப் பேசுறே'' என்றார்.

இவள் எவ்வளவோ போராடிப் பார்த்தாள். ''இப்ப எனக்குக் கல்யாணமே வேண்டாம் என்று.'' ''எனக்கு பயமா இருக்குப்பா. ரொம்பப் பெரிய இடம். என்னை ஏன்.. பார்த்ததுகூட இல்லையே... பிறகு ஏன். நீங்கள் யோசிக்க வேண்டாமா. நான் போய்விட்டால் நீங்கள் என்ன செய்வீங்க. எப்படித் தனியாக இருப்பீங்க. உங்களை விட்டுத் தனியாக நான் போக மாட்டேன்'' என்று இப்படியும் கூறிப் பார்த்தாள். அவர் எதற்கும் மசியவில்லை.

''அதுக்குனு உனக்குக் கல்யாணமே ஆக வேண்டாமா. எப்ப இருந்தாலும் அது நடக்க வேண்டியதுதானே. நான் எத்தனை நாளைக்கு உயிரோட இருக்கப் போறேன். எனக்கு திடீர்னு ஏதாவது ஆகிவிட்டால் உனக்குத்

துணை யார். என் நிலைமையில் இருந்து நீயும் யோசித்துப் பார்'' என்று அவர் பாணியில் பேசினார்.

அவள் மீண்டும் பேச ஆரம்பிக்கவும் அவள் காலை பிடிக்கப் போனார். ''நான் வாக்குக் கொடுத்து விட்டேன். என் மான மரியாதையெல்லாம் இனி உன் கையில்தான் இருக்கு. நானே உனக்குக் கெடுதல் பண்ணுவேனா... இது உனக்குத் தெரிய வேண்டாமா... நீ மறுத்தே நான் தூக்கில் தொங்குவதைத் தவிர வேற வழியில்லை'' என்று அழுதார்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. 'அப்பா ஏன் இவ்வளவு அவசரப்படுகிறார். நான் என்ன சொல்லி விட்டேன். கல்யாணமே வேண்டாம் என்றா சொன்னேன். இப்போ வேண்டாம் என்று தானே சொன்னேன். இதற்குப் போய் என் காலைப் பிடிப்பானேன்' என்று தன் அப்பாவிடம் ''உங்கள் விருப்பம்பா'' என்றாள்.

பெரியகுளத்திலேயே கல்யாணம். பெண்ணை வந்து யாரும் பார்க்கவில்லை. அதுபோல விசுதாவும் மாப்பிள்ளை போட்டோக்கூடப் பார்க்கவில்லை. அதற்கு நேரமில்லை. கல்யாண வேலை இருந்ததால் இதைப் பற்றிச் சிந்திக்கக்கூட நேரமில்லை விசுதாவுக்கு.

இருந்தாலும் மனம் பறக்கத் தொடங்கியது. 'மாப்பிள்ளை எப்படி இருப்பானோ. கறுப்பா, சிவப்பா, உயரமா, குட்டையா நானே நல்ல உயரம். என்னைவிட உயரமா இருந்தாத்தானே நல்லாயிருக்கும். என்னைவிட உயரம் என்றால் நிமிர்ந்துதான் பார்க்கணும் அவனை.' கன்னங்களில் ரோஜாக்கள் பூத்தன.

'பெரிய குடும்பம் என்று சொன்னாரே அப்பா. எனக்கு சமைக்கக்கூட சரியா வராதே... அங்குதான் சமையலுக்கு



ஆள் இருக்குமே... நாம் ஏன் இதை நினைத்துக் கவலைப்பட வேண்டும்.

ஆனால் ஏன் வந்து யாரும் என்னைப் பார்க்கவில்லை.' இந்தக் கேள்வி மனதில் வண்டாய்க் குடைந்தன.

பெண் பார்க்கவென்று எத்தனை தரம் வருவார்கள். மாப்பிள்ளையும் வருவானே... ஒரு போன்கூட இல்லையே... இவள் பிரெண்ட் ஒருத்தி கல்யாணம் நிச்சயமான தினத்திலிருந்து காதில் இருந்து செல்லை எடுக்கவேயில்லையே... இவள்கூட கேலி பண்ணுவாள். 'என்னதான்டி பேசுவீங்க. எப்பப் பார்த்தாலும் அவர் வேலை எதுவும் பார்க்கிறாரா இல்லையா. உன் கூடவே பேசிக்கிட்டு இருக்காரே. இப்பவே இப்படிப் பேசி முடித்து விட்டால் கல்யாணத்துக்குப் பிறகு என்னடி பேச முடியும்?' என்பாள்.

இவளுக்கும் ஆசை வந்தது. அவன் குரலையாவது ஒரு தரம் கேட்க வேண்டும் என்று. பிறகு கேட்டாளே... அவன் குரலை உயிர் பிரிந்தாலும் மறக்க முடியாத அளவுக்கு.

முதல் நாளே மாப்பிள்ளை வீட்டார் எல்லாம் வந்து விட்டனர். ஒரு பெரிய வீடு, ஹோட்டல் அறை என்று தங்கியிருந்தனர்.

அன்றும் யாரும் வந்து பார்க்கவில்லை. மெல்ல அப்பாவிடம் கேட்டாள். ''ஏம்பா இன்று கூட மாப்பிள்ளை வீட்டில் இருந்து வந்து என்னைப் பார்க்க வரலையே... மாப்பிள்ளைகூட'' என்றாள் மெதுவாக. இதை அப்பாவிடம் கேட்கவே கூச்சமாக இருந்தது. அம்மா இருந்தால் மனதில் உள்ள ஆசைகளைப் பகிர்ந்து கொள்ள எத்தனை வசதியாக இருக்கும். அம்மாவின் இழப்பை இன்று பூதாகரமாக உணர்ந்தாள்.

'அம்மாவும் நான் கேட்காமலேயே என் உணர்வுகளை புரிந்து கொள்வாளே... எது உனக்குப் பிடிக்கும் பிடிக்காது என்று கேட்டுச் செய்திருப்பாளோ... இந்தக் கல்யாணத் தைக்கூட.

சேச்சே... பிறந்ததில் இருந்து அம்மா முகத்தைப் பார்த்ததில்லை. அப்பா தான் அவளுக்கு எல்லாம். எப்படி வளர்த்தார்.

'எனக்காக மறு கல்யாணம் கூடப் பண்ணிக் கொள்ளாமல் நான் எப்படி இத்தனை சுயநலவாதியாய் நினைக்க ஆரம்பித்தேன். என் அப்பாவைவிட என் நலத்தில் அக்கறை யாருக்கு. எது செய்தாலும் நான் நல்லா இருக்கணும் என்று தானே செய்வார். அவருக்குத் தெரியாத அந்தக் குடும்பத்தைப் பற்றி. இத்தனை வருடம் பழகியிருப்பவர்' என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவர் ஆஹா... என்று சிரித்துக் கொண்டு ''மாப்பிள்ளையை நீ பார்க்க வேண்டுமா... அவரும் உன்னைப் பற்றியேதான் கேட்டுக் கொண்டிருப்பார். நானும் சளைக்காமல் உன் புகழைப் பாடிக் கொண்டிருப்பேன். அதைக் கேட்டுப் பூரித்துப் போவார்'' என்றார்.

அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

''உனக்கு என்ன இப்ப அவரைப் பார்க்கணுமா... இப்பவே வரச் சொல்லட்டுமா. என் பெண் நாளைக் காலை வரை உங்களைப் பார்க்காமல் தாங்க மாட்டாளாம். இன்றே இப்பொழுதே உன்னைப் பார்க்க வேண்டுமாம் என்று உடனே கூப்பிடுகிறேன்'' என்று செல்லை எடுத்தார்.

''ஐயோ அப்பா. என்னப்பா நீங்க. என்னைப் பற்றி அவர் என்ன நினைப்பார்'' என்று உள்ளே ஓடினாள்.



# 5

மறுநாள் காலை முகூர்த்தம். பியூட்டி பார்லரில் இருந்து வந்து விசுதாவை அலங்காரம் பண்ணினார்கள். அவர்களே அசந்து விட்டார்கள். 'இத்தனை அழகா ஒரு பெண்ணிடம் இந்த மாதிரி ஒரு அழகை நாங்கள் இது வரை பார்த்ததில்லை' என்று வாய் பிளந்தனர்.

மண்டபத்தில் பெண்ணைப் பார்த்தவர்கள் இமைக்க மறந்தனர். கார்த்திக்கோ 'இத்தனை அழகா. பெண் எப்படி இருந்தால் என்ன. அதுகூடவா குடும்பம் நடத்தப் போறோம். விட்டு விடத்தானே போறோம்.' இவன் எப்படியாவது பழி வாங்கவென்று தானே இந்தக் கல்யாணத்திற்கே சம்மதித்தது.

அவள் அழகு அவனை ஒருமுறை அசைத்துப் பார்த்தது. தலையைக் குலுக்கி அந்த நினைப்பை விரட்டினான். அவன் வீட்டில் உள்ளவர்கள் பரவாயில்லை. 'வசதியில்லையென்றாலும் பெண் அழகாக இருக்காளே... அதான் அவளைப் பார்த்ததும் மயங்கி விட்டான் போல. இந்த அழகுக்கு எந்த ஆண் மகனும் தடுமாறத்தான் செய்வான். அப்படி இல்லையென்றால் அவன் ஆண் மகனே கிடையாது' என்று நினைத்தனர்.

கல்யாணம், சாப்பாடு முடிந்து பெண் மாப்பிள்ளை, பெண் வீட்டிற்கு வந்தனர். பெண்கள் ஆரத்தி எடுத்தனர்.

கணேசன் ''வீட்டுக்குள் வாங்க மாப்பிள்ளை'' என்றார்.

கார்த்திக்கின் குரல் கர்ஜனையாக வந்தது. ''யாருக்கு யார் மாப்பிள்ளை மிஸ்டர் கணேசன்.''

கணேசன் அதிர்ந்தார். கார்த்திக் குடும்பமும் அதிர்ந்தது.

''எ..ன்..ன மாப்...பி..ள்ளை சொல்...றீ..ங்க...''

''உங்களுக்கு யார்..? மாப்பிள்ளை என்றேன்...?'' குரல் அழுத்தமாக வந்தது.

கணேசன் தடுமாறினார்.

''மாப்பிள்ளை'' என்றார் பரிதாபமாக.

''எனக்கு உங்க பெண்ணோடு வாழ விருப்பமில்லை.''

''ஏன்...?'' என்றார் கணேசன்.

''ஒரு திருடனோட பெண்ணை எனக்குப் பிடிக்க வில்லை.''

இதுவரை இங்கே என்ன நடக்குது என்றே புரியாமல் கண்களில் ஒரு மிரட்சியுடன் நின்று கொண்டிருந்தவள் சுயநினைவு பெற்று கார்த்திக்கைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் கண்கள் சிவந்து எரிமலையின் உச்சத்தில் இருந்தான். இப்படிக்கூட கண்களில் சீற்றத்தைக் காட்ட முடியுமா...? ஏன் என்று அவர்களுக்குப் புரியவில்லை.

கணேசன் நிலை குலைந்தார்.

விசுதா கண்களில் கோபம். கார்த்திக்கைப் பார்த்து அதட்டினாள். ''என்ன சொல்றீங்க. என் அப்பா திருடனா. ஏன் இப்படி வாய்க்கு வந்தபடி உளர்றீங்க. உங்களால் நிரூபிக்க முடியுமா...?''

''வாடி... என் மகாராணி. தாலி கட்டியதுமே என்ன அதிகாரம் கொடிகட்டிப் பறக்குது. தாலி ஏறிவிட்டது. இனி இவனை அதிகாரம் பண்ணலாம் என்ற திமிரா... என்னடி அதட்டுறே... நிரூபிக்கணுமா... நிரூபிக்கத் தானடி இந்தக் கல்யாணமே... நான் என்னமோ உன் அழகில் மயங்கிக் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்



என்ற நினைப்பா உனக்கு. சாக்கடையில் ஒரு துளி சந்தனம் விழுந்து விட்டதே என்று சாக்கடையை எடுத்து பூசிக் கொள்ள முடியுமா...? அந்த சாக்கடை நாற்றத்தில் சந்தனத்தின் வாசம் அமுங்கி விடாதா... எல்லோரும் சந் தனத்தை வைத்திருக்கான் என்றா சொல்வார்கள். சாக் கடையைத்தான் வைத்திருக்கான் என்று தான் சொல் வார்கள்.''

விசுதா முகம் சுளித்தாள்.

'என்ன இப்படி கேவலமா சாக்கடை சந்தனம் என்று பேசுகிறான்.

இவன் என்ன இப்படிப் பேசுகிறான். மறை எதுவும் கழண்டு விட்டதா..' என்று ஏளனமாக அவனைப் பார்த் தாள்.

அந்தப் பார்வையைப் புரிந்து கொண்டான். ''நானாடி மறை கழன்றவன். உன்னையும் உன் அப்பனையும் அது மாதிரி அலைய வைக்கப் போறேன்டி.

ஒரு திருடனுக்கும், ஓடிப் போன தாய்க்கும் பிறந்தவள் தானே நீ. பிறகு நீ எப்படிப் பேசுவே. உன் அப்பன் திரு டன் இல்லாம வேற என்ன?'' புருவம் உயர்த்திக் கேட்டான்.

விசுதா வாயடைத்துப் போனாள். 'திருடன், ஓடிப்போன தாய். என்ன நடக்குது இங்கே?' என்று தந்தையின் முகத் தைப் பார்த்தாள். அவர் இல்லையென்று மறுக்கவில்லை. மாறாக கார்த்திக்கிடம் கெஞ்சினார்.

''என் மகளுக்கு இந்த விஷயம் தெரியாது மாப்பிள்ளை. நீங்கள் இதைப்பற்றிப் பேச வேண்டாம்.''

அவன் அவரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான். ''எந்த உண்மை தெரியாது. உன் மனைவி அடுத்தவன் கூட ஓடிப்போனாளே அதுவா...? இல்லை என் ஆபீசில்

இரண்டு லட்சத்தை நீ திருடிவிட்டு என் மீது பழி போட்டியே அதுவா...? இல்லை நான் ஆபீசில் உன்னிடம் வந்து பணம் வாங்கினேனே, அதுக்கு ஆயிரம் என்றால் பத்தாயிரம் என்று எழுதி வைத்துவிட்டு ஒன்பதாயிரத்தை நீ சுருட்டினியே அதுவா...? இல்லை உன் மகளை அந்த ரமேஷுக்குக் கல்யாணம் பண்ணித் தருவதாக அவனிடம் பணத்தை வாங்கிக்கொண்டு, பின் என்னிடம் பணத்தை வாங்கி அவனுக்குக் கொடுத்துவிட்டு, பணத்துக்காக உன் மகளை எனக்குக் கூட்டிக் கொடுத்தியே அதுவா...? உன் மகளும் உன்னைப் போல பணத்துக்காகவும், உன் மனைவி போல உடம்பு சுகத்துக்காகவும் அவனை விட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாளே... அதுவா...?'' என்றான் ஆணித்தரமாக.

அங்கிருந்த அத்தனை பேரும் அதிர்ச்சியுற்றனர். சத்தம் கேட்டுத் தெருவே கூடி விட்டது. கணேசன் ஆடிப்போய் விட்டார். விசுதாவைக் கேட்கவே வேண்டாம். தன் காதுகளை பொத்திக் கொண்டாள். அவளுக்குத் தலை சுற்றியது.

''நீ என்னை ஏமாற்றி பழிபோட நினைத்தாய். நான் உன்னை எப்படி அடித்தேன் பார்த்தாயா...? மரண அடி. இனி நீ எழ முடியுமா...?

''அந்த இரண்டு லட்சத்தை. என் பணத்தையே... நான் திருடினேனா...? சொல்லு உன் மனசாட்சியைத் தொட்டு. உனக்கு எங்கே இருக்கு மனசாட்சி. அது இருந்தால் உண்ட வீட்டுக்கு நீ துரோகம் பண்ணுவாயா...? நீ பணத்தை எடுத்ததுமில்லாமல் என் மீது திருட்டுப் பட்டம் வேற.

''நீ அந்தப் பணத்தை என்ன செய்தாய் என்று சொல்லட்டுமா...? நீ குதிரை ரேசுக்குப் போகலே. அந்தப்



பணத்தை நீ அங்கு கட்டலே. இதோ அதற்கு சாட்சி'' என்று பக்கத்தில் நின்ற ஒருவனைப் பிடித்து இழுத்து அவர் முன் தள்ளினான்.

அவனைப் பார்த்து விழிகள் பிதுங்கின கணேசனுக்கு.

''நான் உன்னிடம் பணம் வாங்கியது என் அப்பாவிற்குத் தெரியாது என்று தானே அப்படி நீ பொய் சொன்னே. எங்கே நான் இல்லையென்றால் நீ பணம் வாங்கியதை உன் அப்பாவிடம் சொல்லி விடுவேன் என்று மிரட்டத் தானே. அப்படியொரு பழியை என்மீது போட்டாய்.

நான் அப்பாவிடம் கேட்காமல், அவர் சொல்லாமல் நான் உன்னிடம் பணம் வாங்கியதில்லை. வாங்கிக் கொண்டு அப்பாவிடம் காண்பித்து விட்டுத்தான் நான் செல்வேன். நீ நினைத்த மாதிரி நான் நடந்தால் உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்.

நான் என் வீட்டினர் முன் எப்படி தலை குனிந்து நின்றேன் தெரியுமா...? என் அப்பா என் மீது சந்தேகப் படவில்லை சும்மா உண்மையா என்று தெரிந்து கொள்ளத்தான்'' என்றார்.

''அதை நான் நம்பவில்லை. பணத்தைக் காணவில்லை. நீ எடுத்தாயா...? என்றாலே... நம்பிக்கையின்மை தானே. அதற்கு யார் காரணம், நீ. தான் எத்தனை வேதனைப்பட்டேன் தெரியுமா...? எத்தனை இரவு இரத்த கண்ணீர் வடித்தேன் தெரியுமா...? என் அப்பா என் மீது சந்தேகப்பட்டு விட்டார் என்று.

என் வீட்டில் என்னை சாதாரணமாகப் பார்த்தாலே நீ திருடினியா... என்று என்னைக் கேட்பது போல் இருக்கும். எனக்கும் என்னை நிருபிக்க வேண்டுமே. என்ன வழி என்று யோசித்தேன்.

அப்போ தான் இந்த வழி தெரிந்தது. உன்னிடம் நெருங்கிப் பழகி உன் பெண்ணைக் கல்யாணம் செய்து உன்னிடமே விட்டு விடுவது என்று. உனக்கும் தெரியணுமே நம்பிக்கைத் துரோகம் என்றால் என்ன என்று. உன்னை என் அப்பா எத்தனை நம்பினார். நீ துரோகம் செய்ததுமில்லாமல் என்மீதே பழி போடலாமா...? இப்பத் தெரியுதா நம்பிக்கைத் துரோகம்னா என்னனு.

''நம்பிக்கை என்பது எத்தனை பெரிய அஸ்திவாரம். நம்பிக்கை இல்லையென்றால் அஸ்திவாரமே ஆட்டங் கண்டிடும். பிறகு எங்கே குடும்பம் இருக்கும்.''

''நீ எத்தனை என்னை நம்பினே... இப்போ எப்படி இருக்குது. என் செயல். உன் மனசு துடிக்குதா... இது மாதிரி தான் நான்.. நான் துடித்தேன். உன்னை நான் நேரடியாகக் கேட்டிருக்கலாம். நீ மறுப்பே. என்னிடம் தக்க ஆதாரம் இல்லை நிரூபிக்க. இப்ப நீ மறுக்க முடியாதே...?

கணேசன் அவன் காலில் விழுந்தார். ''மாப்பிள்ளை என்னை மன்னிச்சுடுங்க. என் பெண் நல்லவள். அவளுக்கு எதுவும் தெரியாது. அவளை விட்டு விடாதீங்க. நான்தானே தப்பு பண்ணினேன். என் பெண் என்ன தப்பு பண்ணினாள். ப்ளீஸ்'' என்று கண்ணீர் மல்கக் கெஞ்சினார்.

அவன் காலை உதறித் தள்ளினான். அவர் தடுமாறிக் கீழே விழப்போனார். விசுதா அ..ப்..பா என்று அவரைப் பிடித்துக் கொண்டாள்.

''ஏம்பா எனக்காக அவங்க கால்ல விழறீங்க. வேணாம்பா... இப்படி இந்த வாழ்க்கை எனக்கு வேணாம்பா... நான் உங்ககூடவே இருக்கிறேன்பா...'' என்று அழுதாள்.

''நீ பேசாம இரு விசுதா'' என்று மீண்டும் மன்றாடினார். அவன் எதற்கும் மசியவில்லை.



''உன் பெண் நல்லவள் என்று நான் எப்படி நம்ப முடியும். நீ தானே சொன்னே என் மகள் ரமேஷை விரும்பினாள் என்று. அவனை விட்டு விட்டு என்னைக் கல்யாணம் செய்பவள் எப்படி நல்லவளாக இருக்க முடியும். அவளும் அவ அம்மா மாதிரி அவனுடன் ஓடிப் போக மாட்டாள் என்று என்ன நிச்சயம்.'' வார்த்தைகளில் நெருப்பைக் கொட்டினான்.

## 6

விசுதா அப்படியே உறைந்து போனாள். 'நான் காதலித்தேனா... யாரை எதற்கு இந்தப் பொய்யெல்லாம் சொல்றான். அதுவும் அப்பா சொன்னதாக ஏன் அப்பா இப்படியொரு பொய்யை அவனிடம் சொன்னார். அவன் சொல்வது போல் பணத்துக்காகவா...?'

மீண்டும் தொடங்கினான். ''இல்லை பணத்துக்காக என் தலையில் கல்லைப் போட்டுக் கொன்றுவிட்டு, இருக்கும் பணத்தையெல்லாம் திருடிக்கொண்டு ஓடினாலும் ஓடிவிடுவாள். நீயே இந்த ஐடியாவை உன் மகளுக்குச் சொல்லிக் கொடுத்து அனுப்புவே'' என்றான்.

''இது உனக்குத் தாலிக் கயிறு இல்லை. தூக்குக் கயிறு. நீ சுதந்திரப் பறவை இல்லை. உன் சிறகுகள் வெட்டப்படாத கூண்டுக்கிளி உன் வாழ்க்கை. இனி சிறை வாழ்க்கைதான்.

''உன் வீடே... இனி உனக்கு சிறைதான். இது நான் உனக்குக் கொடுக்கும் ஆயுள் தண்டனை. இனி நீ இதில்

இருந்து தப்ப முடியாது. காலம் முழுக்க இதை நினைத்து அழ வேண்டியதுதான்.

''உன் அப்பா செய்த தப்புக்கு உனக்குத் தண்டனை. இனி உன் அப்பா தப்பு என்ற வார்த்தையைக்கூட நினைப்பாரா... அவர் ஆயுளில்.

''இனி இந்த சிறையில் இருந்து நீ வெளிவர முடியாது. இந்தத் தாலிக் கயிறு உன் கழுத்தைத் தினமும் நெரிக்கும். உன் மூச்சுத் திணறும். அந்த வலியை உன் அப்பா உணரணும். அப்போதான் தெரியும். அடுத்தவன் வலி எப்படியிருந்திருக்கும் என்று. பணத்தைக் காட்டி தண்ணியை வாங்கி ஊத்தியதுமே பொண்ணை எனக்குக் கொடுத்து விட்டாரே... இது மாதிரி இன்னொருத்தன் என்னைவிட அதிகமாக வாங்கித் தந்தால்... உன்னை மறுபடியும் அவனுக்குக் கட்டித்தர மாட்டான் என்று என்ன நிச்சயம்.'' வார்த்தைகள் புளியவாராய் விளாசியது.

விசுதா புழுவாய்த் துடித்தாள்.

''உன் அம்மா உன் அப்பாவை விட்டுவிட்டு, உன்னைப் பெத்துப் போட்டுவிட்டு உடம்பு சுகத்துக்காக இன்னொரு புருசன் கூட ஓடிப்போனவள்தானே. உன் உடம்பிலும் அந்த இரத்தம்தானே ஓடுது. நீயும் உடம்பு சுகம் கிடைக்கவில்லையென்று இன்னொரு புருசன்கூட போவியா...?'' என்றான் எல்லோர் முன்னிலையிலும்.

விசுதா எரிமலையின் சீற்றத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். ''உங்கள் பேச்சிலிருந்து, நடத்தையிலிருந்து... ஆண் வர்க்கமே எவ்வளவு கேவலமானது என்று தெரிந்து கொண்டேன். தெரிந்தும் இனி நெருப்பில் குதிப்பேனா. ஒரு முறை நான் எரிந்தது போதாதா...? இன்னொரு முறையுமா...? நான் எரிய வேண்டும்'' என்றாள் ஆத்திரமாக.



''என் அப்பா தப்பு பண்ணினார். தப்பு பண்ணினார் என்று சொல்றீங்களே... இப்போ நீங்கள் செய்வது என்ன. உங்கள் பணத்தை எடுத்து விட்டார் என்று விஷத்தை வைத்துக் கொன்னுருந்தாலும் நாங்கள் ஒரேடியாக நிம்மதியாகப் போயிருப்போம். இப்போ அவர் செய்த தப்பை நிரூபிக்கிறேன் என்று நீங்கள் இவ்வளவு பெரிய தப்பைச் செய்திருக்கீங்களே... இதை யார் தட்டிக் கேட்பது. உங்களுக்குத் தண்டனை கொடுப்பது யார்...? எதுவும் இவர்களால் பண்ண முடியாது என்ற தைரியம் தானே...''

''ஆமாடி. உன் சந்தோசத்தையெல்லாம் நான் அழித்து விட்டேன். உன் வாழ்வில் சந்தோசம், நிம்மதி என்ற பேச்சுக்கே இடமில்லை. இனி நிம்மதி என்றால் என்னவென்றே தெரியக்கூடாது. என் வீட்டுக்கு மருமகளா வரணும்னு கனவுகூடக் காணாதே. அதிலும் எனக்குப் பொண்டாட்டியா... என் படுக்கைக்கு வரணும் என்று நினைக்காதே...''

கணேசனாலும்.. விசுதாவாலும் ஒன்றும் பேச முடியவில்லை. கார்த்திக் வீட்டில் உள்ளவர்களும் எதுவும் பேசவில்லை. அவன் அப்பா மட்டும் ''என்ன கார்த்திக் இது. நீ இப்படிப் பண்ணுவது சரியா. உன்னை நிரூபிக்க ஒரு பெண்ணின் வாழ்வை அழிப்பதா. அவர்தான் இப்படித் தப்பு பண்ணினார் என்று இன்று சொல்பவன் என்னிடம் அன்றே சொல்லியிருக்கலாமே... எங்களுக்குத் தெரியும் அவர்தான். நான் இந்தப் பிரச்சனையை யாருக்கும் தெரியாமல் முடித்திருப்பேனே... என்ன இருந்தாலும் அவர் நம்மிடம் வேலை பார்ப்பவர். அவர் கஷ்ட நஷ்டம் எல்லாம் நமக்கும் பங்கிருக்குது. இப்போ நாமே அவரை இப்படி அவமானப்படுத்தலாமா...? அவர் வயசுக்கு ஒரு மரியாதை வேண்டாம்.

''நமக்குப் பிடிக்கவில்லையென்றால் வேலையை விட்டு நிறுத்தத்தான் உரிமை இருக்கே தவிர இப்படி அநாகரீகமாக நடப்பதற்கு இல்லை. நாங்கள் எதுக்குப் பெரியவங்க இருக்கோம்'' என்றார்.

அவரிடம் திரும்பினான். ''நான் தப்புப் பண்ணியிருப்பேன் என்றுதானே நீங்கள் இந்தக் கல்யாணத்திற்கு சம்மதித்தது. நான் பணத்தை எடுத்து கணேசனுக்கே கொடுத்து விட்டேன் என்று அவர் பெண்ணைக் கல்யாணம் செய்யப் போகிறேன் என்றதும் நீங்கள் முழுவதும் என் மீது நம்பிக்கை இழந்து விட்டீங்க. கணேசனிடம் கொடுத்து அவரை சம்மதிக்க வைத்தேன் என்று. இப்போ நம்புறீங்களா...? உங்களை நம்ப வைப்பதற்காகத்தான் இந்தப் பழி வாங்கும் படலம்.

''அவர் மகள் மேல் உள்ள பாசத்தை வைத்து அவரை பகடைக்காயாய் உருட்டினேன்.

''நீங்கள் எதுவும் சொல்லாமல் உன் இஷ்டம் என்றீங்க. ஏன்...? எதற்கு...? இப்படி ஒரு பதில் சொன்னீங்க. நான் தப்பு பண்ணியிருப்பேன் என்று தானே. என் மீது உங்களுக்கு அத்தனை நம்பிக்கை.

''அண்ணனுக்கு எப்படி பெரிய இடமா பெண் பார்த்தீங்க. தம்பிக்கு எப்படிப் பார்ப்பீங்க. எனக்கு மட்டும் ஏம்பா இப்படி ஒரு பொண்ணு பார்க்க வரலே... பொண்ணு எப்படி என்று என்னிடம் யாரும் கேட்கலே... படிச்சிருக்காளா... கறுப்பா, சிவப்பா... என்று ஒரு வார்த்தை எப்படி கணேசன் மகளைத் தெரியும் என்று, கேட்கலேயேப்பா...? அம்மாவாவது புலம்பினாங்க. என் மனசு என்ன பாடுபடும் என்று தெரிய வேண்டாமா...? நான் உங்க மகன்பா.. இப்படித் தப்புப் பண்ணுவேனா... இது உங்களுக்குத் தெரிய வேண்டாமா...?'' என்றான் கோபமாக.



''நீங்க எல்லோரும் அவளை விரும்பித்தான் கல்யாணம் பண்ணியிருக்கேன் என்று தானே நினைக்கிறீங்க. அதான் இல்லை. நானே இவளை இப்பத்தான் பார்க்கிறேன். என் மீது இப்போதாவது நம்பிக்கை வந்ததா...? இல்லையா...?'' என்றான்.

''உன் மீது நம்பிக்கை இல்லையென்றால் தானே உன் மீது நம்பிக்கை வர. எல்லாம் எனக்குத் தெரியும். எதற்கும் ஒரு வார்த்தை உன்னிடம் கேட்கலாம் என்றுதான் கேட்டேன். நீயும் இல்லையென்றாய். நான் அந்தப் பேச்சை அத்துடன் விட்டு விட்டேன். அதற்கு இப்படியொரு பொண்ணைப் பழி வாங்கலாமா...?'' என்றார்.

''இந்த அவமானத்தை அவரும் உணரணும்பா... அதான் இப்படிச் செய்தேன்.''

''சரி நடந்தது நடந்து போச்சு... அந்தப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு வா...'' என்றார்.

''நோ...ப்பா... அது என்னாலே முடியாது.''

''ஏன்...?''

''இவ தாய் ஒரு நடத்தை கெட்டவள். இவளும் வேறு ஒருவனை விரும்பினவள். இவள் எப்படி ஒழுக்கமுள்ளவளா இருப்பா. இவள் தாய் உடம்பில் ஓடும் இரத்தம் தானே இவ உடம்பிலும் ஓடும். இவ மீதோ... இவ அப்பா மீதோ எனக்கு நம்பிக்கையில்லை. வாங்க போகலாம்'' என்றான்.

''இது எல்லாம் தெரிந்துதானே அவ கழுத்திலே தாலி கட்டினே. அப்போ தெரியலையா அவ தாயைப் பற்றி. அவள் இன்னொருவனை விரும்புறா என்று. அவள் அடுத்தவனை விரும்புறா என்று தெரிந்தும் ஏன் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய். இப்ப அவனுடன்

ஓடிப் போவாள் என்று சொல்கிறாயே... இது முன்னாடியே உனக்குத் தெரியாதா. அவ விரும்பினவனைக் கல்யாணம் பண்ணியிருந்தாளாவது நிம்மதியாக இருப்பா. இப்போ அவனும் இல்லாமல், நீயும் வேண்டாம் என்றால் இந்தப் பெண்ணின் கதி என்ன. இப்ப இதுக்கு என்ன பதில் சொல்லப் போறே...''

''ஒரே பதில் இவளுடன் என்னால் வாழ முடியாது.''

கார்த்திக்கை நிமிர்ந்து விசுதா பார்த்தாள். அவள் கண்களில் கண்ணீர். அவனை மங்கலாகக் காட்டியது. அவளுக்கு மறுத்துப் பேச வாய் வரவில்லை. கண்ணாலே பார்த்தவனால் கூட இப்படிச் சொல்ல முடியாது. இவன் எப்படி இல்லாத ஒன்றை இத்தனை தெளிவாகச் சொல்கிறான். தன் தாய் ஓடிப் போனவ.... இதுவரை இந்த விஷயம் இவளுக்குத் தெரியாது.

என்னையும் நடத்தை கெட்டவள் என்கிறான். என்னை எப்போ அவனுடன் பார்க்கத்தான். அவனைப் பார்த்தது கூட இல்லையே.. பிறகு எப்படி. அப்பாவும் இல்லாததை எப்படிச் சொல்வார். இப்போ இவள் எது சொன்னாலும் இவன் ஏற்றுக் கொள்ள மாட்டான். பேசி நம்பாமல் போவதற்குப் பேசாமலே இருக்கலாம்.

மாலையைக் கழட்டி கணேசன் முன் வீசிவிட்டு காருக்குப் போய்விட்டான். மற்றவர்களும் பின் தொடர்ந்தனர். அக்கம் பக்கம் உள்ளவர்கள், கல்யாணத்திற்கு வந்தவர்கள் எல்லாரும் இவர்கள் இரண்டு பேரையும் கேவலமாகப் பேசிச் சென்றனர்.

கணேசன் காருக்கு ஓடினார். ஜனார்த்தனன் கையைப் பிடித்துக் கொண்டு ''சார் என் பெண்ணை விட்டு விட்டுப் போகாதீங்க. அவள் வாழ்வு என்னாவது. கல்யாணம்



முடிந்த அவளுக்கு நான் எவ்வளவு நாள் பாதுகாப்பாக இருக்க முடியும்?'' என்று அழுதார்.

ஜனார்த்தனன் தன் மகனைப் பார்த்தார். அவன் ஒரு கிரேக்க சிலை போல் நிமிர்ந்து அமர்ந்திருந்தான். மறுபடியும் திரும்பி விசுதாவைப் பார்த்தார். அவள் கண்களில் மிரட்சியுடன் நீர் வழிந்தோடியது கன்னத்தில். காலையில் போட்ட மாலை சிறிதும் வாடவில்லை. அதற்குள் அவள் வாழ்வு முடிந்து விட்டது.

அவள் கனவிலும் நினைத்திருக்க மாட்டாள். இன்று இப்படி நடக்கும் என்று ஏன் ஜனார்த்தனனோ... அவர் குடும்பமோ இதை எதிர்பார்க்கவில்லை. இவன் கோபக்காரன், பிடிவாதக்காரன். நினைத்ததை எதையும் சாதிப்பான் என்று தெரியும். ஆனால் இப்படிப் பண்ணுவான் என்று தெரியாதே.

அவன் அண்ணன் ராம்மோகன் எவ்வளவோ எடுத்துச் சொன்னான். ''வேண்டாம் கார்த்திக் அந்தப் பெண் பாவம். பெண் பாவம் பொல்லாதது. அவள் என்ன செய்வாள். நீ அந்தப் பெண்ணைக் கூட்டி வா. கல்யாணம் தான் ஆகிவிட்டதே.

''தாலி கட்டுமுன் நீ இப்படிப் பேசியிருந்தால்கூடப் பரவாயில்லை. தாலி கட்டிய பிறகு நீ இப்படிப் பேசலாமா..? அவள் யார் இப்போ உன் மனைவி. அவளை இத்தனை பேர் முன்னால் அவமானப்படுத்தினியே இந்த அவமானம் உனக்கில்லையா?

''உன் மனைவியை நீயே கேவலப்படுத்துறியே... இதைவிட வா... உனக்கு முன்னது அவமானமாகப் போய் விட்டது. அப்பதானே கேட்டார். உன்னை நம்பித்தானே உன்னைக்கூட பார்க்காமல் கழுத்தை நீட்டினாள்.

இப்போ அம்போ என்று விட்டு விட்டு வரலாமா...? இது யாருக்கு அவமானம் என்று உனக்குத் தெரியலையா. இது உனக்கு மட்டுமில்லை. நம் குடும்பத்துக்கே அவமானம். நம் அப்பாவுக்கு இது தலை குனிவுயில்லையா. இது எப்படியும் வெளியே தெரிந்து விடும். அப்பாவை எத்தனை பேர் கேட்பாங்க. உங்க பையன் இப்படிப் பண்ணிவிட்டானா என்று.

கணேசன் தப்பு பண்ணினார் என்று நமக்கு மட்டுந்தான் தெரியும். வெளியே யாருக்குத் தெரியும். ஒவ்வொருவரிடமும் நாம் போய் அவர் இப்படி தப்பு பண்ணினார். அதான் நான் இப்படிப் பண்ணினேன் என்று விளக்கம் சொல்ல முடியாது. உன் இடத்தில் இருந்து நீ பேசுவதால் சரி என்று சொல்றே... இதை யார் கேட்டாலும் தப்பு என்று தான் சொல்வார்கள். அவ கேஸ் போட்டால் நம் குடும்பம் மொத்தமும் உள்ளே இருக்கணும். இதில் ஒரு பெண்ணின் வாழ்வு அடங்கியிருப்பது உனக்குப் புரியவில்லையா?''

''என்னை நம்பி வரலேண்ணா என் பணத்தை நம்பி வந்தவள் அவளுக்கு நான் இல்லாவிட்டால் என்ன தாலி கட்ட மறு நிமிடமே ஒருவன் காத்திருக்கான். இவ குடும்பத்துக்கு இது ஒண்ணும் புதுசு இல்லையே... இரண்டாவது புருசன் இருக்கான்'' என்று அவளைக் கடித்துக் குதறினான்.

அவளை பெட்ரோல் கிணற்றில் தூக்கிப் போட்டு தீ வைத்திருந்தால்கூட இந்தக் கொதி கொதித்திருக்காது மனசும் உடம்பும். நெஞ்சைக் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

''கார்த்திக் நீ செய்வது தப்பு. அவர் செய்த தப்புக்கு இந்தப் பெண் என்ன செய்வாள். இதை நீ அவரிடமே



பேசி அவரை வீட்டுக்குக்கூட நீ அனுப்பிருக்கலாம். இல்லை பணம் எடுத்து வைத்து விட்டுப் போ என்றாவது நீ சொல்லியிருக்கலாம். எதுவும் இல்லாமல் அவர் உன்னைப் பழி வாங்க. நீ அவரைப் பழிவாங்க என்று எடுத்த முடிவு இப்போ இந்தப் பெண்ணின் வாழ்க்கையைப் பாதித்து விட்டது.

''இதற்கு யார்... பொறுப்பு. நீ தானே. ஒரு சின்னப் பிரச்சனையை ஊர் கூட்டி இப்படிப் பண்ணி விட்டாயே. பெண்ணின் மனநிலையைக் கொஞ்சம் யோசித்துப் பார்த்து ஒரு பெண் இத்தனை அவமானத்தைத் தாங்குவாளா. உன்னாலேயே தாங்க முடியாமல் தானே இப்படிப் பண்ணினேன் என்கிறே... இதனால் பாதிக்கப்பட்டது யாரு. நீயோ யாரோ இல்லை. அந்தப் பெண்தான். இனி அவளோட எதிர்காலம் என்னாவது'' என்றான் அவன் தம்பி சரவணன்.

''இவ்வளவு அக்கறை இருந்தால் அவளை கூட்டி வந்து நீ குடும்பம் நடத்து'' என்றான் கொதிப்பாக.

''சேச்சே...'' என்று கத்திவிட்டான் சரவணன். ''இப்படி மனைவியை நடுத்தெருவில் நிற்க வைத்து அவன் கூடப் போ இவன் கூடப் போ என்கிறாயே... இது உனக்கே வெட்கமாயில்லை. ஒரு அண்ணியை ஒரு தாய் ஸ்தானத்தில் இருப்பவளைப் போய் என்...னை நீ இப்படி இவ்வளவு கீழிறங்குவாய் என்று நான் நினைக்கவில்லை.

உன் வாழ்க்கையும் கெடுத்துக் கொண்டு, அவள் வாழ்க்கையும் ஏன் கெடுக்கிறாய்'' என்றான்.

''என் வாழ்க்கை ஏன்டா.. கெடப்போகுது. நான் வேறு கல்யாணம் பண்ணிக் கொள்வேன். அது மாதிரி அவளும் பண்ணிக் கொள்ளட்டும். நானா தடுக்கப் போறேன்'' என்றான் அலட்சியமாக.

# 7

''அண்ணா... இது உனக்கே நல்லாயிருக்கா. நீ தாலி கட்டிய மனைவியை இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள் என்கிறாயே. இது அவங்களுக்கு எத்தனை மன வேதனையாக இருக்கும். இது உனக்குத் தெரிய வேண்டாமா...?''

''அவளுக்கு எதுக்கு மனவேதனையா இருக்கும். அவ அப்பாவே இந்தக் கல்யாணத்துக்கு அவளை கெஞ்சித் தான் சம்மதிக்க வைத்திருக்கார். அதனால் அவளுக்கு சந்தோசமாகத்தான் இருக்கும். தன் காதலனோட ஊர் சுற்ற. காதலிக்கிறவன் ஒருத்தன். கல்யாணம் பண்ணிக் கொள்ள இன்னொருத்தன். இவகூட எவனும் குடும்பம் நடத்தமாட்டான்.

மனதில் அவனையும், படுக்கையில் என்னையும் சுமப்பவளை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். இவ முகத் தைப் பார்த்துக் கொண்டு என்னால் இருக்க முடியாது. இவளைப் பார்த்தாலே... இவ அப்பா செய்த திருட்டு, என் மீது பழி போட்டது தான் நினைவுக்கு வரும். இப்போ மகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு தினம்... தினம் சாகணும். தன்னால் தன் மகள் வாழ்வு இப்படி ஆகி விட்டதே என்று. இனித் தப்பு செய்வாரா. செய்யத்தான் மனசு வருமா...?

விசுதா... துவண்டு விட்டாள். வேறறுந்த கொடிபோல் மயங்கி வாசலிலேயே விழுந்தாள். அவன் கடுஞ் சொல்லை அந்தப் பேதையால் தாங்க முடியவில்லை.



கணேசன் மகளிடம் ஓடினார். விசுதா... என்று கத்தி விட்டார்.

காரை விருட்டென்று எடுத்துக் கொண்டு போய் விட் டான் கார்த்திக்.

நினைவுச் சங்கிலி அறுந்தது. கார் கிரீச்சென்ற பிரேக் குடன் குலுங்கி நின்றது. அவள் கன்னங்களில் கண்ணீர் ஓடி மார்புத் துணியை நனைத்திருந்தது.

ஒரு திடுக்கிடலோடு விழித்தாள். லேசாக பொழுது விடியத் தொடங்கியிருந்தது. 'இன்னும் சில மணி நேரத் தில் நாம் வீட்டை அடைந்து விடுவோம் என்ற நினைப்பே இதயத்தை உறைய வைத்தது. தான் வந்தது தப்போ... நினைக்கும் போதே இத்தனை பயமாக இருக்கே.... அங்கு எப்படி இருக்கப் போறேன்?'

வீட்டின் முன் கார் நின்றது. ஒருவிதப் பயத்தோடு மாமனாரைப் பார்த்தாள். அவள் கண் கலங்கியதைப் பார்த்தவர் அவள் தலையைத் தடவி ஆறுதலாக ''எனக்கு நீயும் ஒரு மகள் தான்மா... பயப்படாதே'' என்றார்.

அவர் என்னதான் தைரியம் சொன்னாலும் இவளுக்கு கால்கள் பின்னின. 'கல்யாணம் செய்து எப்படி வரவேண் டியவள் ஆரத்தி எடுத்து, கைப்பிடித்த கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு கர்வமாகத் தலை நிமிர்ந்து சுற்றத்தார் கேலி பண்ண நாணத்துடன் இந்த வீட்டில் வலது கால் எடுத்து வைத்து உள்ளே நுழைய வேண்டும். நானோ... இன்று அடிபட்ட புறாவாக இதயம் துடிக்க, தழும்பும் கண்களுடன் தனிப் பறவையாக இந்தக் கூட்டை நோக்கி வந்திருக்கிறேன்' என்று நினைத்தாள்.

'இந்தக் கூட்டில் என்னைச் சேர்த்துக் கொள்வார் களோ... நீ வேண்டாம் பறந்து போ... என்று விரட்டி விடுவார்களோ...' என்று அவளுக்குத் தெரியவில்லை.

வீட்டின் பிரமாண்டம் அவளை மிரட்டியது. இது மாதிரி சினிமாவில்தான் பார்த்திருக்கிறாள். வெளியில் தோட்டமும், முன்புறம் இருந்த வெண் தந்தத் தூண் களும், வரிசையான நீளமான படிக்கட்டுகளும், அதன் வர்ணமும், இப்போதான் கட்டின மாதிரி இருந்தது.

மாமனார் பின்னாடியே உள்ளே நுழைந்தாள்.

முன் ஹாலைத் தாண்டி உள்ளே வரவேற்பறையில் அத்தை அமுதா அமர்ந்திருந்தாள். வேறு நடமாட்டம் இல்லை. இன்னும் யாரும் எழவில்லை போல் இருக்கு.

மனைவியிடம் ''அமுதா நான் போய் விசுதாவைக் கூட்டி வந்திருக்கேன் கல்யாணத்திற்கு. அவளைப் பார்த்துக் கொள். இப்போ அவள் தங்குவதற்கு அறையைக் காட்டு, படுத்து ஓய்வெடுக்கட்டும்'' என்றார்.

''ஏன்...? இரவெல்லாம் நடந்தா வந்தாள். இல்லை காரை ஓட்டி வந்தாளா...? வந்ததும் ஓய்வெடுக்க. பின் சீட்டில் ஜம்பமாகப் படுத்துக் கொண்டுதானே வந்தாள். அவ வீட்டில் வேலை பார்த்தவள்தானே. ரொம்ப தாங்குறீங்க. இவ கல்யாணத்துக்கு வரலேன்னு யார் அழுதா...?'' என்று கழுத்தை நொடித்தாள்.

விசுதா குனிந்த தலை நிமிரவில்லை.

சத்தம் கேட்டு மகன்கள் மூவரும் வந்தனர். விசுதா நிற்பதைப் பார்த்து லேசாக அதிர்ந்தனர்.

முதலில் சுதாரித்து சரவணன் ''வாங்கண்ணி'' என்றான். ராம்மோகனும் வா.. விசுதா நல்லாயிருக்கியா'' என்றான்.

இருவருக்கும் பொதுவாகத் தலையை மட்டும் ஆட்டினாள்.

கார்த்திக் குதித்தான். ''இவளை இங்கு யாரைக் கேட்டு கூட்டி வந்தீங்க. இந்த நிமிடமே இந்த வீட்டை விட்டுப் போகச் சொல்லுங்க'' என்று கத்தினான்.



''நான் யாரைக் கேட்கணும்டா, சொல்லு உன்கிட்டே நான் பர்மிஷன் கேட்கணுமா. நான் உன் மனைவியா கவோ... என் மருமகளாகவோ இங்கு அழைத்து வரலே. என் மகளா என் விருந்தாளியா அழைத்து வந்திருக்கேன்.

''நான் அழைத்து வந்தவளை அவமானப்படுத்த இங்கு யாருக்கும் உரிமையில்லை. அப்படி உங்களை நான் வளர்க்கவுமில்லை என்று நினைக்கிறேன்'' என்று மனைவி, மகன் முகத்தைப் பார்த்தார்.

கார்த்திக் உடனே ''சாரிப்பா'' என்று அந்த இடத்தை விட்டுச் சென்றான்.

ஒரு மானின் மிரட்சியோடு நின்றிருந்தாள். பெரிய வனாந்திர காட்டுக்குள் காட்டு விலங்குகளுக்கு நடுவில் நிற்பது போல். கார்த்திக்கின் குரலைக் கேட்டதும் இதயத்தில் சிலீர் என்ற சிலிர்ப்பு ஓடியது. அவன் அவ் விடம் விட்டுச் சென்றும் அந்த சிலிர்ப்பு அடங்கவில்லை.

''இன்னும் அவனுக்குக் கோபம் தீரவில்லையோ. கொஞ் சம் கூடக் குறைந்த மாதிரி இல்லையே. முதன் முதலில் வந்த பெண்ணை வா என்று அழைக்கவில்லையென் றாலும் பேசாமலாவது இருக்கலாமே.

ஒரு மாமியார் வாம்மா என்று அழைக்கக்கூடாதா... இவர் மகனுக்காவது என் மீது கோபம் இருக்கலாம். என் அப்பாவால் பாதிக்கப்பட்டவர் இவருக்கு என்ன வந்தது. ஒரு வார்த்தை வந்தவளை நல்லா இருக்கியாம்மா என்று கேட்டால் என்ன குறைந்தா போய்விடும்.

ஒரு கணவனோட ஆதரவு இருந்தால் எனக்கு இப்படி அவமானம் நடக்குமா. புகுந்த வீட்டில் யாரோ போல. என்னை யாரும் வரவேற்கவில்லையே என்று நினைத்துக் கொண்டு, ஒரு கணவன் மனைவியை மதித்தால்தான்

மற்றவர்கள் மதிப்பார்கள், மரியாதையும் கிடைக்கும். கணவனே யாரைக் கேட்டுக் கூட்டி வந்தீர்கள் இவளை என்கிறபோது இவர்கள் என்னை எப்படி வரவேற்பார்கள் என்று நான் எதிர்பார்க்க முடியும்.'

ஜனார்த்தனன் ஒரு வேலைக்காரப் பெண்ணை 'மாதவி' என்று கூப்பிட்டார்.

அந்தப் பெண் "என்னாங்கய்யா" என்று ஓடிவந்தாள்.

''இவங்களை அந்த அறைக்கு கூட்டிப் போ'' என்றார்.

அதற்குள் சரவணன் முன்வந்து ''நான் கூட்டிப் போறேன்பா'' என்று அவள் பெட்டியை எடுத்துக் கொண்டு முன்னே சென்றான்.

விசுதாவைப் பார்த்து ''போம்மா'' என்று தலையசைத்தார்.

இவளும் சரவணன் பின்னாடி போனாள். அவன் ஒரு அறையைத் திறந்து உள்ளே போய் பெட்டியை வைத்து விட்டு விசுதாவிடம் ''இந்த அறையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் அண்ணி, தைரியமாக இருங்கள். எது வேண்டும் என்றாலும் தாராளமாக என்னிடம் கேளுங்கள். என்னை உங்க தம்பி மாதிரி நினைக்கலாம். என் கல்யாணத்திற்கு வந்ததற்கு ரொம்ப நன்றியண்ணி'' என்றான்.

அவள் லேசாகப் புன்னகை புரிந்தாள் ''ரொம்ப தேங்க்ஸ் தம்பி. நல்லாயிருக்கீங்களா. உங்களுக்குக் கல்யாணம் என்றதும் எனக்கு ரொம்ப சந்தோசம். பெண் எப்படி ரொம்ப அழகா'' என்றாள்.

அவனும் சிரித்துக் கொண்டே ''உங்கள் மாதிரி அழகில்லை. ஆனா... அழகிதான்'' என்றான்.

அவள் உதடு பிரியாமல் சிரித்தாள்.



''நான் வர்றேண்ணி'' என்று வெளியே வந்தான்.

விசுதா குளித்து உடைமாற்றி வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். டைனிங் ஹாலில் எல்லோரும் இருந்தனர்.

ராம்மோகனின் மனைவி கீதா, அவள் நாத்தனார் கவிதா மகன்கள் எல்லோரும் இருந்தனர்.

இவளுக்கு அங்கு போகவே தயக்கமாக இருந்தது. இவளைப் பார்த்த கீதாவும், கவிதாவும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

இவள் நிற்பதை யாருமே கண்டுக்கவேயில்லை. இவளுக்கு ஏன் வந்தோம் என்று இருந்தது. பேசாமல் அங்கிருந்தவளை இங்கு கூட்டி வந்து இப்படி அவமானப்பட வேண்டிருக்கு. இவர்கள் சாப்பிடக் கூப்பிடாமல் எப்படிப் போவது.

தன் வீட்டில் தானே மகாராணி, இளவரசி எல்லாம் இவள் இஷ்டம்தான். இப்படிப் பசிக்கு எப்போ யார் கூப்பிடுவார்கள் என்று காத்திருக்க வேண்டியதில்லை.

அப்போது சரவணன் விசுதாவைப் பார்த்து ''வாங்கண்ணி டிபன் சாப்பிட'' என்று அழைத்தான்.

மெல்ல விசுதா வரவும் சாப்பிட்டுக் கொண்டிருந்த கார்த்திக் 'விருட்'டென்று எழுந்து சென்று விட்டான். இதைப் பார்த்த விசுதா ''நான்... அப்புறம் சாப்பிட்டுக்கிறேன்'' என்று உள்ளே சென்று விட்டாள்.

## 8

விசுதா இப்படித் தனக்கு தனியறை கொடுப்பார்கள் என்று நினைக்கவில்லை. மனதில் ஒரு சின்ன நப்பாசை

இருந்தது. தன்னைக் கார்த்திக் அறையில் தான் தங்கச் சொல்வார்கள் என்று நினைத்தாள். இப்படித் தனியறை கொடுத்து இப்படி ஒதுக்கி வைப்பார்கள் என்று நினைக்க வில்லை. அவன் தன்னை ஏற்றுக் கொள்வான் என்று இவள் நினைக்கவில்லைதான். இருந்தாலும் ஒரு சந்தர்ப்பம்தான். ஆனானப்பட்ட விசுவாமித்திரரே... பெண்ணிடம் மயங்கி தன் தவத்தைக் கலைத்தார் என்று படித்திருக்கிறோமே... இவன் மட்டும் என்ன கல் சிலையா என்ன. என்னைப் பார்த்தும் மனம் சஞ்சலமடை யாதிருக்க. தாலி கட்டிய மனைவி தன் பக்கத்தில் இருக்க எந்த ஆண் மகனுக்குத்தான் மனம் துள்ளாது என்று மனதில் நினைத்தாள்.

விசுதாவுக்குத் தெரியாது கார்த்திக்கைப் பத்தித் தெரிந் திருந்தால் இப்படி நினைக்க மாட்டாள். பெண்ணைப் பார்த்ததும் மனம் சலனப்படும் ரகமில்லை கார்த்திக். அவனை எத்தனையோ பெண்கள் வலை வீசினர். அவன் வசீகரத்தில் மயங்கி இவன் விழவில்லை. இவன் மட்டும் என்ன கல்லா என்று நினைத்தாள். ஆம். கல் தான். மனதில் ஒன்று நினைத்தால் பிடிவதமாக நிறை வேற்றுவான்.

விசுதாவிடம் யாரும் பேசவில்லை. இவள் கால் வலிக்கு மட்டும் தோட்டத்தில் சுற்றினாள். கார்த்திக்கைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது. அவனைப் பார்க்க முடியவில்லை இவளால்.

கல்யாணத்திற்கு வந்திருந்த சரவணன் நண்பர்கள் தோட்டத்திற்கு வந்தனர். விசுதாவிடம் ஏதோ கேட்கவும் இவள் பதில் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

அவர்கள் போனதும் இவள் பின்னாடி கர்ண கடூரக் குரல் கேட்டது. ''இங்கும் ஆள் பிடிக்க வந்து



விட்டாயா...? உன் ராசி அப்படி. நீ என்ன செய்வே. உன் காதலன் நல்லா இருக்கானா...? அங்கு ஆடிய ஆட்டம் பத்தாதா...? இங்கும் வந்து உன் ஆட்டத்தைத் தொடங்கி விட்டாயா...? இது மானமுள்ளவர்கள் வாழும் இடம். உன்னையாட்டம் நாலையும் விற்றவர்கள் இல்லை. எனக்கு என் கவுரவந்தான் முக்கியம்'' என்றான் அனல் பறக்க.

அந்தக் குரலில் பதறி அவன் முகத்தை ஏறிட்டாள்.

''என்னடி பார்க்குறே... இவனை எப்படி கைக்குள் போடுவது என்றா. நீ என்ன திட்டத்தோடு வந்தே என்று எனக்குத் தெரியும். எப்படியும் உன்னை என் அறையில் தான் தங்கச் சொல்வார்கள். அப்போதே இந்த உடம் பைக் காட்டி என்னை மயக்கி விடலாம் என்று தானே நினைத்தே... இப்போ என்ன ஆனது. உனக்குத் தனி யறை. நீ இந்த வீட்டு விருந்தாளி. வந்தமா கல்யாணத்தை முடித்தோமா... வீட்டை விட்டுக் கிளம்பினோமா என்று இருக்கட்டும். உடனே கிளம்பி விடுவாய் என்று நினைக் கிறேன். ஏன்னா இதைவிட உன்னை டேமேஜ் பண்ண முடியாது இல்லையா...?''

''உன்னிடம் நான் அவ்வளவு சுலபத்தில் சிக்க மாட் டேன். எனக்கு எதுவுமே பிரஷ்ஷாக இருக்கணும். அடுத் தவன் யூஸ் பண்ணின உடம்... பொருளை எனக்குப் பிடிக்காது. தூக்கி எறிந்து விடுவேன்.''

''உங்களுக்கு இதயத்தில் இரக்கமே இல்லையா...? உங்க இதயம் என்ன இரும்பா... இல்லை கல்லா. இத் தனை கடுஞ்சொல்லால் பேச உங்களுக்கு எப்படி மனசு வந்தது'' என்றாள் தீனக்குரலில்.

''எனக்கு எதுக்குடி இரக்கம் வரணும். நீ யார்...? உன் மீது நான் இரக்கப்பட'' என்றான் பட்டென்று.

துடித்து நிமிர்ந்தாள். நீ... யா...ர்...? இந்தக் கேள்வி அவளை ரம்பமாய் அறுத்தது.

நான் இந்த வீட்டிற்கு வந்திருக்கவே கூடாது. நான் யார்...? இந்த வீட்டில் யாரை நம்பி வந்திருக்கேன். இத்தனை வருடத்தில் கோபம் குறைந்திருக்காதா...? தன்னை மன்னித்து ஏற்றுக் கொள்ள மாட்டானா...? காலம் எத்தனையே பெரும் காயங்களை மாற்றும் வல்லமை வாய்ந்தது. நடந்த நிகழ்ச்சியை ஒரு மனிதன் நினைத்துக் கொண்டிருந்தால். வாழ்வதுதான் எந்தக் காலம். அது மாதிரி இவன் காயங்களைக் காலம் ஆற்றியிருக்கும். முழுமையாக இல்லையென்றாலும் ஓரளவாவது மாற்றியிருக்கும் என்று நினைத்துத் தான் வந்தாள். அவன் அன்று பேசிய பேச்சுக்களை அத்தனையும் மறந்துவிட்டு.

''நானே உன்னை ஏற்றுக் கொள்ளவில்லையே... நீ எதுக்காக என் வீட்டிற்கு வந்தாய்... உன்னை நான் கூப்பிட்டேனா... என்னை வைத்துத்தானே... இந்த வீட்டில் நீ உறவு. நான் கூப்பிடாமல், என் அப்பா கூப்பிட்டதும் நீ எதற்கு வந்தாய். முதலில் என் அப்பாவைக் கைக்குள் போட்டுக் கொள்ளலாம். பிறகு இந்த வீட்டு ஆம்பளைங்களை வளைத்துக் கொள்ளலாம் என்பது தானே உன் திட்டம்.''

முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். அவனிடம் என்ன சொல்ல முடியும். நான் முதலில் வரவில்லை என்றுதான் சொன்னேன். உங்க அப்பா தான் பிடிவாதமாகக் கூட்டி வந்தார் என்று சொன்னால் ஏற்றுக் கொள்வானா...?

ஒரு கட்டிய கணவன் மனைவியை தன் அப்பாவோடு சேர்த்துப் பேசுபவனை என்ன சொல்ல முடியும். என்னைப் பற்றி இவன் சிந்திக்கவில்லை. கொஞ்சமாவது இவன் மனசு மாறாது என்று நினைத்துத்தான் வந்தாள்.



கார்த்திக் ''உனக்குக் குழந்தை கூட பிறந்திருக்கும் என்று நினைத்தேன்'' என்றான் அப்பாவியாக.

இவள் புரியாமல் ''குழந்தையா...'' என்றாள்.

''அதான் நீ விரும்புனியே உன் ஆசைக் காதலன் ரமேஷ். அவனை நீ கல்யாணம் பண்ணி, அதுக்குக் கூடத் தேவையில்லை. உன் கழுத்தில் தான் நான் கட்டிய தாலி இருக்கே. அதுவே போதுமே உனக்கு. அவன் வேறு எதற்குக் கட்ட வேண்டும். இதை சாட்சியா வைத்தே... நீ அவனுடன் படுக்..'' என்றான்.

அவள் உடம்பு குலுங்கியது.

''ஏங்க இப்படியெல்லாம் பேசுறீங்க. என் மனசை நோகடிப்பதில் உங்களுக்கு அவ்வளவு சந்தோசமா...? நான் தெரியாமல் வந்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். இனி நான் வரமாட்டேன்'' என்றாள் கண்ணீர் வழிய.

''இனியும் இங்கே வரணும் என்ற நினைப்பிருக்கா... எப்ப ஊருக்குப் போகப் போறே. ஏன்னா உன்னைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு உங்கப்பா செய்த துரோகம் தான் மனதில் வருது. உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவேன். முதலில் என் கண்ணில் படாமல் போய்ச் சேர்ற வழியைப் பார்.

''உங்கப்பாவுக்கு உன் கழுத்தில் தொங்கும் தாலிக் கயிறு. சாரி தூக்குக் கயிறைப் பார்த்து ரொம்ப பூரிச்சுப் போவாரே... இப்ப ரொம்ப நல்லா இருக்காரா... எப்படி உன்னை அனுப்பி வைத்தார். இரண்டு பேருமே எப்படா யார் வந்து கூப்பிடுவா என்று காத்திருப்பீங்க. அப்பா வந்ததும் மூட்டையைக் கட்டிக்கிட்டு வந்துட்டே... இங்கேயே இருக்கணும்னு நினைப்பிருந்தா அதைச் சுத்தமா அழிச்சுடு. இருந்தா தொலைத்து விடுவேன்.''

''நான் எங்கேங்கே போவேன். இப்படி போ... போன்னு விரட்டுறீங்களே...'' என்றாள் கண்ணீர் சரம் தொடுக்க.

''இத்தனை வருசமா எங்கிருந்தே. என்னை நம்பியா பொறந்தே. இப்பவும் இருக்கே. அது மாதிரியே இருக்க வேண்டியதுதானே. என்ன இங்கே வந்து வீட்டை என்னை, என் வசதியைப் பார்த்ததுமே இங்கேயே அட்டையா ஒட்டிக்கலாம்னு பார்க்கிறியா...? ஒரு திருடனோட மகளுக்கு இத்தனை உயர்ந்த வாழ்க்கை கேட்குதா...? அப்பனாட்டமே... பணத்தைப் பார்த்ததும் மனசு மாறி விட்டதா. எப்படியாவது இங்கேயே இருக்கணும் என்று என் அண்ணி எத்தனை பெரிய பணக்காரங்க தெரியுமா...? இப்ப சரவணனுக்குப் பார்த்திருக்கும் பெண்ணும் எத்தனை வசதி தெரியுமா...? ஆனா நீ... ஒரு பிச்சைக்காரி. என் மனைவி என்று சொல்வதற்கே... ஏன் நினைப்பதற்கே எனக்கு அருவருப்பா இருக்கு. நாளைக்கு வருபவர்களைப் பார். எத்தனை நகை, கார் என்று வருவார்கள். யார் கேட்டாலும் என் மனைவி என்று சொல்லி விடாதே.... வீட்டு வேலைக்காரி இது மாதிரி என்று சொல்லிக்கொள்'' என்றான் இரக்கமே இல்லாமல்.

''முதலில் அதைச் செய்யுங்க. என்னைக் கொன்னு போட்டீங்கன்னா நான் நிம்மதியா ஒரேடியா போய்ச் சேர்ந்திடுவேன். பிறகு நீங்க நிம்மதியாக இருக்கலாம்'' என்றாள்.

''இப்ப எனக்கு நிம்மதிக்கென்னடி குறைச்சல். நான் சந்தோசமாகத்தான் இருக்கேன். என் லவ்வரோட'' என்றான்.

அவள் மனம் அதிர்ந்தது. 'லவ்வரா... என்ன சொல்கிறான். இவன்.'



அவன் அவளை வெறுப்பேத்தத்தான் சொன்னானே தவிர உண்மையில்லை. சரவணனுக்குப் பெண் பார்க்கு முன் அவன் அப்பா கார்த்திக்கிடம் கேட்டார். ''நான் சரவணனுக்கு பெண் பார்க்கப் போகிறேன். நீ என்ன சொல்கிறாய். நீ விசுதாவைக் கூட்டி வந்து குடும்பம் நடத்துகிறாயா... இல்லை வேற பெண் உனக்குப் பார்க்கட்டுமா. நீ இப்படி இருக்கும்போது உன் தம்பிக்கு முடிப்பது சரியில்லை. எத்தனையோ பேர் தெரியாதவர்கள் கேட்பார்கள், ஏன் இவனுக்கு முடிக்காமல் சின்னவனுக்கு பேசி முடித்து இருக்கீங்க என்று. நாளை பெண் பார்க்கும் வீட்டிலும் இந்தக் கேள்வி வரும். நீயும் நினைக்கலாம். நான் இப்படி இருக்கும்போது என்னை ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் தம்பிக்குக் கல்யாணம் பண்ணுகிறார்களே என்று. நீ ஏற்கனவே சொன்னவன் தான். அவர்களுக்கு எல்லாம் பெரிய இடம் பார்த்து முடித்தீர்களே என்று. நீ இப்படியே இருந்தால் எப்படி. உன் முடிவைச் சொல்'' என்றார்.

அவன் அம்மாவும் ''ஆமாடா நீ வேற பெண் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கொள். நீ ஏன் இந்த வயதில் சன்னியாசி மாதிரி ஆபீஸ் போகவும் வீட்டுக்கு வரவுமாக இருக்கிறே. ஒரு வார்த்தை சொல். நான் பார்க்கிறேன். சொந்தத்தில் பெண் இருக்கு. சொன்னால் புரிந்து கொள்வார்கள். பிரச்சனை வராது'' என்றார்.

அவன் அப்பா அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று.

கார்த்திக் ''எனக்குக் கல்யாணம் வேண்டாம். தம்பிக்கு பார்த்து முடிங்க'' என்றான் தீர்மானமாக.

அவன் அம்மா ''ஏன்டா இப்படிச் சொல்றே. அந்த வசுதாவோ... விசுதாவோ நம்ம குடும்பத்துக்குச் சரிப்பட்டு வருவாளா. ஒரு திருடன் மகளை நம் வீட்டில் வைத்திருக்க முடியுமா. நம் வீட்டிலும் எவ்வளவு பொருள் இருக்குது. இவளைக் கூட்டி வந்து வைத்துக் கொண்டு காவல் காக்க முடியுமா. அவளை நீ மறந்துவிடு'' என்றார் வேகமாக.

ஜனார்த்தனனுக்கு வந்ததே கோபம். ''நீயெல்லாம் ஒரு பெண்ணா. ஒரு தாயா. ஒரு மகன் தப்பு பண்ணினால் புத்தி சொல்லி திருத்துவதை விட்டுவிட்டு இப்படி அவளை மறந்துவிடு. திருடி என்கிறே. அவன் அப்பா செய்த தப்புக்கு அந்தப் பெண் என்ன செய்வாள். அவளின் நிலமை என்ன. இனி யார் அவளைக் கல்யாணம் செய்து கொள்வார்கள். உன் பையனுக்கு வேறு பெண் பார்க்கிறேன் என்கிறே'' என்றார்.

''முதலில் நானா கேட்டேன். நீங்கதானே கேட்டீங்க. இப்ப என்ன வந்து குறை சொல்றீங்க'' என்றாள் அவளும் ஆத்திரமாக.

''நான் என்ன கேட்டேன். உன் தம்பிக்கு பெண் பார்க்கப் போகிறேன். நீ என்ன சொல்கிறாய். அந்தப் பெண்ணை கூட்டி வந்து குடும்பம் நடத்துகிறாயா இல்லை வேறு பெண் பார்க்கட்டுமா என்று அவன் மனதில் என்ன இருக்கு என்பதை அறிய நான் கேள்வி கேட்டேன். நீ அதான் சான்ஸ் என்று அவளை விட்டு வேறு கல்யாணம் பண்ணிக் கொள் என்கிறே... நான் கேட்ட கேள்விக்கும், நீ கேட்கும் கேள்விக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து பார்'' என்றார்.

''அவன் ஆண் பிள்ளை என்றதும் நீ வேறு கல்யாணம் செய்து கொள் என்கிறே. அந்தப் பெண்ணின் கதி என்ன.



அவளும் நல்ல வசதியாக, அம்மா, அப்பா, அண்ணன் இருந்தால் இந்நேரம் உன் மகன் கட்டிய தாலியைக் கழட்டி அவன் மூஞ்சியில் வீசி விட்டு வேறு கல்யாணம் பண்ணியிருப்பாள். அவள் அப்படிச் செய்ய முடியாது. ஏன்னா அவள் சூழ்நிலையும் ஒரு காரணம்.

''சே... ஒரு பொம்பளை செய்யும் வேலையா இது.

''இதுல என்னடி பொம்பளை ஆம்பளை என்ற வித்தியாசம். கடவுள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் தான் தந்திருக்கார். அவள் மட்டும் என்ன ஜடமா. உன் மகன் கல்யாணம் செய்து குடும்பம் நடத்தலாம். அவள் உன் மகன் தாலி கட்டி விட்டான் என்ற காரணத்திற்காக காலம் பூராவும் எந்த ஒரு சுகத்தையும் அனுபவிக்காமல் இருக்கணுமா...?

''ஏன்னா உன் மகன் ஆம்பளை. ஆம்பளை தப்பு செய்தால் இந்த சமுதாயம் ஏற்றுக் கொள்ளும். அதுவும் ஒரு பெண் செய்தால் அவளை திமிர் பிடித்தவள் என்று இந்தச் சமுதாயம் தூற்றும்.

''உன் மகனுக்கு இருக்கும் ஆசா பாசங்கள்தான் அவளுக்கும் இருக்கும். அவள் மட்டும் இவனை நினைத்துக் கொண்டு இருக்கணும். இவன் இன்னொருத்தியோடு கொஞ்சிக் குலாவணுமா?'' என்றார். காட்டமாக.

''அது அவ தலையெழுத்து. அதுக்கு என் பிள்ளை என்ன செய்ய முடியும்?'' நொடித்தார்.

''பெண் பாவம் பொல்லாதது. பாத்து நடந்துக்குங்க. தப்பு செய்தவனுக்குத் தண்டனை கொடுக்க நீங்கள் யார். கடவுளா... இவ்வளவு பெரிய தப்பை தண்டனைங்கிற பேர்ல நீங்க செய்றீங்களே... உங்களுக்கு யார் தண்டனை கொடுப்பது. நல்லா யோசிங்க'' என்றார்.

கார்த்திக் ''எதுக்காகப்பா எனக்காக நீங்க சண்டை போட்டுக்கிறீங்க. நான் முடிவா சொல்கிறேன். என் கல்யாணத்தைப் பத்தி இனி பேசாதீங்க.''

''அப்போ அந்தப் பெண்ணைக் கூட்டி வந்து குடும்பம் நடத்து'' என்றார்.

''என்னால் முடியாது. இது என் சொந்த விஷயம். இதில் நீங்கள் தலையிட வேண்டாம்'' என்றான் சுள்ளென்று.

இரவு படுத்தவனுக்கு தூக்கம் வரவில்லை. எதனால் நான் எனக்கு வேறு பெண் பார்க்க வேண்டாம் என்று சொன்னேன். இது அவனுக்கே புரியாத புதிராக இருந்தது. குழம்பினான். காரணம் தெரியாமல்.

வீட்டில் எல்லோரும் பேசிச் சிரித்தனர்.

இவள் அறையை விட்டு வெளியே வருவதில்லை. கார்த்திக் அத்தனை பேருக்கும் பதில் சொன்னான். அப்படிக் கலகலப்பாகப் பேசிச் சிரித்தான்.

இவளுக்கு ஆத்திரம் பொங்கிற்று. 'என்னிடம் மட்டும் ஒரு வார்த்தைக்குப் பஞ்சமாப் போயிற்று. அப்படியே பேசினாலும் என்னைக் குத்திக் குதறுவது. இப்போ எப்படிப் பேசிச் சிரிக்கிறான்.'

அவள் மாமியார் அமுதா விசுதாவைக் கூப்பிட்டார். அவள் வந்ததும் ''நீ மூன்று வேளையும் சாப்பிட்டுவிட்டு சும்மா தானே இருக்கே. இந்த வேலைக்காரியோடு சேர்ந்து வேலை செய்யக்கூடாதா'' என்றார்.

''சரி செய்கிறேன்'' என்று அங்கு குவிந்து கிடந்த பாத்திரங்களை விலக்கினாள். அறைக்குள் அடைந்து கிடப்பதற்கு இதுவே மேல் என்று.

வீடு துடைத்து, துணி துவைத்து, அடுப்படியில் காய் நறுக்கி, எல்லா வேலைகளிலும் அவர்களுக்கு உதவினாள்.



அவளுக்கு இதில் ஒரு திருப்தி இருந்தது. அறையில் சும்மாவே இருப்பதற்குப் பதில் இந்த வேலையாவது செய்யலாம். வேலையில் ஈடுபட்டால் மனது வேறு எதுவும் சிந்திக்காது என்று நினைத்தாள். ஆனால் கை வேலை பார்த்தாலும் மனது பழைய நிகழ்ச்சிகளில் அசை போட்டது.

நாளை கல்யாணம். இரவே வீட்டிற்கு சொந்தக்காரங்க எல்லாமே வந்து விட்டனர். விசுதாவிடம் ஜனார்த்தனன் ''நீ மேலே கார்த்திக் அறையில் தங்கிக் கொள். இந்த அறை வந்தவர்களுக்கு வேண்டும். கார்த்திக் கூட்டிப் போ'' என்றார்.

விசுதா ஆடிப் போய் விட்டாள். 'இவன் அறையிலா. இவன் கூட்டிப் போவானா. சும்மாவே குத்திக் குதறுபவன் இவனிடம் மாட்டினால் விடுவானா' என்று மலைத்தாள்.

கார்த்திக்கின் முகம் அஷ்ட கோணலானது. அத்தனை பேர் முன்னிலையில் எதுவும் பேச முடியவில்லை. ''வா'' என்ற தலையசைப்புடன் முன்னே சென்றான்.

இவள் இதுவரை இவளுக்கு தந்த அறையைத் தவிர வேறு எங்கும் சென்றதில்லை. இப்போ அடுப்படி மட்டும். அவன் பின்னாடியே ஆட்டுக்குட்டி போல் சென்றாள்.

அவன் அறையைத் திறந்தான். அது அத்தனை பெரிதாக இருந்தது. ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் உள்ள சூட் போல இருந்தது.

உள்ளே நுழைந்ததுமே ஒரு பெரிய ஹால். அதன் இடதுபுறம் பால்கனி கதவு. வலது புறம் ஒரு அறை. அதில் எல்லா வசதியும் இருந்தன. ஹாலைத் தாண்டி உள்ளே சென்றால் பெரிய அறை. அது அவன் அறை போல. இதில் நீ இருந்து கொள். இதைவிட்டு நீ உள்ளே

வரக்கூடாது'' என்றான் வலது புறம் உள்ள அறையைக் காட்டி.

அவள் பதிலேதும் சொல்லவில்லை.

''அப்பா சொல்லி விட்டாரே அத்தனை பேர் முன்னாடி என்றுதான் கூட்டி வந்தேன். உனக்காக இல்லை. நீ ரொம்பப் பெரிசா நினைக்காதே. இவன் அறைக்குள் வந்து விட்டோம். இனி இவன் படுக்கைக்குப் போய்விட லாம் என்று கனவு காணாதே...'' அவளைக் குத்தினான்.

''..............''

''நான் உன்னை மனைவியாகவே ஏத்துக்கலையே... என் வீட்டில் இருக்க சாப்பிட உனக்கு வெட்கமாயில் லையா...? இதுக்குப் பேர் என்ன'' என்றான்.

''இருக்குங்க. நீங்கள் சொல்வதில் தப்பேயில்லை. நீங்கள் சொல்வது சரிதான். எந்த பந்தமுமில்லாமல் நான் உங்கள் வீட்டில் சாப்பிடுவது தங்கியிருப்பது தப்புத்தான். இதுக்குப் பேர் என்னவென்று உங்களுக்கேத் தெரியும். அதையும் என் வாயாலேயே... சொல்லட்டுமா...? உங்க வீட்டில் எத்தனையோ வேலைக்காரங்க இருக்காங்களே... அதுல நான் ஒருத்தியா இருந்துட்டுப் போறேன்...'' அவ ளுக்குக் குரலே எழும்பவில்லை. கண்ணீர் மல்கச் சொன் னாள்.

''நீ கீழே இருக்கும்போதே எனக்குப் பயமாக இருந்தது. நீ என் அறைக்குள் வந்து உன் அப்பன் மாதிரி எதையும் எடுத்துக் கொண்டு போய் விடுவாயோ என்று, இல்லை உன் அப்பனே சொல்லிக் கொடுத்திருப்பான். இப்படி இப்படிச் செய் என்று. இப்போ என் அறையிலேயே நான் எந்நேரமும் உனக்குக் காவல் இருக்க முடியுமா...?''



அவள் மனம் ரணப்பட்டுப் போனது. அவள் அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள். ''என்னை விட்டுவிடுங்க'' என்று.

இரவு கீழே விசுதா சாப்பிட வரவேயில்லை. ஒவ் வொன்றையும் நினைத்து நினைத்து அப்படி அழுதாள். 'இப்படிப் பேசுகிறானே. இவனோட பாராமுகந்தான் எல் லோரையும் என்னைப் பேச வைக்குது. தப்பே பண்ணா மல் இப்படி தண்டனையை அனுபவிக்கிறேன். கடவுளே... என்னை உன்னோடு கூட்டிக்கொள்' என்று அழுதாள்.

## 9

தன் அம்மாவைப் பற்றி எத்தனை கீழ்த்தரமாகப் பேசுகிறான். தன் அப்பாவிடம் கேட்டால் வாயே திறக்க மாட்டேங்கிறார். மேலும் கேட்டு அவரை நோகடிக்க விரும்பவில்லை. அவள் போனவள் போய் விட்டாள். இனி அதைப் பற்றிக் கேட்டு நான் என்ன பண்ணப் போறேன் என்று விட்டுவிட்டார்.

அப்பா என்ன செய்கிறாரோ. இப்படிக் குடித்துக் குடித்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறார். அவருக்கு ஏதாவது ஒன்று என்றால் நான் என்ன செய்ய முடியும். எனக்கு யார் ஆதரவு. அப்பாவுக்குப் பிறகு நான் உயிருடன் இருக்கக் கூடாது. அவர் கூடவே நானும் போய்விடணும்.

ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டிவிட்டால் அவள் சுகதுக்கங்கள் அனைத்தும் அவனைச் சார்ந்தது ஆகும். சகலத்தையும் விட்டு அவனை மட்டுமே நம்பி வீட்டை விட்டு வருபவள். இவன்தான் உன்னை என்

மனைவியாகவே ஏற்றுக் கொள்ளவில்லை என்கிறானே. இவன் எப்படி பங்கு பெறுவான். இவன் தன்னை ஏற்றுக் கொள்வான் என்ற ஆசையை மனதில் இருந்து தூக்கி எறிந்தாள். விடிய... விடியத் தூங்கவில்லை.

விடிந்தால் கல்யாணம். இவள் குளித்து சாதாரணமாக ஒரு சின்ன கரை வைத்த பட்டுப் புடவை கட்டி தலையை தளரப் பின்னி, ஒரு முத்துமாலை, முத்து தோடு ஜிமிக்கி, கைகளில் இரண்டு வளையல், இதுதான் அவள் அலங்காரம், கண்ணாடியில் பார்த்தாள்.

கீழே இறங்கி வந்தாள். எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். அவளின் அழகு அத்தனை பேரையும் பிரமிக்க வைத்தது. கார்த்திக் சட்டென பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

கவிதாவின் மாமியார் ''பூ வைக்கலையாம்மா இப்படி வெறுந்தலையோட இருக்கே. இந்தா வைத்துக் கொள்'' என்று கொடுத்தாள்.

கவிதா வேகமாக ஓடிவந்து அதைப் பிடுங்கிக் கொண்டாள். ''அத்தை அதை நம் வீட்டு வேலைக்காரிக்கு வைத்திருந்தேன். அதை எடுத்து ஏன் அவளுக்குக் கொடுக்கிறீங்க'' என்றாள் மரியாதை இல்லாமல்.

வாங்கிய பூவை விசுதா திருப்பிக் கொடுத்து விட்டாள்.

''பரவாயில்லை கவிதா. இந்தா இதைக் கொடுத்து விடு'' என்று கொடுத்தாள்.

விசுதாவை அறைய கை ஓங்கினாள். சட்டென வந்து அவள் கையை அவன் கணவன் பிடித்துக் கொண்டான். ''கவிதா... உனக்கு அறிவு இருக்கா. என்னதான் இருந்தாலும் அவள் உன் அண்ணனின் மனைவி. அந்த மரியாதை வேண்டாம் உனக்கு'' அதட்டினான்.



கவிதா அழுது விட்டாள். ''என் பெயரைச் சொல்ல இவளுக்கு என்ன அருகதை இருக்கு. இதுவரை இவர் என்னைத் திட்டியதில்லை. இப்ப திட்டிவிட்டார். எல்லாம் உன்னால்தானே, நீ இப்படி ஆள் மயக்கியா இருப்பே என்று நான் நினைக்கவில்லை.''

கவிதா கணவன் விட்டான் ஒரு அறை. ''என்ன உன் மனதில் நினைத்துக் கொண்டிருக்கே. ஒரு பெண்ணைப் பார்த்து ஒரு குடும்பப் பெண் பேசும் வார்த்தைகளா இது. அவளை இப்படி நீ இத்தனை பேர் முன்னாடி இப்படிப் பேசுறியே... என்னையும் சேர்த்து, இதில் இருந்தே தெரிந்து விட்டது உன் வளர்ப்பு. என்ன லட்சணமா நீ வளர்ந்திருக்கே என்று. யாரை நீ அவமானப்படுத்துறே... உனக்கு என்ன அருகதை இருக்கு. உன் அண்ணன் என்னன்னா என் மனைவி இல்லைங்கிறான். நீ என்னமோ ஒழுக்கங்கெட்டவள் என்று பேசுறே... அவளைக் கூட்டி வந்து வீட்டு வேலைக்காரி மாதிரி உங்கம்மா நடத்துறாங்க. இதுக்கெல்லாம் உங்களுக்கு யார் உரிமை கொடுத்தாங்க.

''பணம் இருந்தால் எப்படி வேணா நடக்கத் தோணுமா. அவளும் ஒரு வயசுப் பெண் தானே. நீயெல்லாம் ஒரு தப்பே பண்ணினதில்லையா. தப்புப் பண்ணி விட்டால் உனக்கு வாழ்க்கை பூராவும் நான் தண்டனை தரட்டுமா. தப்பை மன்னிப்பதும், விட்டுக் கொடுத்து வாழ்வதும் தானே வாழ்க்கை. உங்கம்மா எல்லாம் இத்தனை வருட வாழ்க்கையில் தப்பே பண்ணினதில்லையா. உங்கப்பா இப்படித்தான் உங்கம்மாவை ஒதுக்கி வைத்தாரா. உன்னை நீ இப்ப கேட்ட கேள்விக்கு நான் உனக்கு என்ன தண்டனை தரட்டும். நீ இப்ப அவளைப் பேசுற மாதிரி என்னைக் கேவலப்படுத்துறே. உன் அண்ணனைவிட நான் எந்த விதத்தில் குறைந்து போய் விட்டேன்.

உனக்கு என்ன தைரியம் இருக்கணும் என்னை இப்படிப் பேச. இத்தனை வருடம் என்கூட வாழ்ந்தும் இப்படிப் பேச இதில் இருந்தே தெரியுதே உன் குடும்ப புத்தி. உனக்கு இதுவரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இது மாதிரிப் பேச, நடக்க. இப்ப கிடைத்தவுடன் நீ அதை பயன்படுத்திக் கொண்டாய். இந்த வார்த்தையை நான் மறக்க முடியுமா. இல்லை இது மாதிரி உன்னை நான் அடுத்தவனுடன் சேர்த்துப் பேசுவேணாடி. அப்படிப் பேசினால் நான் என்ன ஆம்பளை. இல்லை அடுத்தவனை இப்படி விட்டுப் பேச வேடிக்கை பார்ப்பேனா...?''

''நீ இப்படிப் பேசினதுக்கு உன்னை வீட்டை விட்டு நான் விரட்ட முடியுமா. என் அம்மாதான் அப்படிச் செய்வாங்களா. இல்லை உன்னை இதுவரை இப்படித்தான் நடத்தினாங்களா. வீட்டுக்குப் பெரியவங்க பசங்க தப்பு பண்ணினா புத்தி சொல்லித் திருத்தணும். அவங்களும் கூடச் சேர்ந்துக்கிட்டு இப்படிப் பண்ண் னா எப்படி, தாலி கட்டியது கட்டியதுதானே. பிடிக்குதோ பிடிக்கவில்லையோ இவன் எதுக்கு தாலி கட்டினான். நானும் ஏதோ காரணம் காட்டி உன்னை வீட்டை விட்டு அனுப்பினால் சும்மா இருப்பாங்களா. ஏன் நீ அங்கு தப்புப் பண்ணினதில்லையா. இல்லை என் அம்மாவை நீ எதிர்த்துப் பேசியதில்லையா. அதுக்காக உன்னை என் மனைவி இல்லை என்று நான் சொல்ல முடியுமா. என்ன செய்வது, அம்மாவும் முக்கியம்தான். மனைவியும் முக்கியம்தான். என்னையே நம்பி வந்தவளையும் நான் கைவிட முடியுமா. இது உனக்கும் தெரியும்தானே. நீ எப்படி இப்படி அவளைப் பேசலாம்.

''அவள் என்ன இப்ப என்னை மயக்கினா. உன் அண்ணன் மனைவி எனக்கு என்ன உறவு வேண்டும்.



தங்கையல்லவா. கூடப் பிறந்தால்தான் தங்கையா. உன் அண்ணன்கள் எல்லாம் இப்படித்தான் முறை தவறி நடக்கிறாங்களா... இனி இது மாதிரிப் பேசினே நான் மனுசனா இருக்க மாட்டேன். உன் அண்ணனாவது பாதிக்கப்பட்டவன். உனக்கு என்ன கேடு வந்தது. உனக்கு எதுவும் அவள் தீங்கு செய்தாளா. அவள் இடத்தில் நீ இருந்தால் என்ன செய்திருப்பாய். பாவம் இல்லை. இத்தனை வருடம் சென்று வந்திருக்காள். எதை நம்பி, யாரை நம்பி. நீ சொல்ற நான் என் பிறந்த வீட்டை விட்டு உங்களையே நம்பி வந்திருக்கேன். எனக்கு எல்லாமே நீங்கதான் என்கிறே. அது மாதிரிதானே அவளும் நினைப்பாள். தாலியைக் கட்டிவிட்டு விட்டு குடும்பமே நீங்க பாட்டுக்குப் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம். அவள் கோர்ட்டுக்குப் போனால் உங்க மரியாதை என்னாகும். பெரிய மனுசன்னு வெளியே பேர் எடுத்தாப் பத்தாது. அது மாதிரி நடக்கணும்'' என்றான்.

விசுதாவுக்கு உயிரே போய்விடும்போல் இருந்தது. அத்தனையும் கேட்டுக் கொண்டு கார்த்திக் பேசாமல் தான் இருந்தான்.

ஜனார்த்தனன் ''என்ன மாப்பிள்ளை செய்வது. நீங்கள் சொல்வது போல் என் பிள்ளைகளை நான் சரியாக வளர்க்கவில்லை போல் இருக்கு. நீங்கள் பேசுவதில் தப்பில்லை. நான் சரியாக வளர்த்திருந்தால் பொண்ணும் இப்படிப் பேசமாட்டாள். மகனும் இதை கேட்டுக் கொண்டு இருக்க மாட்டான். சாதாரணமாக ஒரு பூ கொடுத்ததுக்கு இத்தனை கேவலமா அவளைப் பேசிட்டா. ஏன் கட்டின புருசன் சரியில்லை. அதான் இத்தனை தரக்குறைவா இளக்காரமாப் பேசுறா. ஒரு வேலைக்காரிக்கு எடுத்து வைத்திருக்கும் பூவை ஏன் அவளுக்குக் கொடுக்குறே

என்கிறா. அப்போ ஒரு வேலைக்காரியைவிட அவளைக் கேவலமா நினைக்கிறா. வேலைக்காரியையும் ஏன் நாம் கேவலமா நினைக்கணும். அவங்களுக்கும் இது தொழிலுக்கு வருவது போலத்தானே. நம் வேலையை அவர்கள் செய்கிறார்கள். இல்லையென்றால் எத்தனையோ குடும்பங்கள் நாறிப் போய்டும். அவர்கள் இருக்கப் போய்த் தானே நாம் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம்.

''எனக்கு இவ்வளவு வயசானாலும் இது மாதிரி என் மனைவியை யாராவது பேசியிருந்தால் அடித்து நொறுக்கியிருப்பேன். நீங்கள் இருக்கும்போது நான் எந்த உரிமையும் எடுத்துக் கொள்ள முடியாது. நான் என் மனைவியையும் சரியா கண்டித்து குடும்பம் நடத்தவில்லை. அதான் இத்தனை குளறுபடிக்கும் காரணம். ஒரு மனைவியை கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பா கண்டிக்கணும். முதலில் விட்டுவிட்டு பிறகு வருத்தப் படுவதில் பிரயோஜனம் இல்லை.''

அத்தனை பேரும் வாயைத் திறக்கவில்லை.

''மாமா நான் உங்களை அவமானப்படுத்தணும் என்கிற நோக்கத்தில் நான் பேசவில்லை.''

''புரிகிறது மாப்பிள்ளை. எந்த மனசாட்சி உள்ள மனுசனும் கேட்கிற கேள்விதான். நீங்கள் சொல்லிவிட்டீங்க. நான் சொல்ல முடியவில்லை. நீங்கள் சொன்னதிலேயோ, கேட்டதிலேயோ எந்தத் தப்பும் இல்லை. இதில் வருத்தப்பட என்ன இருக்கு.''

''ஒரு பூவுக்கே உங்கள் மகள் இப்படிப் பேசுகிறாளே என்ற வருத்தம் தான்'' என்றான்.

''எனக்கும் தெரியுது மாப்பிள்ளை. நானும் உங்களை மாதிரிப் பேசி அவளைக் கூட்டி வந்து குடும்பம் நடத்து



இல்லையென்றால் வீட்டை விட்டுப் போ என்று சொல்ல எனக்கு நிமிஷ நேரம் ஆகாது. இது வாழ்க்கை அதுவும் ஒரு பொண்ணு சம்மந்தப்பட்டது. இதில் கட்டாயப்படுத்தக் கூடாது. அவனா விரும்பி இவளை ஏத்துக்கணும். நான் பிடிவாதமா இவளைக் கூட்டி வந்துவிட்டு இது மாதிரி இவர்கள் சித்திரவதை செய்தால் நல்லாவா இருக்கும். இங்கு வந்து இப்படி அவஸ்தைப் படுவதைவிட அவள் வாழாமல் அங்கிருப்பதே நல்லது. இங்கு வந்தாலும் அதுதானே நடக்கும். ஆனா இவளை இப்படியே விடமாட்டேன். எனக்கு பிள்ளை இருந்தால் என்ன செய்வேனோ... அதைக் கட்டாயம் நான் செய்வேன். என் சொத்தில் இவளுக்கும் சரி பங்கு இருக்கு. என் பொண்ணா இவளை நான் பார்த்துக்குவேன். என் உயிர் உள்ளவரை. பிறகு நான் இதுக்கு மேலே என்ன செய்ய முடியும். மகன் செய்த தப்புக்கு இப்படித்தான் நான் பிராயச்சித்தம் செய்தாகணும்.''

கவிதா மாமியார் மேலும் பேசி இந்தச் சூழலைக் கெடுக்க விரும்பாமல், ''எல்லோரும் சீக்கிரம் கிளம்புங்க மண்டபத்துக்கு நேரம் ஆகிவிட்டது'' என்று எல்லோரையும் கிளப்பினார்.

விசுதா வீட்டு வேலைக்காரங்க வரும் வண்டியில் ஏறிக் கொண்டாள். 'இந்த அவமானம் நமக்குத் தேவையா...? பேசாமல் நான் வராமலே இருந்திருக்கலாம்.' இன்னும் அவளுக்குப் படபடப்பு அடங்கவில்லை.

மண்டபத்தில் ஒரு ஓரமாக நின்று கொண்டாள். சரவணனின் மாமனார், மாமியார் இவளை விசாரித்தனர்.

''வாம்மா, நீ தான் கார்த்திக் தம்பியோட மனைவியா. நாங்க வந்தபோது உன்னைப் பார்க்கவில்லை. நீ ஊருக்குப் போயிருந்தியா'' என்றனர்.

''ஆமாம் அம்மா'' என்றாள்.

அந்தப் பக்கம் கார்த்திக் வரவே அவனிடம் ''என்ன கார்த்திக் உன் மனைவியை எங்கள் கண்ணிலேயே காட்டக்கூடாது என்று வைத்திருந்தாயா...? இத்தனை அழகையும் நாங்கள் பார்த்து விடுவோம் என்று. எங்கள் கண் இல்லை. இந்த மண்டபத்தில் இருப்பவர்கள் கண் அத்தனையும் இன்று இவள் மேல் தான். என் பெண் மேல் கூட இல்லை. இவளுக்கு இன்று இரவு சுற்றிப் போடுங்கள்'' என்றார்.

கார்த்திக் அவளைப் பார்த்துப் பளீரென்று புன்னகைத் தான். அந்தப் புன்னகையில் அவள் தடுமாறினாள். அந்த அம்மா அவள் கைப்பிடித்து மேடைக்கு அழைத்து வந்தார். ''நீ இங்கேயே நில்லு. எனக்கு ஒத்தாசையாக ஐயர் எது கேட்டாலும் என்னால் ஓட முடியாது. அதனால் நீ என் கூடவே இரு'' என்றார்.

மேடையில் சடங்குகள் நடந்து கொண்டிருந்தது. இவள் மாமனார், மாமியார் ஓடி... ஓடி வேலை பார்த்தனர். இவள் கல்யாணத்தின்போது பக்கத்தில் வரவேயில்லை. இது மாதிரி சடங்குகள் எதுவும் செய்யவில்லை.

விசுதா எல்லோரையும் ஒரு முறை பார்த்தாள். அத் தனை பேர் கழுத்திலும் சுமக்க முடியாத நகை பட்டும் அப்படித்தான். சேலை முழுக்க அடர்ந்த சரிகை. இவள் தான் அங்கு வந்தவர்களிடையே சாதாரணமாக இருந் தாள். அவர்கள் சொந்தக்காரர்களும் பணக்காரர்களே.

இதைத் தான் அன்று கேட்டானோ. இவர்களுக்கு பெரிய இடம் பார்த்துவிட்டு எனக்குக் கல்யாணம் என்றதும் ஏன் விசாரிக்கக்கூட இல்லப்பா என்றானோ. இவனும் இந்த மாதிரி பணக்காரப் பெண்ணாக எதிர் பார்த்திருப்பான். இது மாதிரி கல்யாணம் பண்ணனும்



என்று நினைத்திருப்பான். அது இப்படி ஆகி விட்டது. அவனுக்கும் இதையெல்லாம் பார்க்கும் போது மனதில் ஏக்கமாக இருக்குமோ. அவன் முகத்தை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

அவன் சரவணனிடம் குனிந்து ஏதோ சொல்லிச் சிரித் தான். இவனின் சிரிப்புத்தான் எத்தனை கவர்ச்சியாக இருக்குது.

முதல் நாள் இரவு ஒரு நகைப்பெட்டியும், ஒரு பட்டுச் சேலையும் ஜனார்த்தனன் விசுதாவுக்கு கொடுத்தார்.

அவள் மாமியார் முகத்தைத் திருப்பினார். ''இவளுக்கு எப்போ வாங்கினீங்க. எங்களுக்குத் தெரியாமல் கொண் டாங்க பார்க்கலாம். என்ன வாங்கிருக்கீங்க'' என்று கேட்டார்.

''நீ பார்த்து என்ன பண்ணப் போறே அமுதா. இது அவளுக்குத்தான் பிடிக்கணும். உனக்கல்ல'' என்றார் கேலியாக.

''எனக்கு வேண்டாம் மாமா'' என்றாள்.

''நாளைக்குக் கல்யாணத்தில் போட்டுக் கொள்ளம்மா'' என்றார் கனிவாக.

அவளுக்கு வாங்கத் தயக்கமாக இருந்தது. அவர் சொல லவும் மறுக்க முடியாமல் வாங்கிக் கொண்டாள். கார்த்திக் இரவு அப்படி பேசியதும் இதை மனதில் வைத்துத்தான். எனவே இவள் அந்தப் புடவை, நகை எதையும் அணிய வில்லை.

கடைசி பந்தியில் அங்கு வேலை பார்த்தவர்களோடு சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

கார்த்திக் அப்போது உள்ளே வந்தான். அவள் அவர் களோடு தனியாக உட்கார்ந்து சாப்பிடுவதைப் பார்த்து ஒரு கணம் அசையாமல் நின்றான்.

அவள் குனிந்த தலை நிமிராமல் கலங்கிய கண்களுடன் எந்த ருசியும் அறியாமல் எதையோ உண்டு கொண்டிருந்தாள். 'நான் இரவு இவள் சாப்பிடுவதற்கு எப்படிப் பேசிவிட்டேன். இரவு இவள் சாப்பிட கீழே வரவேயில்லை. நான் பேசியதால் சாப்பிடாமல் படுத்து விட்டாள்.'

ஏதோ கொறித்துவிட்டு அப்படியே மூடி வைத்துவிட்டு எழுந்து விட்டாள். தண்ணியை மடமடவென்று குடித்தாள்.

வீட்டிற்கு வந்தனர் பொண்ணு மாப்பிள்ளை. அமுதா, கவிதா, கீதா எல்லோரும் அலங்காரத் தட்டில் ஆரத்தி எடுத்தனர்.

இதையெல்லாம் விசுதா ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னை ஒருவரும் இப்படி முறையா அழைக்கவில்லையே.

விசுதாவுக்கு வேலை சரியாக இருந்தது. வந்தவர்களுக்கு காபி போடத் தண்ணீர் கொடுக்க என்று.

இரவு மணி பத்தானது. பெண்ணை அலங்காரம் பண்ணினார்கள். கீதாவும், கவிதாவும் அவளை அழைத்துக் கொண்டு போயினர்.

மணப்பெண் தேவியின் அம்மா ஆனந்தி. ''விசுதாவையும் கூட கூட்டிப் போங்கம்மா நலுங்கு வைக்க'' என்றார்.

கீதாவும், கவிதாவும் ஏளனமாகச் சிரித்தனர். ''அவளுக்கு என்ன தெரியும் இதைப்பற்றி. அவளே வாழாதவள். இவளைக் கூட்டிப்போய் நலுங்குவைத்தால் அவ்வளவுதான். என் அண்ணன் இவளை தள்ளி வைத்திருக்கான்'' என்று இருவரும் பேசிச் சிரித்தனர்.

இதை விசுதா கேட்டு விட்டாள். அவளால் நிற்க முடியவில்லை. பக்கத்தில் இருந்த கிரீல் கம்பியை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.



அவள் பின்னாடி இருந்து கார்த்திக்கும் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் இதயமே ஒரு வினாடி நின்று பின் துடித்தது.

விசுதா கலங்கிய கண்களுடன் அவள் அறைக்கு வந்தாள். கார்த்திக் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

## 10

அவளுக்குப் புரிந்தது. அவர்கள் பேசியது இவன் காதிலும் விழுந்திருக்கும் என்று. இவள் உள்ளே போய் கதவைச் சாத்திக் கொண்டாள்.

மறுநாள் பெண் வீட்டிற்குக் கிளம்பினர். மறு வீட்டிற்கு பெண் மாப்பிள்ளையுடன் யார் போவது என்ற பேச்சு வந்தது. அப்போது ஆனந்த் ''கார்த்திக்கும் விசுதாவும் வரட்டுமே. விசுதாதான் எங்கள் வீட்டிற்கு வரவேயில்லை. இப்பவாவது வரட்டுமே'' என்றார்.

ஜனார்த்தனனும் ''சரி கார்த்திக் நீங்க இரண்டு பேரும் போய்ட்டு வாங்க'' என்றார்.

''அப்பா இங்கு எனக்கு வேலை இருக்கு. அண்ணனைப் போகச் சொல்லுங்கள்'' என்றான்.

''இங்கு வேலை இருக்குப்பா அவனுக்கு, எல்லோருக்கும் செட்டில் பண்ணனும். நீங்க தான் போகணும். இரண்டு நாள் இருந்து விட்டு வாருங்கள்'' என்றார் அழுத்தமாக.

கார்த்திக் கிளம்பினான். இது விசுதாவுக்குத் தெரியாது. அவள் அறைக்கதவைத் தட்டினான். அவள் திறக்க

வில்லை. மேலும் வேகமாகத் தட்டினான். அவள் தூக்கக் கலக்கத்தோடு எழுந்து வந்து திறந்தாள். இவன் நிற்பதைப் பார்த்துவிட்டு மலங்க... மலங்க விழித்தாள்.

''நாம் பெண் மாப்பிள்ளையுடன் கோயம்புத்தூர் போகணும். சீக்கிரம் கிளம்பு. இரண்டு நாளைக்கு டிரஸ் எடுத்துக்கொள்'' என்றான்.

இவள் பதில் பேசாமல் கிளம்பினாள்.

பொண்ணு மாப்பிள்ளைக்கு தனி கார். அவர்கள் அப்பா அம்மா வந்த காரில் அவர்கள் சென்றனர். கார்த்திக்கும் விசுதாவுக்கும் தனிக்கார். கார்த்திக்கே கார் ஓட்டினான்.

இரவில் கார் சீறிப் பாய்ந்தது. 'எதுக்கு இவ்வளவு வேக மாக கார் ஓட்டுகிறான். இந்த இரவில் மெதுவாக போகக் கூடாதா...?' என்று நினைத்து ''மெல்லப் போங்களேன் ஏன் இந்த வேகம்'' என்றாள் மெதுவாக.

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு காரின் வேகத்தைக் கூட்டினான். விசுதாவுக்கு தூக்கம் கண்ணைச் சுழற்றியது. முதல் நாள் இரவும் தூக்கமில்லை. 'கார் ஓட்டுபவர் பக் கத்தில் உட்கார்ந்து தூங்கக் கூடாது என்று சொல்வார் களே... ஓட்டுபவர்களுக்கும் தூக்கம் வருமாமே. பேசிக் கிட்டே வரணும் என்று சொல்வாங்களே... இவனிடம் என்ன பேச முடியும். மெதுவாக ஓட்டுங்கள் என்று சொன்ன துக்கே வேகத்தைக் கூட்டி விட்டான். நான் வேறு ஏதாவது பேசப்போய் ஆத்திரத்தில் இவன் எங்காவது கொண்டு மோதி விட்டால். எனக்கு அடிபட்டாலாவது பரவாயில்லை. இவனுக்கு எதுவும் ஆகிவிட்டால் என்ன செய்வது. நாம் எதுவும் பேசாமல் வருவதுதான் இருவருக் குமே நல்லது.' ஏ.சி.யின் அரவணைப்பில் அப்படியே தூங்கிப் போனாள்.



ஒரு ஹோட்டலின் முன் காரை நிறுத்தினான். தூங்கும் அவள் முகத்தையே சில நொடி பார்த்தான். கை கார்க் கதவை இறுக்கமாகப் பிடித்திருந்தது. யாருமே எனக்கு ஆதரவு இல்லை என்கிற மாதிரி.

இதுவே நல்ல கணவனாக நான் இருந்தால் இந்நேரம் என் தோளில், இல்லை மடியில் உறங்கியிருப்பாள். நான் இப்படி இவளை அவமானப்படுத்தப் போய்த்தானே கவிதா இவளை அடிக்கக் கை ஓங்கினாள்.

காரின் ஹாரனை வேகமாக ஒலிக்கச் செய்தான். அந்த சத்தத்தில் திடுக்கிட்டு விழித்தாள். கார்த்திக் அவளை ''வா சாப்பிடலாம்'' என்று கூப்பிட்டான்.

''எனக்குப் பசியில்லை. நீங்கள் சாப்பிட்டு வாங்க. நான் காரிலேயே இருக்கேன்'' என்றாள்.

அவள் தலையில் நறுக்கெனக் கொட்டினான். ''வாடீ... உன் கூட போராட எனக்கு நேரமில்லை'' என்றான்.

''அப்பா'' என்று அலறி விட்டாள் அவன் கொட்டியதும்,

அதைக் கேட்ட அவனுக்கு வெறியே வந்தது. அவள் கழுத்தைப் பிடித்து நெருக்கினான். ''இனி சொல்வாயா...? என் முன்னாடி அப்பா... என்று'' இறுக்கினான்.

அவளுக்கு வலித்தது. ஆனாலும் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவள் மூச்சுக்கு திணறுவது தெரிந்தது. சட்டென எடுத்தான் கையை. எடுத்த வேகத்தில் அவன் மார்பில் சாய்ந்தாள். அவன் அப்படியே நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். அவனை அறியாம அவன் உடம்பில் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தான். அவள் சில நிமிடத்தில் கண் விழித்தாள். ''வா'' என்று கதவைத் திறந்து இறங்கினான்.

இவளும் பின்னாடியே இறங்கிப் போனாள்.

இட்லியை பிட்டு விழுங்க முடியவில்லை. தொண்டை வலித்தது. தண்ணியைக் குடித்துச் சிறிது சிறிதாக விழுங்கினாள். சூடான பாலை குடிக்கச் சொன்னான். அதைக் குடித்த பிறகு கொஞ்சம் ஒரு மாதிரியா இருந்தது.

காரில் பேசாமல் வந்தாள்.

''ஏன் சேலை கட்டி வரவேண்டியதுதானே'' என்றான். அவள் சுடிதாரைப் பார்த்து.

''நான் சேலை அதிகமாக எடுத்து வரவில்லை'' என்றாள்.

''ஏன்...?''

''நான் எப்படியும் திரும்பிப் போகத்தான் போறேன். எதுக்கு நிறைய எடுத்து வரணும்'' என்றாள்.

பிறகு அவன் பேசவில்லை. காலையில் அவர்கள் வீட்டு முன் கார் நின்றது. இருவரும் இறங்கி உள்ளே சென்றனர்.

அன்று விருந்து பலமாக இருந்தது. கோயிலுக்குப் போயினர். விசுதாவும் கூடவே அலைந்தாள். இரவு டிபன் சாப்பிட்ட பின் படுக்கச் சென்றனர்.

கார்த்திக்கும் விசுதாவுக்கும் ஒரு தனியறை கொடுத்தனர். உள்ளே போகவே விசுதா தயங்கினாள். அவன் வருவதற்குள் நாம் தூங்கி விட வேண்டும் என்று பால்கனியில் படுத்து விட்டாள்.

கோயமுத்தூரில் பனி அதிகமாகப் பெய்தது. அவள் துப்பட்டாவை போர்த்திக் கொண்டு குறுகிப் படுத்து விட்டாள். உடனே தூங்கியும் விட்டாள்.

கார்த்திக் உள்ளே வந்தான். இவளைக் காணாமல் கட்டிலுக்கடியில் தேடினான். அங்கு இல்லை. பின்



பால்கனியில் எட்டிப் பார்த்தான். அங்கு சுவரோரம் சுருண்டு படுத்திருந்தாள்.

நான் திட்டுவேன் என்றுதான் இங்கு வந்து படுத்திருக்கா. இந்தப் பனியில் நேற்று இரவு அண்ணியும், கவிதாவும் பேசியது நினைவுக்கு வந்தது. இவளுக்கு என்ன தெரியும் சாந்தி முகூர்த்தத்தைப் பற்றி என்னமாய் நடுங்கிப் போனாள்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. மனதை, உடம்பை என்னமோ செய்தது. சரவணன் அறையைத் தாண்டும் போது கேட்ட சிணுங்கலும், சிரிப்பும், அவனை என்னவோ பண்ணின.

அவனால் படுத்திருக்க முடியவில்லை. சட்டென எழுந்து உட்கார்ந்தான். மூச்சு அடைப்பது போல் இருந்தது. விசுதாவை உள்ளே வந்து படுக்கச் சொல்லலாமா. படுத்தால் என்ன, என் மனைவி தானே... என்ற நினைப்பு மனதில் ஒடியது.

நேற்று அத்தனை எளிமையிலும் என்னமாய் மிளிர்ந்தாள். அத்தனை பேரும் இத்தனை அழகா என்று வியந்தனர். இப்படியே தூங்கிப் போனான்.

காலை கண் விழித்துப் பார்த்தபோது அறையில் ஒரத்தில் படுத்திருந்தாள். குளிர் தாங்கவில்லை போல் இருக்கு.

அங்கு இருந்த இரண்டு நாளும் விசுதாவிடம் இவன் எதுவும் பேசவில்லை. அவளும் ஒதுங்கிப் போய் விட்டாள்.

இரண்டு நாள் கழித்துக் கிளம்பினர். ஒரே காரில் டிரைவர் சீட்டில் கார்த்திக் பக்கத்தில் விசுதா. பின் சீட்டில் பெண்ணும் மாப்பிள்ளையும் அவர்கள் செய்த சில்மிஷங்கள், ரகசிய சிரிப்புக்கள், பார்வை பரிமாற்றங்கள் எல்லாவற்றையும் கார்த்திக்கும் விசுதாவும் கண்டுக்காமல் வந்தனர்.

மறுநாள் கார்த்திக் ஆபீஸ் கிளம்பி கீழே வந்தான். அனைவரும் அங்கிருந்தனர். விசுதா மாமனாரிடம் ''இன்று நான் ஊருக்குப் போகிறேன் மாமா. அப்பா அங்கு எப்படி இருக்காரோ'' என்றாள்.

அவருக்கே கண் கலங்கி விட்டது. இந்தப் பெண்ணின் நிலமை யாருக்கும் வரக்கூடாது. ''ஏம்மா இருந்து விட்டுப் போயேன்'' என்றார்.

''இல்லை மாமா. இருக்கட்டும். நான் கிளம்புகிறேன்'' என்றாள்.

கார்த்திக்கோ வேறு யாருமே ஒரு வார்த்தை இரு என்று சொல்லவில்லை. அவளுக்கு செலவுக்குப் பணம் கொடுத்தார். அவள் வாங்க மறுத்தாள். ''வைத்துக் கொள்ளம்மா'' என்றார்.

''என்னிடம் இருக்கு மாமா. எதுக்கு இவ்வளவு பணம்'' என்றாள்.

''பரவாயில்லை பிடிம்மா'' என்று கையில் வைத்து விட்டார்.

கார் டிரைவரைக் கூப்பிட்டு ''இவளை ட்ரெயினில் ஏற்றி விட்டு வா'' என்று அனுப்பி வைத்தார்.

''நீ தனியாக போய் விடுவாயா இல்லை நான் வரட்டுமா'' என்றார்.

''போய் விடுவேன் மாமா. எதுக்கு உங்களுக்கு வீண் அலைச்சல் வேண்டாம்'' என்றாள்.

''பத்திரமா போம்மா. போனதும் போன் பண்ணு எனக்கு'' என்றார்.

அவர் காலில் விழுந்தாள்.

''எதுக்கும்மா இதெல்லாம். உனக்கு நான் என்ன சொல்லி ஆசீர்வாதம் பண்ண முடியும். அப்படியிருந்தும்



உன் வாழ்க்கை நல்லா இருக்கணும்'' என்று வாழ்த்தினார்.

எல்லோரிடமும் சொன்னாள். அவர்கள் தலையை மட்டும் ஆட்டினர். இவளுக்கு நெஞ்சை அடைத்தது. புகுந்த வீட்டில் யாரோ போல் கல்யாணத்திற்கு வந்து விட்டு ஊருக்குப் போகிறாள்.

## 11

கார்த்திக் சத்தமாக ''நீ வைத்திருக்கும் பேக்கைத் திறந்து காட்டி விட்டுப் போ...'' என்றான் காட்டமாக.

ஒரு எட்டு எடுத்து வைத்தவள் அப்படியே நின்று விட்டாள். பின் பேக்கைத் திறந்து ஒவ்வொரு துணியாக விரித்து உதறி காட்டினாள்.

''இப்போ நான் போகலாமா...?'' அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

எல்லாவற்றையும் எடுத்துத் திணித்துக் கொண்டு வேகமாக அங்கிருந்து சென்று விட்டாள். மற்றவர்களின் சிரிப்பு அவளைத் துரத்தியது.

கார்த்திக் அவன் அறைக்குள் வந்தான். டீபாய் மேல் பட்டுப் புடவையும் அதன் மேல் நகைப் பெட்டியும் இருந்தன. இது அவளுக்கு அப்பா கொடுத்தது. அதை இங்கு வைத்துவிட்டுப் போய் விட்டாள். அவனுக்கு ஆத்திரமாக வந்தது. ஏன் என்ன காரணம் புரியாமல்.

அறையே வெறிச்சோடிய மாதிரி இருந்தது.

எவ்வளவு வேலை பார்த்தாள். எப்படி முடிந்தது அவளால். அவளை அன்று காரில் முதன் முதலாக

அணைத்ததை நினைத்தான். அவன் உடம்பு சிலிர்த்தது. அவன் உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் தாண்டவ மாடியது.

'எதற்காக இங்கு வந்தாள். நான் ஏற்றுக் கொள்வேன் என்ற நப்பாசைதானே. எனக்காகத்தானே இத்தனை வேலைகளையும் செய்தாள். நான் ஒரு வார்த்தை அவளுக்காக பேசியிருந்தால் இத்தனை அவமானப்பட் டிருப்பாளா.

முதன் முதலில் ஒரு பெண்ணின் ஸ்பரிசம். அவனுக்கு விசுதா வேண்டும் போல் இருந்தது. உடனே ஊருக்குப் போய் விட்டாளே... எப்படித் தனியாகப் போவாள். இது தெரிய வேண்டாமா அப்பாவுக்கு. டிரைவரைக் கூப்பிட்டு ஸ்டேசனுக்குக் கூட்டிப் போகச் சொல்கிறார். ஏன் என்னைக் கொண்டுவிடச் சொல்லக்கூடாதா.' மனதில் ஏதேதோ நினைவுகள்.

நான் இத்தனை பேசியும் ஒரு பதிலும் பேசமாட் டேங்கிறாளே. சுடிதாரில் ரொம்ப சின்னப் பெண்ணாகத் தெரிகிறாள்.

விசுதாவை அவள் அப்பா கணேசன் வீட்டுக்குள் நுழையவிட மாட்டேன் என்றார்.

''அப்பா ப்ளீஸ் கதவைத் திறங்க. எத்தனை நேரந்தான் இங்கு நிற்க முடியும். நான் யார் வீட்டுக்குப் போனேன். என் புகுந்த வீட்டுக்குத்தானே'' என்று கெஞ்சினாள்.

மதியத்துக்கு மேல் கதவைத் திறந்தார்.

''நீ யாரு கூட வந்தே...?''

''நானாத்தாப்பா வந்தேன்.''

''ஏன் உன்னை வந்து கூட்டிட்டுப்போன பெரிய மனுசனுக்குக் கூட்டிட்டு வந்துவிடத் தெரியாதா...? உன்னைத் தனியா அனுப்பிருக்கான். எனக்குத் தெரியும். இது மாதிரி நடக்கும் என்று. இதுக்குத்தான் நீ போகாதே என்று நான் சொன்னேன். நீ கேட்டியா என் பேச்சை.



''கார்த்திக். அதான் உன் புருசன் என்ன சொன்னான். உன்னை சீராட்டினானா...? உன்னிடம் பேசினானா...? நீ வந்து விட்டாய் என்று சந்தோசப்பட்டானா...? இல்லை போ என்று விரட்டி விட்டானா...? ஏன் வந்தாய் இங்கு. அங்கேயே இருக்க வேண்டியதுதானே...?''

''அவங்க அங்கேயே இருக்கச் சொன்னாங்கப்பா. நான் தான் நீங்க தனியா இருப்பீங்கன்னு வந்துவிட்டேன். உங்களுக்கும் என்னை விட்டா யார் இருக்கா. இந்த வய தான காலத்தில் நான் உங்களுக்கு வேண்டாமா...?''

அவர் மகள் மீது கோபப்பட்டார். ''உன்னை இருக்கச் சொன்னால் நீ அங்கேயே இருப்பது தானே. ஏன் வந்தாய். நான் என்ன சின்னப் பிள்ளையா தனியாக இருக்க முடியாமல் போக. வயதான காலத்தில் கோயில் குளம் என்று காலத்தைக் கழித்து விடுவேன். இப்போ எத்தனையோ ஹோம்மெல்லாம் இருக்கு. அதில் நான் இருந்து கொள்வேன்.

''நான் எப்படிப் போனால் என்ன. என்னால் தானே உனக்கு இந்த நிலைமை. நீ வாழ வேண்டியவள்மா. எனக் காக நீ ஏன் வந்தாய். வா... நானே உன்னைக் கொண்டு விடுகிறேன். நீ சந்தோசமாக அங்கு வாழ்ந்தாலே போதும் எனக்கு. அதைவிட எனக்கு வேற என்ன சந்தோசம் வேண்டும். நீ உடனே புறப்படு'' என்றார்.

அவளுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல் இருந்தது. எங்கே தன்னை இருக்கச் சொல்லவில்லை. போ என்று சொல்லி விட்டார்கள் என்றால் கூட

கொஞ்சம் திட்டுவார். எதற்கு இவரிடம் உண்மையைச் சொல்ல வேண்டும் என்று நினைத்துத்தான் இவள் இப்படி மாற்றிச் சொன்னது. இப்போ விஷயம் இப்படி மாறும் என்று நினைக்கவில்லை.

தன் அப்பா அவன் அன்று அத்தனை பேசியும் வா உன்னை நானே கொண்டு விடுகிறேன் என்கிறாரே... எனக்காக என்னவெல்லாம் செய்யத் துணிந்து விட்டார். உடனே கிளம்பு என்றால் எப்படிக் கிளம்புவது. அங்கு தான் நான் இனி போக முடியுமா...? இவருக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் விழித்தாள்.

மெதுவாக ''இல்லப்பா பிறகு போகலாம். நீங்க வாங்க. என்ன சாப்பிட்டீங்க. எப்படி இருக்கீங்க?'' என்று பேச்சை மாற்றினாள்.

அவர் புரிந்து கொண்டார். தன் மகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கல்யாணம் முடிந்ததும் போகச் சொல்லி விட்டார்கள். கார்த்திக் சாதாரணப்பட்டவன் இல்லே. என்ன என்ன என் பெண்ணை பேசினானோ. பாவம் இவள் எப்படியாவது தன்னை ஏற்றுக் கொள்ள மாட்டானா... என்று தான் இவள் போனதே. அது இவருக்கும் புரிந்தது.

தலையில் அடித்துக் கொண்டு அழுதார். நான் பண்ணின தப்பால் தான் இப்படி ஆகிவிட்டது. இப்படி இரவு முழுதும் புலம்பினார். அன்றே நல்ல காய்ச்சல் அடித்தது.

ஹாஸ்பிட்டலில் சேர்த்தாள். வீட்டுக்கும், ஹாஸ்பிட்டலுக்கும் அலையாய் அலைந்தாள். செலவுக்குப் பணம் இல்லை. என்ன செய்வது வீட்டை விற்று விடலாமா...?

இப்படியே ஒரு வருடம் ஓடியது. விசுதா கார்த்திக்கின் நினைவாகப் பொழுதை ஓட்டினாள். என்றாவது ஒரு



நாள் வரமாட்டானா. தன்னை வந்து கூப்பிட மாட்டானா என்று ஏங்கினாள்.

இதுவரை அவளுக்கு அவள் மாமனார் தவிர யாரும் போன் பண்ணிப் பேசியது கிடையாது. அவர் அப்படிப் பேசினாலும் இவள் அப்பாவுக்கு முடியவில்லையோ... கஷ்டத்தையோ... சொல்ல மாட்டாள்.

அன்று அவர் போன் பண்ணினார். ''ஞாயிற்றுக் கிழமை தேவிக்கு வளைகாப்பு. நீ அவசியம் வேண்டும். நீ ட்ரெயினில் வந்தால் நான் வந்து உன்னை ஸ்டேசனில் இருந்து கூட்டி வந்து விடுகிறேன்'' என்றார்.

இவள் ''நான் இப்ப வர முடியாது மாமா. நீங்கள் நடத்துங்கள்'' என்றாள்.

அவருக்குச் சங்கடமாக இருந்தது. இது மாதிரி வந்து அவன் கண்ணில் பட்டால் அவன் மனசு மாறாதா... தன் அழகு மனைவியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு எந்த ஆண் மகன் தான் கட்டுப்பாடுடன் இருப்பான். இதை நினைத்துத்தான் இவர் இவளை இப்படிக் கூப்பிடுவதே. இந்தப் பெண்ணுக்கு இது புரியவே மாட்டேங்குதே.

''நானே வரட்டுமாம்மா உன்னைக் கூப்பிட.''

இவள் அவசரமாக மறுத்தாள். ''இல்லை வேண்டாம். நானே வருகிறேன்'' என்றாள்.

இவர் வந்து அப்பா பேசி, பிரச்சனையாகி விடுவதை விட நானே போகலாம். அவர் வந்தாலும் என் நிலைமையும் தெரிந்து விடும் என்றுதான் மறுத்தாள்.

அவள் அப்பாவின் நிலைமை மோசமாக இருந்தது. இவரை எப்படி விட்டுட்டுப் போறது. இவரிடம் என்ன சொல்லி அங்கு போவது. உண்மையைச் சொன்னால்

இவர் நிச்சயம் போகவிட மாட்டார். ஏதாவது பொய் சொல்லித்தான் அங்கு போகணும். நான் வரவில்லை என்று வாய் அவரிடம் சொன்னாலும் மனசு எப்போ கார்த்திக்கை பார்ப்போம் என்று இருந்தது.

அப்பாவிடம் ''நான் ஸ்கூலில் டூர் போகிறேன். வர இரண்டு நாள் ஆகும். உங்களைப் பக்கத்து வீட்டுப் பையன் பார்த்துக் கொள்வான்'' என்று சொல்லிவிட்டு ட்ரெயின் ஏறினாள்.

மாமனாருக்குத் தான் வரும் நேரத்தை போன் பண்ணிச் சொன்னான்.

இவள் காலையில் போய் இறங்கியதும் அவர் காரோடு நின்றார். இவளைப் பார்த்ததும் பக்கத்தில் வந்து ''நல்லா இருக்கியா விசுதா'' என்றார்.

''ம். நல்லா இருக்கேன் மாமா. நீங்க எப்படி இருக்கீங்க. வீட்டில் உள்ளவர்கள் நலமா'' என்று கேட்டாள்.

எல்லோரும் நலம். நானும் நலம். வா வீட்டுக்குப் போகலாம் என்று காருக்குக் கூட்டி வந்தார்.

வீட்டில் எல்லோரும் வா என்று தலையசைத்தனர். கார்த்திக் அவளை உற்றுப் பார்த்தான். இவள் வருவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அப்பா இவளைப் போய் கூப்பிடவில்லையே என்று நினைத்தான். இவள் இன்று வருவது யாருக்கும் தெரியாது. இவள் கீழ் அறையிலேயே தங்கிக் கொண்டாள்.

விசுதா இப்போது இளைத்துக் கறுத்துப் போயிருந்தாள். இதைக் கார்த்திக் கவனித்தான்.

இந்த தடவை கார்த்திக் குத்திக் குதறவில்லை. மௌனமாகவே இருந்தான். விசுதா எப்பவும் போல் வீட்டு வேலையைச் செய்தாள்.



வளைகாப்பில் தேவிகூட விசுதாவையும் உட்காரக் கூப்பிட்டனர். இவள் மறுத்து விட்டாள்.

தேவி அம்மா ஆனந்தி விடவில்லை. ''அடுத்ததாக உனக்கு அடுக்க வேண்டாமா...? இப்படி வந்து உட்கார்'' என்று மனையில் தேவி பக்கத்தில் உட்கார வைத்தார்.

## 12

எல்லோரும் தேவிக்குப் போலவே விசுதாவுக்கும் சந்தனம், குங்குமம் வைத்து வளையல் போட்டு விட்டனர். தேவியை விட விசுதா ஜொலித்தாள். கன்னம் சிவக்கக் கார்த்திக்கை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் அவளைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினான். இவள் இதழ்களில் புன்னகை ததும்பிற்று.

கார்த்திக் மேலே போய்விட்டான். ஜனார்த்தனன் ஒரு பேக்கைக் கொடுத்து ''இதை கார்த்திக்கிடம் கொடுத்து விட்டு வா'' என்றார்.

இவள் தயக்கத்துடன் மாடியேறினாள். அறையைத் தட்டிவிட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். அவன் அப்போதுதான் போட்டிருந்த டிரஸ்சை கழட்டி விட்டு வேறு ஒரு லுங்கியைக் கையிலெடுத்தான்.

இவளை அவன் எதிர்பார்க்கவில்லை. அவசரமாக லுங்கியை இடுப்பில் சுற்றிக் கொண்டு ''என்ன'' என்றான் அதட்டலாக.

''இதை மாமா உங்ககிட்டே குத்துட்டு வரச்சொன்னாங்க'' என்றாள் வெளியில் இருந்தபடியே.

''ஏன் மகாராணி உள்ளே வரமாட்டீங்களா...'' என்று பேக்கை வாங்கும் சாக்கில் அவள் கையைப் பிடித்துச் சுண்டி இழுத்தான்.

அவள் எதிர்பாராமல் இழுக்கவும் இவள் அவன் மார்பில் ஒரு பூமாலை போல் விழுந்தாள்.

விழுந்தவளை இறுக அணைத்துக் கொண்டான். அவள் திமிறினாள். இவன் விடவில்லை. அவள் பவளச் செவ்வாயில் தன் அழுத்தமான உதட்டால் அழுந்த முத்தமிட்டான்.

அவள் கழுத்து வளைவில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சில்மிஷம் செய்தான். அவளாலும் தாங்க முடியவில்லை. அவன் கைகள் எல்லை மீறின. இவளும் அவனை இறுக அணைத்துக் கொண்டாள். அவளை அப்படியே படுக்கையில் போட்டான். அவள் கைகளில் இருந்த வளையல்கள் சிணுங்கி உடைந்தன.

அவனின் முத்தமும், தடவலும், தழுவலும் அவளைச் சொர்க்கத்துக்கே இழுத்துச் சென்றன.

அவன் அவள் முகம் நோக்கிக் குனிந்திருந்தான். பரவசத்தில் கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் இதழை நறுக்கெனக் கடித்தான். அவள் பளீரென்ற புன்னகையுடன் வாங்கியதை அவனுக்குத் திருப்பிக் கொடுத்தாள்.

அவன் அப்போது ''இது மாதிரி தான் ரமேஷுக்கும் கொடுப்பியா...?'' என்றான். கொதிக்கும் கொப்பறையில் தூக்கிப் போட்டது போல.

அவள் துடித்து விட்டாள். அவள் கண்ணில் அருவி வழிந்தோடியது எத்தனை ஆசையாக வந்தாள். இவனைப் பார்ப்பதற்கு. அவன் பேசிய அனைத்தையும் மறந்து



தன்னைக் கொடுக்கத் தயாரானாள். ஆனால் இவனோ... மனதில் வஞ்சம் வைத்துக் கொண்டு தான் இப்படி என்னிடம் நடந்திருக்கான். இது எனக்குத் தெரியவில்லையே.

அவன் அணைப்பில் இருந்து சட்டென எழுந்தாள். அவன் கீழ் கிடந்த சேலையைப் பிடித்து இழுத்தாள். அதை வேகமாகக் கட்டிக் கொண்டு கீழே போய் விட்டாள்.

கார்த்திக்குக்கு அவளின் அலட்சியம் கோபத்தை வரவழைத்தது. தன்னிடம் கெஞ்சுவாள். தன்னை ஏற்றுக் கொள்ளும்படி. நான் அவனை நினைக்கவில்லை என்று வாய் திறந்து சொல்லுவாள் என்று எதிர்பார்த்தான். அவள் முறைத்துக் கொண்டு கீழே போய் விட்டாள். வாயே திறக்காமல்.

மறுநாள் கார்த்திக் ஆபீஸ் போனதும் கிளம்பிப் போய் விட்டாள் ஊருக்கு. அவளின் நடமாட்டத்தைக் காணாமல் கண்கள் அவளைத் தேடின. அவள் இல்லை. ஊருக்குப் போய் விட்டாள் போல.

அவன் அறைக்குச் சென்றான். படுக்கையில் நேற்று உதிர்ந்த பூ காய்ந்து அப்படியே கிடந்தது. அவளின் வாசம் அவனின் மனதை நிரப்பியது.

இப்படி இரண்டு நாளில் ஊருக்குக் கிளம்பி விட்டாளே. அவள் மீது ஆத்திரமாக வந்தது. இவள் எதற்கு வரணும். இப்படி என்னிடம் சொல்லாமல் ஊருக்குப் போகணும். அவனை நினைத்தே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'நேற்று நான் அப்படிக் கேட்டிருக்கக் கூடாது. அதுவும் அந்த நிலையில். எத்தனை பரவசமாக இருந்தாள். அவள் முகம்தான் எப்படிச் சிவந்திருந்தது. அத்தனையும் ஒரு நொடியில் அழித்து விட்டேன். இப்படிக் கேட்டும் அவள்

வாயில் இருந்து ஒரு வார்த்தை வரவில்லை. நான் ரமேஷை விரும்பவில்லை என்று.' அது வேறு ஆத்திர மாக வந்தது.

அவனுள் எழுந்த உணர்வுகளை அடக்கப் பெரும்பாடு பட்டான். பேசாமல் வேறு ஒரு பெண்ணுடன்... சே... நினைக்கவே அருவருப்பாக இருந்தது. இவளை அணைத்த கையால் வேறு ஒருத்தியை... கண்களை இறுக மூடிக் கொண்டான்.

தலையணையில் முகத்தைப் புதைத்தான். நேற்று அவள் மார்பில் முகம் புதைத்த நினைவு வந்தது. எத்தனை மெத்தென்று இருந்தது. எத்தனை ஆசையாக அணைத் தாள். அவளின் நினைவு அவனைத் தூங்க விடவில்லை.

எனக்கு ஏற்பட்ட சலனம், தவிப்பு, அவளுக்கும் இருக் குமா... இல்லாமலா நான் அணைத்ததும் முதலில் மறுத் தவள் பின் குழைவாள். இது மாதிரியே என் நினைவாகவே இருப்பாளா... பாவம் என்னமாய் அழுதாள்.

காலம் யாருக்கும் காத்திருக்காமல் உருண்டோடின. காலம் எத்தனையோ மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கு. காலத்தால் மாற்ற முடியாது, மறக்க முடியாதது ஒன்று மில்லை. காலம் அத்தனை வல்லமை வாய்ந்தது, என் றென்றும் சொல்றாங்க. ஆனால் விசுதாவோட கஷ்டத் தையும் மனவேதனையும் காலம் சிறிதும் மாற்றவில்லை.

அன்று எத்தனை வேகமாக அணைத்தான். நிமிடத்தில் எப்படி மாறிவிட்டான். பெண்ணால் முடியாதது ஒன்று மில்லை என்கிறார்களே... என்னால் எதுவுமே முடியவில் லையே. நான் என்ன செய்ய வேண்டும். எதுவும் புரி யாமல் தவித்தாள்.



இனி நாம் எதற்கு அங்கு செல்லப் போகிறோம். அதான் தேவைகள் அனைத்தும் முடிந்து விட்டதே. குழந்தை பிறந்தால் சொல்லக்கூட மாட்டார்கள்.

அவளுக்கு கார்த்திக்கை பார்க்க வேண்டும் போல் இருந்தது. அவன் செல் நம்பரும் இவளுக்குத் தெரியாது. தெரிந்தாலும் இவள் என்ன பேசமுடியும்.

எப்படி என் மீது இப்படியொரு சந்தேகம் வந்தது. அப்பா சொன்னார் என்கிறானே. நான் அந்த ரமேசுடன் பழகவில்லையே. இதுவரை பார்த்தது கூட இல்லையே. ஏன் என்னை சந்தேகப்படுகிறான். வாழ்க்கை தொடங்கு வதற்கு முன்பே என் மீது சந்தேகப்பட்டால் எப்படி வாழ முடியும் இவன்கூட.

இவன் ஒரு சந்தேகப் பிராணி போல. சந்தேகம் என்பது ஒருவர் வாழ்வையே அழித்துவிடும். படித்தவன், பிசினஸ் பண்றான். பல பேருடன் பழகுறான், இதுகூடவா தெரியாது இவனுக்கு. இப்படி இந்த மாதிரி பழி போடு கிறோமே அவள் மனது என்ன பாடுபடும் என்று தெரிய வேண்டாமா...? அப்படியிருந்தும் என் மனம் அவனை நாடித்தானே ஓடுகிறது.

அவன் என்ன பழியா போடுகிறான் கவலைப்பட. இவனே நேரில் பார்த்தது போல் நடந்தது இதுதான் உண்மை என்கிறான்.

அவனுக்கு என் மீது கொஞ்சமாவது அன்பிருந்தால் ஒரு போனாவது பண்ணியிருப்பானே. மாமனார் போன் பண்ணும்போது எப்படிக் கேட்பது. அவர் நல்லாயிருக் காரா என்று பொதுவாகக் கேட்பாள். சாதாரணமான தம்பதிகளாக இருந்தால் இது மாதிரி தோணாதா.

ஒரு நாள் இரவு கணேசனுக்கு ரொம்ப முடியாமல் போய் விட்டது. அந்த இரவிலும் ஹாஸ்பிட்டலுக்கு ஆட்டோ பிடித்துக் கூட்டிப் போனாள். டாக்டர்கள் தலையில் இரத்தக் குழாய் வெடித்து விட்டது. இவரைக் காப்பாற்ற முடியாது என்று கைவிரித்து விட்டனர்.

அவள் என்ன செய்ய முடியும். அவளுக்குனு இருந்த ஒரு துணையும் இப்போ இல்லாமல் ஆகி விட்டது. ஒரு மணி நேரத்தில் உயிர் பிரிந்து விட்டது. கத்தி கதறினாள். அவளை அழாதே என்று சொல்வதற்கு ஆள் இல்லை.

மாமனாருக்கு போன் பண்ணி அப்பா இறந்து விட்டார் என்று தகவல் சொன்னாள். அவர் ''நான் இதோ கிளம்பி விட்டேன். நீ தைரியமாக இரு'' என்று, அங்கு அவருக்குத் தெரிந்தவர்களிடம் விஷயத்தைச் சொல்லி மற்ற காரியங்களுக்கு ஏற்பாடு பண்ணச் சொன்னார்.

பிளைட்டில் சீக்கிரமாகவே வந்து சேர்ந்தார். அழுதழுது முகம் வீங்கியிருந்தது. மருமகளைப் பார்த்தார். அவரைப் பார்த்ததும் விசுதா கதறி அழுதாள். அவர் ஆறுதலாக அவள் தலையை வருடிக் கொடுத்தார்.

''நான் இருக்கேன் மகளே. நீ எதற்கும் கலங்காதே'' என்றார்.

எடுக்க ஏற்பாடு பண்ணினார். மூன்று நாள் இருந்து காரியத்தை முடித்துவிட்டு, விசுதாவை தன்னோடு கிளம்பும்படி சொன்னார்.

''நான் வரவில்லை மாமா. என்னால் அங்கு எதற்குப் பிரச்சனை. என்னாலும் அங்கு நிம்மதியாக இருக்க முடியவில்லை. பயந்து கொண்டு எத்தனை நாள் அங்கிருக்க முடியும். நான் இங்கேயே எப்படியோ இருந்து விடுகிறேன்'' என்றாள்.



''விசுதா என்னை உன் அப்பாவா நினைத்துக் கொள். என் மீது நம்பிக்கை வைத்து வா. முன் போல் எதுவும் நடக்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார்.

## 13

''வேண்டாம் மாமா. என்னால் உங்களுக்கு ஏன் சிரமம். நீங்கள் போங்கள்'' என்றாள்.

''சரி இதுதான் உன் முடிவா. நான் உன் வழிக்கே வருகிறேன். இத்தனை நாள் உன் அப்பாவுக்கு சோறு போட்டியே அது போல நான் இங்கேயே உன் கூடவே இருக்கேன். எனக்கும் சோறு போடு. நாம் இரண்டு பேருமே துணைக்கு துணையா இருப்போம்'' என்று முடித்தார்.

விசுதாவால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. 'இவர் அந்தஸ்து என்ன, கார் பங்களா என்ன, எத்தனை எடுபிடி ஆளுங்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர, எத்தனை பிசினஸ்? இதையெல்லாம் விட்டு விட்டு என் கூடவே இருக்கேன் என்கிறார். அவர் குடும்பம் என்னாவது.' இப்படியே இரண்டு நாள் ஓட்டினாள்.

'நாம் பேசாமல் இருந்தால் எப்படியும் இவர் போய் விடுவார். நீங்கள் இங்கிருக்க வேண்டாம் என்று முகத்துக்கு நேரே எப்படிச் சொல்ல முடியும். எத்தனை நாள் இங்கிருக்க முடியும். இவர் சும்மா நான் வரட்டும் என்று சொல்கிறார். இவர் போனதும் எதையாவது விழுங்கிவிட்டு என் கதையை முடித்துக் கொள்ள வேண்டியதுதான்' என்று முடிவெடுத்தாள்.

ஜனார்த்தனன் தினமும் வாக்கிங் போய்விட்டு வரும் போதே காய், கீரை என்று வாங்கி வந்து விடுவார். விசுதாவும் நன்றாக சமைத்துப் போட்டாள். சாப்பாடு சாதாரணம் என்றாலும் ருசியாகவும் மணமாகவும் இருந்தது.

அவர் சாப்பிட்டுக் கொண்டே ''அம்மா விசுதா இந்த கைப்பக்குவத்தைப் பார்க்கும்போது என் அம்மாவின் நினைவு வருது. நானும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன் தான். வீட்டுக்குப் பின் உள்ள தோட்டத்தில் கீரையைப் பிடுங்கி கடைந்து வைப்பாங்க. அவ்வளவு மணமா இருக்கும். அது மாதிரி சாப்பிட்டு எத்தனையோ ஆண்டு காலமாச்சு. வாழைத்தண்டு கூட்டு பண்ணுவாங்க. கம்பு, சோளம் என்று ஆட்டு உரலில் ஆட்டி தோசை ஊத்துவாங்க பாரு. பக்கத்து வீட்டுக்கெல்லாம் அந்த வாசம் அடிக்கும். இப்போ மாதிரியா எண்ணெய் எல்லாம் விதவிதமா இருந்தது. நல்லெண்ணை, கடலை எண்ணெய், செக்கில் ஆட்டி விற்கும் இடத்தில் வாங்குவோம். அந்த எண்ணெய்யே அத்தனை மணமா இருக்கும். இப்போ தான் அதை உணர்கிறேன். இந்த ஒரு வாரமும் எத்தனை நிம்மதியாக இருக்கேன் தெரியுமா?''

'இந்த ஒரு வாரமும் நிம்மதியாக இருக்காரா. என்ன சொல்கிறார் இவர். இவர் இல்லாமல் அங்கு எப்படி இருக்கோ. அதை வெளிப்படையா சொல்ல முடியாமல் இப்படிச் சொல்கிறாரோ.'

''பணம் இருந்து என்னம்மா, எனக்கு நிம்மதியில்லை. எப்பப்பார் அதன் பின்னாடியே ஓட வேண்டியிருக்குது. எனக்கு இந்த வாழ்வு பிடித்துப் போயிற்று. இனி கோயில் குளம் என்று வாழ்க்கையை ஓட்ட வேண்டியதுதான். முடிந்தவரை பணம் சம்பாதித்து விட்டேன். இனி



அவன்கள் பொறுப்பு. எனக்கும் ரெஸ்ட் வேண்டும் இல்லையா.

''எனக்கு இன்னொரு தாயா நீ கிடைச்சிருக்கே. என் ருசியறிந்து, மனம் அறிந்து செய்யுறே. நேற்று அந்த வாழைத்தண்டு கூட்டு செய்தாய் பாரு அது அத்தனை ருசி'' என்றார்.

அவளுக்குச் சந்தோசம் தாள முடியவில்லை. என் சமையலை இப்படிப் பாராட்டி பேசுறாங்களே என்று. இருந்தாலும் சட்டென முகம் வாடியது.

அதைக் கவனித்த அவர் ''என்னம்மா'' என்றார்.

''என் அப்பாகூட இப்படித்தான் சொல்வார். என்னை அவர் அம்மா என்று, என்னைக் கூப்பிடுவது கூட விசுதா என்று கூப்பிடமாட்டார். அம்மா என்றுதான் கூப்பிடுவார்.''

''இனி அதற்குத்தான் நான் இருக்கேன் மகளே. உனக்கு எந்தக் கவலையும் வேண்டாம். நீ மனம் விட்டு என்னிடம் பேசலாம். உன் அப்பா இல்லை என்று நீ நினைக்கக்கூடாது.

''உன் அப்பா இடத்தில் இருந்து நான் உனக்கு வேண்டியதைச் செய்கிறேன். உன் பொறுமைக்குக் கடவுள் உனக்கு நல்ல வழி காட்டுவார். கார்த்திக்கும் சீக்கிரம் உன்னிடம் மனம் மாறிப் பிரியமாக இருப்பான். நீ மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே'' என்றார் கனிவாக.

பின் பேச்சை மாற்றினார். ''அங்கு வீட்டில் சமையல்காரங்க சமையல்தான். அவங்க என்ன செய்றாங்களோ... அதான் சாப்பாடு. அதை போய்க்கூட நின்று சொல்வோம் என்று உன் அத்தைக்கும் இல்லை, வீட்டுக்கு மருமகளா வந்திருக்காங்களே அவங்களுக்குமில்லை. ஒரு மாமியார் வீட்டில் எப்படி நடந்துக்கிறாங்களோ அப்படித்தானே

வீட்டுக்கு வரும் மருமகளும் நடந்துப்பாங்க. முன் ஏர் செல்லும் வழியே பின் ஏர் செல்லும் என்று என் அம்மா சொல்வாங்க. வீட்டில் உள்ளவர்கள் எதையும் கவனிக்காமல் விட்டால் மற்றவர்களும் இது நமக்குத் தேவையில்லாத விஷயம் என்று ஒதுங்கி விடுவார்கள். இப்போ சில இடங்களில் தேவையில்லா இடமா அடுப்படி ஒதுங்கிற்று.''

''..............''

''எனக்கு மிக்ஸியில் சட்னி போட்டாலே பிடிப்பதில்லை. சாம்பார் அதைவிட மோசம். பருப்பைக் கொட்டி கெட்டியாக சாம்பார் வைத்து விடுகிறார்கள். எனக்கு அது பிடிப்பதில்லை. இருந்தாலும் நான் குறையும் சொல்வதில்லை. பேசாமல் சாப்பிட்டுப் போய்விடுவேன்'' என்றார்.

''என் அம்மா அம்மியில் மிளகாய்ச் சட்னி அரைப்பாங்க பாரு அத்தனை ருசியாக இருக்கும். சாம்பார் அத்தனை மணமாக பருப்பு கரைந்தும், கரையாமலும் கொஞ்சம் தண்ணியாக சுவையாக இருக்கும். இப்பொழுது சமையலில் ஒரு ருசியும் இல்லை. அந்த மசாலா எனக்கு ஒத்துக் கொள்ளவும் மாட்டேங்குது. இப்ப விளையும் பொருளும் அப்படித்தான் இருக்கு. உரத்தைப் போட்டு விளைவிக்கிறாங்க. எல்லாப் பொருள்களிலுமே ருசி மாறிவிட்டது.''

மறுநாள் அவர் சொன்னதுபோல் அம்மியில் மிளகாய் சட்னி அரைத்தாள். அவர் ருசித்துச் சாப்பிட்டார்.

சென்னையில் இவர் இங்கு வருவதை யாரிடமும் சொல்லவில்லை. 'நான் ஒரு முக்கியமான இடத்துக்குப் போறேன். என்னை போனில்கூட தொடர்பு கொள்ளக் கூடாது. நான் எப்ப வருவேன் என்று எனக்கேத் தெரியாது' என்று சொல்லிவிட்டுத் தான் வந்தார்.



இங்கு வந்ததும் செல்லையும் ஆஃப் செய்துவிட்டார்.

அமுதா புலம்பிக் கொண்டிருந்தார். ''எங்கு தான்டா போயிருப்பார். ஏன் இப்படி எல்லாம் பண்ணுகிறார். ஒரு போனாவது பண்ணிச் சொல்ல வேண்டாமா. நான் இங்கு இருக்கிறேன் என்று. நாம் என்ன செய்யப் போறோம்?'' என்று மகனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

கார்த்திக்கோ ஒன்றும் புரியவில்லை. எங்கு போயிருப்பார். இது மாதிரி இதுவரை நடந்ததில்லையே. ஒரு நாளைக்கு எத்தனை பேர் கேட்டு போன் பண்ணுகிறார்கள். இவர் ஏன் போனையும் ஆப் பண்ணி வைத்திருக்கணும். மனதிற்குள் சிறு பயம் எட்டிப் பார்த்தது.

இங்கு இப்படியிருக்குது. அங்கு விசுதாவுக்கு தர்ம சங்கடமாக இருந்தது. இவரை எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கச் சொல்ல முடியும். இது மாதிரி பிடிவாதமாக நாம் இருந்தால், இவர் கிளம்பி விடுவார் என்று நினைத்தாள். இவரோ அந்த நினைப்பே இல்லாமல் தினம் ஒரு கோயிலுக்குப் போய்விட்டு வருகிறார்.

இவர் கிளம்புகிற மாதிரி இல்லை. என்னால் அவர் குடும்பம் பிசினஸ் எல்லாம் கெடணுமா. இப்பவே பதினைந்து நாள் ஆகி விட்டது. இங்கு என்னோடுதான் இருக்கிறார் என்று தெரிந்தால் அவ்வளவுதான். கார்த்திக் மீண்டும் முருங்கை மரம் ஏறி விடுவான் என்று நினைத்தாள்.

இதற்கு வேறு வழியில்லை. எத்தனையோ தடவை சொல்லியாகி விட்டது. நீங்கள் போங்கள். நான் இருந்து கொள்வேன் என்று. அவர் கேட்பதாகத் தெரியவில்லை. இப்படி இருப்பவரை நீங்கள் போங்கள் என்று விரட்டவா முடியும். என்னால் இவர் ஏன் சிரமப்பட வேண்டும்.

இவர் கூட நான் போனாலும் நிம்மதியாக அங்கு நான் இருக்க முடியுமா. வீட்டில் பிரச்சனை தான் வரும். பேசாதவனை பார்த்துக் கொண்டு, எது செய்தாலும் இவன் என்ன சொல்வானோ என்று பயந்து கொண்டு, எத்தனை நாள் அங்கு இருக்க முடியும். இதை ஏன் இவர் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார். அங்கு போவது எனக்கு எத்தனை மனவேதனையாக இருக்கும். இவர் கூட்டிக் கொண்டு விட்டு விடுவார். பிரச்சனைகளை நான் தானே எதிர்கொள்ள வேண்டும். தினமும் போய் இவர் கிட்டே இவர்கள் என்னிடம் பிரச்சனை பண்ணு கிறார்கள் என்றா சொல்ல முடியும்.

அவர் காலையில் போய்விட்டு இரவுதான் வீடு வருவார். வந்ததுமே நானே சொன்னால் இவளை ஏன் கூட்டி வந்தோம் என்று கூட நினைக்கத் தோன்றும். இல்லையென்றால் வீட்டில் உள்ளவர்களைத் திட்டுவார். பிறகு வீட்டில் அவர்களுக்குள்ளும் பிரச்சனை எழும். என் மீது வெறுப்பு அதிகமாகுமே தவிர குறையாது. நானும் அது மாதிரி ஒரு சின்னப் பிரச்சனை என்றாலும், போய் சொல்லவும் முடியாது. அவர் பேசிவிட்டு போய் விடுவார். நான் அந்த வீட்டில் அவர்களுடன் தானே இருக்கணும்.

தனியே நான் இருந்து கொள்வேன் என்று வாய் சொன்னாலும் மனம் பதைத்தது. எப்படி தன்னந்தனியாக ஒரு வயதுப் பெண் வாழ முடியும். பாதுகாப்பு இல்லா மல் இருக்க முடியுமா. துணை இல்லையென்று வாலாட்டி னால் என்ன செய்ய முடியும் என்னால். எத்தனை நாள் பயந்து கொண்டு வாழ முடியும். இவர் போனால் பேசா மல் நாம் தற்கொலை பண்ணிக் கொள்ளலாம் என்று



நினைத்திருந்தாள். இவர் கூடவே இருந்து பேசிச் சிரித்து அந்த எண்ணத்தை வலுவிழக்கச் செய்து விட்டார். அப்பா இறந்தபோது இருந்த வைராக்கியமும், திடமும் இப்ப இல்லையே, அந்த நினைப்பே இல்லாமல் போய் விட்டதே. அந்த நேரத்தில் இவர் மட்டும் வராமலிருந் தால் இவள் நிச்சயம். தற்கொலை பண்ணியிருப்பாள். இதை நினைக்கவே நேரம் இல்லாமல் வேலை பார்த்தாள். அந்த நேரத்தில் வேகத்தில் தனக்கு யாருமே யில்லை என்ற எண்ணத்துடன் அவசரமாக எடுத்த முடிவு அது. இப்போ நான் உனக்கு இருக்கிறேன் மகளே... உன் அப்பா இல்லையென்று நினைக்க வேண்டாம் என்றெல் லாம் பேசி இவள் மனதின் உறுதியைக் குலைத்து விட் டார். இனி தற்கொலை பண்ணிக் கொள்ள அவளுக்கே பயமாக எண்ணவோ போல் இருந்தது. மனம் குழம் பியது அவளுக்கு.

குழம்பிய குட்டையில் தானே மீன் பிடிக்க முடியும். அவள் குழப்பமாக இருப்பதை கவனித்தார். அன்று இரவு டிபன் முடித்து விட்டு முற்றத்தில் இருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு சுசீந்திரம் போனதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

''இன்று என்னவோ லேசா நெஞ்சு வலித்த மாதிரி இருந்தது விசுதா. நான் வந்த அவசரத்தில் மாத்திரை களையும் எடுத்துக் கொண்டு வரலை. மெடிக்கல்லில் சொல்லி வாங்கலாம் என்றால் ஒரு சில மாத்திரைகளின் பெயரும் நினைவில் இல்லை. மெடிக்கல்லிலும் மருந்து சீட்டைக் கொண்டு வாருங்கள் தருகிறேன் என்கிறார்கள்'' என்றார்.

விசுதாவுக்கு மனம் திக்கென்றது. இத்தனை நாளாக மாத்திரை போடாமல் இருந்தால் உடம்பு என்னத்திற்கு

ஆவது. இப்படி தினம் பஸ்சில் அலைகிறாரே... இவர் உடம்பிற்கு ஏதாவது என்றால் நான் என்ன செய்ய முடியும். நெஞ்சு வலி வந்தால் நான் அவர்கள் குடும்பத்துக்கு என்ன பதில் சொல்ல முடியும். அப்பா இப்படிப் பண்ணினார். மகளும் அது போலவே பண்ணி விட்டாள் என்று திட்டுவார்கள்தானே. இவருக்கு பொறுப்பு நான் தானே இப்போ. இப்படியே சிந்தித்துக் கொண்டு அவர் சொல்வதை இவள் கவனிக்கவில்லை.

அதை அவரும் கவனித்தார். ''என்னம்மா விசுதா. இத்தனை பலமான சிந்தனை. என்னிடம் சொன்னால் நானும் உன்கூட சேர்ந்து சிந்தித்துச் செயல்படலாமே'' என்றார்.

எப்படி இப்போ என் மனசு மாறிவிட்டது. நான் தற்கொலை முடிவில் இருந்து மனம் மாறிவிட்டேன். இப்போ உங்க கூட வருகிறேன் என்று சொல்வது. தற்கொலை என்பது ஒரு வினாடி நேரத்தில் உணர்ச்சி வசப்பட்டு சிந்திக்காமல் எடுக்கும் முடிவு அது. தற்கொலை தீர்வு அல்ல. தற்காலிகமாக எடுக்கும் நிரந்தர முடிவு. தற்கொலையை இந்த வாரத்தில், மாதத்தில், இன்ன தேதியில் செய்து கொள்ளலாம் என்று திட்டம் போட்டு முடிவு எடுக்க முடியாது. ஒரு வேகத்தில் முடிவு எடுத்து விட்டாள். இப்போது மனம் தடுமாறியது. இவர் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வது. என்னால் இவருக்கு ஒன்று ஆகிவிட்டால் நான் தொலைந்தேன். இவர் தான் எங்களுக்குத் தகவல் சொல்லவில்லை. நீயாவது எங்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கலாமே என்றால் என்ன சொல்ல முடியும்.

இவர் பார்க்கும் ஹாஸ்பிட்டலே நகரத்திலேயே பெரியது நவீன வசதி கொண்டது. இங்கு அந்த வசதிகள் கிடையாது.



அவள் அவரை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். ''மாமா நீங்கள் வந்து பதினைந்து நாட்கள் ஆகிவிட்டது. உங்களுக்கும் எத்தனையோ வேலைகள். அதையெல்லாம் விட்டு விட்டு இப்படி என்கூட எத்தனை நாளைக்கு இருக்க முடியும். 'நான் ஒரு ஹாஸ்டலில் இருந்து கொள்கிறேன். எனக்கும் பாதுகாப்பாக இருக்கும். நீங்கள் தைரியமாகப் போய்விட்டு வாங்கள். நான் தினமும் உங்களுடன் போன் பண்ணிப் பேசுகிறேன்'' என்றாள். மீண்டும் ஒரு முறை சொல்லிப் பார்க்கலாமே என்று.

''ஏம்மா எனக்குச் சாப்பாடு போடுவது உனக்கு செலவு அதிகமா இருக்கா.''

''ஐய்யய்யோ... அப்படியெல்லாம் இல்லப்பா...'' என்றாள் அழுகுரலில்.

அப்புறம் ஏன் என்னை போகச் சொல்கிறாய். உன்னைத் தனியாக விட்டுவிட்டு நான் அங்க நிம்மதியாக இருக்க முடியுமா. என் மகன் தப்பு பண்ணிவிட்டான். நீ கண்ணீர் வடித்தாள் என் குடும்பம் நல்லா இருக்குமா. நான் எத்தனையோ பேருக்கு வேலை கொடுத்துச் சம்பளம் கொடுக்கிறேன். நீ என்னவென்றால் வேலைக்குப் போகிறேன் என்கிறாய். வேலைக்குப் போவது தப்பில்லை இந்த வேலையை அங்கு வந்து செய்யேன். நீ என்னை மாற்ற முயற்சி செய்யாதே. உன் மனசை மாத்த இல்லையென்றால் இப்படியே இருப்போம். இதுதான் என் கடைசி முடிவு. இனி இதுபற்றி நாம் பேச வேண்டாம்.''

''உங்கள் உடல்நிலை... அதான் அப்படிச் சொன்னேன்.''

''இருக்கட்டுமேம்மா. இப்போ என்ன ஆகிவிட்டது. என் உயிர் இங்குதான் பிரியணும் என்று விதி இருந்தால்

அதை யாரால் தடுக்க முடியும். எத்தனையோ பேர் வெளியே போனால் வீடு திரும்புறதில்லை. பிடிக்க வரும் எமன் இவன் பெரிய பணக்காரன், பெரிய பங்களா வில் இருக்கான். இவனை அங்கு போய்த்தான் பிடிக்கணும் என்றா நினைக்கும். பெரிய பெரிய கோடீஸ்வரன்கள் எல்லாம் ரோட்டில் உயிர் போகுது. எதுக்கு இப்படி ஓடி... ஓடி சம்பாதிக்கிறோம். எல்லாம் உயிரோட இருக்கும் வரைதான். நீ அதைப் பற்றி கவலைப்படாதே. எனக்கு என்ன நடக்கணும் என்று இருக்கோ அது தான் நடக்கும். அதை மாற்ற யாராலும் முடியாது.''

ஒரு பொண்ணோட சாபம் எனக்கு வேண்டாம்மா. என் பையன் செய்த தப்புக்கு நான் பிராயச்சித்தம் செய்கிறேன்.

அவள் உள்ளம் பதறியது.

''மாமா'' என்று அழுது விட்டாள். ''எனக்காக நீங்கள் இப்படிக் கஷ்டப்படும்போது, நான் உங்களுக்காக உங்ககூட வருகிறேன்'' என்றாள்.

''நீ எனக்காக வரக்கூடாது மகளே. நீ விருப்பப்பட்டு மனசார நீ வரணும். எனக்காக நீ வந்து மனவேதனைப் படக்கூடாது. கார்த்திக்கின் பாரா முகம் எனக்குத் தெரியும். உன் மனம் என்ன வேதனைப்படும் என்றும் எனக்குத் தெரியும். கொஞ்சம் நீ பொறுத்துத்தான் போகணும். அவன் மனம் கட்டாயம் மாறும் ஒருநாள். அதுவரை நீ பொறுமையாக இருக்கணும்தான். இப்படியே உன் வாழ்க்கை வீணாகக் கூடாது. ஒரு வயதுப் பெண் தனிமரமாக வாழ்நாள் முழுவதும் இருக்க முடியாது மகளே. இது பொல்லாத உலகம். இதில் எதிர் நீச்சல் போடுவது அத்தனை சுலபமில்லை. அவன் மேல் உள்ள



கோபத்தில் நீ வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளாதே. ஒரு பெண்ணுக்குக் கடைசி வரை பாதுகாப்பு முக்கியம். அதை நீ மனதில் கொள்ள வேண்டும். இதில் உன் விருப்பந்தான் முக்கியம்'' என்று முடித்தார்.

''இல்லை மாமா. நான் மனதாரத்தான் சொல்கிறேன். உங்களுடன் வருகிறேன்'' என்றாள்.

சரிம்மா. உன் விருப்பம். நாளைக்கே கிளம்பலாம் என்றார். அவர் போட்ட கணக்குத் தப்பவில்லை. இவள் இப்படிச் சொல்வாள் என்று நினைத்துத்தான் இத்தனை நாள் இருந்ததே.

மறுநாள் சென்னை வந்தார்கள். இருவரையும் பார்த்து அனைவரும் அதிர்ந்தனர். யாரும் நினைக்கவில்லை. இவர் விசுதா வீட்டிற்குப் போயிருப்பார் என்று. இப்போ அங்கு எதற்குப் போகணும். முன்னாடி என்றால் கூட கல்யாணம், வளைகாப்பு என்று கூட்டி வந்தார். இப்போ எதற்காகக் கூட்டி வந்திருக்கார். இத்தனை நாள் கூட இருந்தது. புரியாமல் அனைவரும் விழித்தனர்.

ஜனார்த்தனன் அனைவர் முகத்தையும் ஒரு முறை பார்த்த பின் நிதானமாக ''விசுதா இனி இங்குதான் இருக்கப் போகிறாள். அவள் அப்பா இறந்து விட்டார். இத்தனை நாள் நான் அங்கு தான் இருந்தேன். என் பிள்ளை செய்த தப்புக்கு பிராயச்சித்தம் செய்ய. பெண் பாவம் ஏழேழு ஜென்மத்துக்கும் தொடரும் என்பார்கள். தாலி கட்டிவிட்டு நடுத்தெருவில் விட்டு விட்டோம். இனி அவளுக்குனு யாருமில்லை. நான்தான் எல்லாம். என் வயிற்றில் பிறந்த மகன் இப்படிக் கல்லா இருப்பானு நினைக்கவில்லை. யார்தான் தப்பு பண்ணலை. அதே தப்பை நானும் பண்ண விரும்பலை.''

''இந்த வீட்டில் அவளைக் குறை சொல்வதோ... இல்லை குத்திப் பேசுவதோ கூடாது. இவ இங்கு இருப்பது யாருக்கும் பிடிக்கவில்லையென்றால் இப்பவே இந்த வீட்டை விட்டுப் போய் விடலாம். இவளுக்கும் இந்த வீட்டில் எல்லா உரிமையும் இருக்கு. என் மகளா.''

''இல்லை நாங்கள் இந்த வீட்டில் தான் இருப்போம். இவ இங்கு இருக்கக்கூடாது என்றால் நானும் அவளும் வெளியேறி விடுகிறோம். எது வசதி என்று முடி வெடுங்கள்.''

விசுதாவிடம் திரும்பி ''நீ மேலே போய் தங்கிக் கொள். யாருக்காகவும், எதுக்காகவும் நீ பயப்படாதே. யார் என்ன சொன்னாலும் என்னிடம் சொல்லத் தயங் காதே'' என்றார்.

கவிதா அதற்குள் ''இது என்னப்பா நியாயம். அவளுக் காக நீங்க வீட்டை விட்டுப் போகணுமா. இல்லை இந்த வீட்டில் உள்ளவர்கள் போகணுமா. ஏன் இப்படிப் பேசு றீங்க?

## 14

''கவிதா.. தா'' என்றார் அதட்டலாக.

''நீ வந்தால் உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ. இல்லையென்றால் இனி இங்கு வராதே. நீ உன் வீட்டில் இப்படித்தான் நடத்தப்படுறியா..? உனக்கு அறிவு வேண்டாம். நீயும் ஒரு பெண் தானே. அவளைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டாம்.''



''அவள் என்ன தப்பு செய்தாள். அவள் அப்பா தப்பு செய்தால் அவரைத் தண்டிக்க வேண்டியதுதான். இவளை எதுக்குத் தண்டிக்கணும். உன் அண்ணன் செய்தது சரியா...? நீ எடுத்துச் சொல்ல வேண்டாமா...? நீ எடுத்துச் சொல்லுமளவிற்கு அவன் என்ன அறிவு கெட்டா அலை கிறான்.''

''ஒரு மனுசனுக்கு கோபம் வரவேண்டியதுதான். இப்படிப் பழிவாங்கி அவர் உயிரைக் குடித்து, இவளை யும் அனாதை ஆக்கி எத்தனை கொடுமைகள் செய்து விட்டான். ஒரு நல்ல மனிதன் செய்யக்கூடிய காரியமா இது. இதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை.''

கவிதா மீண்டும் அவள் நல்ல குடும்பத்துப் பொண் ணாப்பா. அவள் ஒரு நடத்தை கெட்டவள். அவளுடன் என்னைச் சேர்த்து வைத்துப் பேசுறீங்க'' என்றாள்.

அவளை அடக்க கார்த்திக் ஓர் எட்டு எடுத்து முன் வைக்கும் முன்பே விசுதா வேகமாகப் போய் அவள் கன்னத்தில் அறைந்தாள்.

''நீ பார்த்தியாடி என்னை நடத்தைக் கெட்டவள் என்கிறே. எப்போ எந்த இடத்தில், யாரோடு என்னைப் பார்த்தாய் சொல். நான் இந்த இடத்திலேயே தூக்குப் போட்டுக் கொண்டு என் உயிரை விடுகிறேன். சொல் லுடி'' என்று அவளைப் பிடித்து உலுக்கினாள்.

அத்தனை பேரும் பிரமித்தனர்.

கவிதா கன்னத்தைப் பிடித்துக் கொண்டு அசையாமல் அப்படியே நின்றாள்.

அமுதா கத்தினார். ''உனக்கு என்ன தைரியம்டி என் பொண்ணை என் கண் முன்னாடியே கைநீட்டி அடிக்க'' என்று கையை ஓங்கினார்.

ஜனார்த்தனன் அமுதா கையைப் பிடித்துக் கொண்டு ''நீ மேலே போம்மா'' என்றார்.

அவள் குனிந்த தலையுடன் கையில் பெட்டியுடன் மேலே போனாள்.

அவன் அறைக் கதவைத் திறந்து முன் இருந்த அறையைப் பார்த்தாள். அது பூட்டியிருந்தது. வெளியே பெட்டியை வைத்து விட்டு அங்கேயே சுவரில் சாய்ந்து உட்கார்ந்து விட்டாள்.

அமுதா சீறினார் ஜனார்த்தனனிடம் ''என்னதான் உங்க மனசில நினைச்சுக்கிட்டு இருக்கீங்க.''

அவரும் கிண்டலாக. ''உன்னைத்தான் இத்தனை வருடமா நினைச்சிக்கிட்டு இருக்கேன். இப்போ அது தப்புனு தெரியுது. வேற மாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். உனக்குச் சம்மதமா'' என்றார்.

அமுதாவுக்குமே சிரிப்பு வந்தது. ''க்கும் அது ஒண்ணு தான் இப்ப குறைச்சல் உங்களுக்கு. பேச்சைப்பார் பிள்ளை கள் முன்னால்'' என்றார்.

பிள்ளைகளின் முகத்திலும் புன்னகை அரும்பியது.

''ஏங்க உங்க முன்னாடியே இப்படி அடிக்கிறாளே உங்களுக்குக் கோபம் வரலையா'' என்றார்.

''உன் பொண்ணு பேசினது சரியா. அதே வார்த்தையை விசுதா உன் பொண்ணைப் பார்த்துக் கேட்டிருந்தா நீ என்ன செய்வே. இந்நேரம் கண்டந்துண்டமா வெட்டி போட்டிருக்க மாட்டே. ஏன் நானே பேசாமல் இருப்பேனா, அவளுக்கு யாருமில்லேனுதானே இந்த வார்த்தையைக் கேட்டுட்டா. நான் செய்ய வேண்டியதை அவள் செய்துட்டாள். இதில் என்ன தப்பு இருக்கு.''



சிறிது நேரம் சென்று மேலே வந்தான் கார்த்திக். அவள் கையைத் தலையில் வைத்து உட்கார்ந்திருந்த கோலம் அவனை உறுத்தியது.

அவள் முன் வந்து நின்றான். அவள் எந்தச் சலனமும் இல்லாமல் அமர்ந்திருந்தாள்.

''சுதா'' என்றான் மென்மையாக.

அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை.

''உன் அப்பா இறந்துவிட்டாராமே... சாரி'' என்றான்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''உங்களுக்கு சந்தோசம் தானே. இனி நிம்மதியா இருப்பீங்க இல்ல. என்னை இந்த நிலமைக்கு ஆளாக்கின துக்கு. நான் மறுபடியும் இந்த வீட்டுக்குள் வரக்கூடாது என்று தான் நினைத்தேன். மறுபடியும் கடவுள் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்துட்டார்.''

''கவலைப்படாதீங்க. எவ்வளவு சீக்கிரம் இந்த உலகை விட்டுப் போகணுமோ... அவ்வளவு சீக்கிரம் போய் விடுவேன். இங்கு வந்ததற்கு என்னை மன்னித்து விடுங்கள்'' என்று அழுதாள்.

''நான் எத்தனை முறைதான் சாக முடியும். நீங்களும் உங்க தங்கையும் தான் என்னை வார்த்தையாலேயே கொன்று விட்டீங்களே'' என்று முகத்தை மூடிக் கொண்டாள்.

இவன் எவ்வளவோ பேசியிருக்கிறான். இவள் எதுவும் பேச மாட்டாள். இன்று கொட்டி விட்டாள். கார்த்திக் எதுவும் பேசவில்லை.

''உள்ளே வந்து படு சுதா'' என்றான்.

அவள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

இவன் உள்ளே போய் சாவியை எடுத்து வந்து அந்த அறைக் கதவைத் திறந்து விட்டான். ''போய் படு சுதா'' என்றான்.

அவள் எதையும் உணரவில்லை. அவன் போய் விட்டான்.

எத்தனை வாட்டி என்னைக் கேட்டிருப்பான். நீ அவன் கூட போனவள்தானே என்று. மறுபடியும் இங்கு வர நேர்ந்ததே. இவள் தங்கை பேசியதை இவனும் கேட்டுக் கொண்டுதானே இருந்தான். இனி இவன்கூடப் பேசவே கூடாது என்று நினைத்தாள்.

கார்த்திக் தூக்கத்தில் இருந்து விழித்தான். மெல்ல எழுந்து வந்து வெளியே எட்டிப் பார்த்தான். அவள் அதே நிலையில் உட்கார்ந்திருந்தாள். படுக்காமல் ஏன் இப்படி உட்கார்ந்திருக்காள் என்று பக்கத்தில் வந்து ''சுதா ஏன் படுக்காமல் இப்படியே உட்கார்ந்திருக்கே வா வந்து படு'' என்று அவள் கையைப் பிடித்தான்.

அவன் கையைச் சட்டென உதறினாள். ''என் கையைத் தொடாதீங்க. பிடித்துத் தூக்கிவிட்டு அவன் இது மாதிரி தான் தூக்கிவிட்டானா என்பீங்க'' முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

அவன் அப்படியே உறைந்து நின்றான்.

காலையில் எழுந்து எப்பவும் போல் வேலையைப் பார்த்தாள். கீதாவும் மசக்கையாக இருந்தாள். அவள் சாப் பிட்டவுடன் வாந்தி எடுத்து விட்டாள். விசுதா தண்ணீர் ஊற்றிக் கழுவி விட்டாள்.

கீதா ''வை விசுதா. நீ ஏன் கழுவுறே'' என்றாள்.

''பரவாயில்லை அக்கா. நான் கழுவக் கூடாதா. நீங்கள் போய் படுங்கள்'' என்றாள்.



அவள் போய் படுத்ததும் ஜூஸ் எடுத்துக் கொண்டு அவள் அறைக்குப் போனாள். இதை கார்த்திக் பார்த்துக் கொண்டிருந்தான்.

எல்லோருக்கும் தேவையானதைப் பார்த்துப் பார்த்துச் செய்தாள். மாமனாருக்கு அவர் விரும்பியது போல் சட்னி, சாம்பார், கூட்டு, என்று வைத்துக் கொடுத்தாள். கார்த்திக்கு மட்டும் எடுத்து வைக்க மாட்டாள்.

கார்த்திக் கோபப்பட்டான். எல்லோருக்கும் எடுத்து வைக்கிறா. எனக்கு மட்டும் எடுத்து வைத்துவிட்டுப் போய்விடுகிறாள். இன்று அத்தனை பேரும் டைனிங் டேபிளில் உட்கார்ந்து சாப்பிட்டனர். விசுதா தான் பரி மாறினாள்.

இதை மேலே இருந்து கவனித்த கார்த்திக். ''சுதா எனக்கு மேலே டிபன் எடுத்து வா'' என்றான்.

அவள் சங்கடமாக மற்றவர்களைப் பார்த்தாள். அவள் மாமனார் எடுத்துக் கொண்டு போம்மா'' என்றார்.

அவள் எடுத்துக் கொண்டு மேலே போய் அவன் அறை வாயிலில் நின்று கொண்டு ''இந்தாங்க டிபன்'' என்றாள்.

''ஏன் மகாராணி உள்ளே வரமாட்டீங்களோ...? உன் மாமனார்தான் உனக்கு எல்லா உரிமையும் இருக்கு. யாருக்காகவும் பயப்படாதே என்றாரே இப்ப வரவேண் டியதுதானே. நேற்று பேசியதெல்லாம் என்னைத்தானே'' என்றான் மென்சிரிப்புடன்.

''அதை நீங்க அவரைத்தான் கேட்கணும்'' என்றாள் துடுக்காக.

''சரி உள்ளே வந்து எனக்கு டிபன் எடுத்து வை'' என்றான்.

''நீங்களே சாப்பிட்டுக்கோங்க. கீழே எல்லாரும் சாப்பிடுறாங்க'' என்றாள்.

என்னைவிட உனக்கு அவங்கெல்லாம் முக்கியமா போச்சா. சரி நீ டிபனை எடுத்துப் போகலாம்'' என்றான் கட்டிலில் படுத்துக் கொண்டே.

இவள் உள்ளே போய் தட்டை வைத்து டிபனை எடுத்து வைத்தாள். ''வாங்க சாப்பிட'' என்றாள். அவன் பக்கத்தில் போய்.

அவன் கையை நீட்டினான் அவள் கைக்காக. அவள் பேசாமல் நிற்கவும் ''கை கொடுக்க மாட்டியா... ப்ளீஸ்'' என்றான்.

அவள் கையை மெல்ல நீட்டினாள். அவன் அவளைச் சுண்டி இழுத்து தன் மீது போட்டுக் கொண்டான்.

''விடுங்க என்னை என்னைத் தொடாதீங்க'' என்றாள் கோபமாக.

அவளை இறுக அணைத்து அவள் உதட்டில் முத்தமிட்டான். பிறகு எழுந்து சாப்பிட அமர்ந்தான். ''இப்படியே தினமும் பண்ணினால் இரவு டிபனையும் மேலே இரண்டு பேருக்கும் சேர்த்துக் கொண்டு வா...'' என்றான்.

ஞாயிறு அன்று காலையிலேயே விசுதாவை கிளம்பச் சொன்னான். ''கோயிலுக்குப் போய்விட்டு வெளியே போய் வரலாம்'' என்று.

அவள் ''எனக்கு வேலையிருக்கு நான் வரவில்லை'' என்றாள்.

''ஆமாடி எனக்கு வேலையில்லாமல் ஊரைப் பொறுக்கிக்கிட்டு அலையுறேன். உனக்குத்தான் வேலை இருக்கு. நீ பெரிய இவ. நீ இல்லாமே எதுவும் நடக்காது பாரு.



போடி இவளே. போய் கிளம்பி மரியாதையாக வா...'' என்றான் ஆத்திரமாக.

இது ஜனார்த்தனன் காதில் விழுந்தது. அவர் வெளியே வந்தார்.

''நீ என்ன இந்த வீட்டு வேலைக்காரியா. எல்லோருக்கும் வேலை பார்க்க. இப்ப வர முடியுமா...? இல்லை முடியாதா...?

ஜனார்த்தனன் வாய் திறந்தார். ''கட்டிய கணவன் தன் மனைவியை மனைவியா மதித்து நடத்தினால்தான் மற்றவர்கள் அவளை மதிப்பார்கள். உன் அன்பு அவளுக்குக் கிடைக்கவில்லை. மற்றவர்களாவது நம்மிடம் அன்பாக இருக்கட்டுமே என்றுதான் இப்படி வேலை பார்க்கிறாள். இதில் என்ன தப்பு இருக்கு.''

பிறகு விசுதாவிடம் திரும்பி, ''நீ இவன் கூட போய்ட்டு வாம்மா. இங்கே எல்லாம் பார்த்துப்பாங்க'' என்றார்.

அவள் கண்களின் தயக்கம் ''என்ன செய்வது விசுதாம்மா. சில ஆம்பளைங்களை இப்படித்தான் அவங்க போக்கில் விட்டுத் திருத்தணும். இப்பத்தான் ஐயா கொஞ்சம் இறங்கி வர்றார். நீ மறுக்காதே. அவன் பேசியதை மறக்கத்தான் முடியாது. என்ன செய்வது. எனக்காக அவனை மன்னித்து விடும்மா.

நான் வேண்டுமானால் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன்'' என்றார். வேண்டும் குரலில்.

''மாமா என்ன பேசுறீங்க. உங்களுக்காக நான் எதுவும் செய்வேன்'' என்றாள் கலங்கிய கண்களுடன்.

''குட். நீ வேறு எதுவும் செய்ய வேண்டாம். என் மகனை அனுசரித்து, அவன் சொல்வது போல் நடந்து கொள்'' என்றார் மறைமுகமாக.

கோயிலுக்குப் போய்விட்டு அப்படியே மகாபலிபுரத்திற்கு காரை விட்டான்.

இவனுடன் இவளுக்கு வரவே விருப்பமில்லை. மாமனார் சொன்னார் என்பதற்காகத்தான் வந்தாள். இவன் வெளியே போகலாம் என்று சொல்லிவிட்டு மகாபலிபுரம் வந்து ஒரு காட்டேஜ் முன்னால் வண்டியை நிறுத்தினான்.

''இறங்கு'' என்று கார் கதவைத் திறந்து விட்டான்.

மெல்ல இறங்கி காட்டேஜினுள் சென்றாள். அவனும் பின்னாடியே வந்து கதவைச் சாத்தினான்.

## 15

கார்த்திக் உள்ளே சென்றதும் கட்டிலில் படுத்து விட்டான். விசுதாவுக்கு திக்கென்றது. 'என்ன இது இப்படிப் படுத்து விட்டான். எல்லாம் இவன் இஷ்டம் போல வா... என்றால வரணும். போ... என்றால் போகணும்.' மொத்தமாக அவன் மீது எரிச்சல் வந்தது.

அவன் படுத்ததும் சிறிது நேரம் எந்த சத்தமுமில்லை. ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள். அவன் கண் மூடிப்படுத்திருந்தான். இவளிடம் ஒன்று பேசவில்லை.

'இன்று தன்னிடம் நெருங்கட்டும். நாலு வார்த்தை நறுக்கென கேட்கிறேன். நான் இவன் வேண்டும் என்று எத்தனை இறங்கி வந்தேன். எப்படிப் பேசினான். இவனுக்கு நான் வேண்டுமா...? முடியவே முடியாது. இவன் என்னதான் மனதில் நினைத்துக் கொண்டு இருக்கிறான்' என்று மனதில் கறுவினாள்.



இவன் கூட வரும்போதே மனதைக் கலக்கியது. மாமனார் வேறு மகன் குணம் கண்டு விட்டுக் கொடுத்துப் போ என்றார். எதை விட்டுக் கொடுப்பது. அவன் கேட்ட ஒவ்வொரு கேள்வியும், இன்னும் காதில் ஒலித்தது. தன் அப்பாவின் மரணம் இவனால் தான். இன்று யாருமில்லாத அனாதையாக இருக்கிறேன் என்று கண் கலங்கினாள்.

இவ்வாறு நினைத்துக் கொண்டே அவளும் கட்டிலின் ஓரத்தில் படுத்துத் தூங்கிப் போனாள்.

மாலை மணி ஐந்தாகியது. கார்த்திக் விழித்தான். தன் கால் ஓரத்தில் விசுதா படுத்திருப்பது தெரிந்தது.

மெல்ல எழுந்தான். அவள் முகத்தையே உற்றுப் பார்த்தான். கன்னத்தில் கண்ணீர்க் கோடுகள் காய்ந்திருந்தன.

என்ன நினைத்து அழுதிருப்பாள். இன்று தன்னைத் தனியாக அழைத்து வந்து கட்டாயப்படுத்துவான் என்று நினைத்திருப்பாள். நான் தூங்கவும் இவளும் படுத்துத் தூங்கி விட்டாள்.

''சுதா'' என்று எழுப்பினான்.

அவள் பதறி எழுந்தாள். எங்கிருக்கோம் என்று சிறிது நேரம் புரியாமல் விழித்தாள்.

''முகம் கழுவிவிட்டுக் கிளம்பு கொஞ்ச நேரம் கடற்கரைக்குப் போய்விட்டு வருவோம் சுதா'' என்றான்.

சுதாவாம் சுதா. என்னமோ பொண்டாட்டி மீது அன்பு அதிகமாகி கொஞ்சிக் கூப்பிடுவது போல் என்ன பெயர் சுருக்கம் வேண்டிக் கிடக்கு. இவளுக்கு எரிச்சலாக வந்தது.

இவள் எழுந்து கிளம்பினாள். இருவரும் மதியம் சாப்பிடவில்லை. அதனால் டிபன் சாப்பிட்டுவிட்டு மெல்ல நடந்து கடற்கரைக்குச் சென்றனர். எதுவும் பேசாமல்.

சிறிது தூரம் தண்ணீருக்குள் சென்றனர். ஒரு பெரிய அலை ஒன்று வந்தது. அதில் நிற்க முடியாமல் தடுமாறினாள். உடனே கார்த்திக் அவள் கையை பிடித்துக் கொண்டான்.

முழுவதும் நனைந்து விட்டனர். விசுதாவுக்கு எப்போதுமே அலைகளில் விளையாடப் பிடிக்கும். இன்றும் விருப்பமாக இருந்தது. அவன் கையை விட்டுவிட்டு தள்ளிப்போய் சிறிது நேரம் விளையாண்டாள். அதில் கீழே விழுந்து எழுந்தாள்.

மணி ஏழாகியது. ''வா சுதா போகலாம்'' என்று மணலை தட்டிவிட்டு எழுந்தான்.

இவளும் அவன் பின்னே ஈரச் சேலை தடுக்க மெல்ல நடந்தாள். இவள் வேற டிரஸ்சும் எடுத்து வரவில்லை. இவர்கள் நடந்து காட்டேஜ் போவதற்குள் சேலை பாதி உலர்ந்து விட்டது.

வீட்டுக்கு போகலாம் என்று காரை எடுத்தான். இவளுக்கு பக்கென்றது. இவன் எதற்காக இங்கு கூட்டி வந்தான். இப்போ ஏன் இப்படி கூட்டிப் போறான்.

அவளையும் அறியாமல் மனதில் ஏதோ.. ஒரு ஏமாற்றம். அவன் மேல் கோபம் என்றாலும், மனதில் ஒரு ஓரத்தில் ஒருவித எதிர்பார்ப்பு இருப்பதை அவள் உணர்ந்தாள்.

அவனின் அருகாமை அவளின் பெண்மையை உணர வைத்தது. 'இத்தனை தனிமை கிடைத்தும் ஏன் இவன் இப்படிப் போகிறான். இவனுள் எந்த மாற்றமும் ஏற்படவில்லையா. என்மேல் எத்தனை வெறுப்பிருந்தால் இது மாதிரி செல்வான். இவன் மனம் மாறவில்லை. கொஞ்சம் இறக்கமாகப் பேசுவது கூட என் அப்பா இறந்ததால் உண்டான பரிதாபத்தால் தான். யாருக்கு வேண்டும் இவனோட பரிதாபம்.'



வீட்டுக்கு வந்ததும் பிசுபிசுப்பு போக குளித்தாள். தலைக்கு துண்டை கட்டிக் கொண்டு கீழே வந்தாள். எல்லோரும் அவளை ஒரு மாதிரியாக பார்ப்பது போல் இவளுக்குத் தெரிந்தது.

இப்பொழுது விசுதா அவனிடம் சுத்தமாகப் பேசுவதில்லை. அவனும் பேசுவதை நிறுத்திவிட்டான்.

அன்று இரவு கார்த்திக் அறையில் சத்தம் கேட்டது. விசுதா எழுந்து போய் கதவை லேசாக திறந்து பார்த்தாள். அவன் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான்.

இவளுக்கு உடம்பெல்லாம் பதறியது. வேகமாக உள்ளே போனாள். அவனுக்கு முகமெல்லாம் வியர்த்து விட்டது. குடித்திருப்பான் போல.

''என்னங்க செய்யுது. ஏன் இப்படி வாந்தி எடுக்கறீங்க'' என்றாள்.

''எனக்கு ஒன்றுமில்லை. நீ போய்ப் படு'' என்றான்.

அவன் முகத்தை முந்தானையால் ஒற்றியெடுத்தாள். மெல்ல கூட்டிப் போய் வாய் கொப்பளித்து விட்டு மறுபடியும் படுக்க வைத்தாள்.

பின் வாந்தியெடுத்ததை அத்தனையும் துடைத்து கழுவி சுத்தம் செய்தாள்.

''மாமாவை கூட்டி வரட்டுமா..?'' என்றாள்.

''எதுக்கு..?''

''இல்லே வாந்தி எடுக்குறீங்களே... அதுக்குத்தான்.''

''ஏன் உன் மாமனார் வந்ததும் வாந்தி பயந்துக்கிட்டு நின்று விடுமா..?'' என்றான் எரிச்சலாக.

''குடிச்சிட்டு வந்தீங்களா..?''

''ஆமாம். குடிச்சிட்டுத்தான் வந்தேன்.''

''எதுக்கு குடிச்சீங்க...?''

''எனக்கு நிம்மதியில்லை. அதான் குடிச்சேன்.''

''அதென்னங்க ஆம்பளைங்க மட்டும் குடிச்சா நிம்மதி யில்லை அதான் குடிச்சேன் என்று பொய் சாக்கு. குடிப் பதற்கு இது ஒரு காரணம். அதை தூக்கி பொண்டாட்டி மேலே போட்டுவிட்டு நிம்மதியாக இருப்பது. ஏன் எங்களுக்கெல்லாம் பிரச்சனையே இல்லையா. நாங்கள் எல்லாம் நிம்மதியாகத்தான் இருக்கோமா. எங்கே சொல் லுங்க ஆம்பளைங்க எல்லாம் நாங்கள் பொண்டாட்டிங் களையெல்லாம் நிம்மதியாகத்தான் வைத்திருக்கோம் என்று. இல்லை பொம்பளைங்களைத்தான் சொல்லச் சொல்லுங்களேன். எத்தனை பிரச்சனை இருந்தாலும் வெளியே தெரியாமல் வீட்டில் உள்ள வேலைகள் அனைத் தையும் செய்து, பிள்ளைகள், பெரியவர்கள், உங்களை, எல்லாம் கவனித்து, இதில் வேலைக்கு போகும் பெண் கள் எத்தனை. ஏன் உனக்கும் நிம்மதியில்லை தானே இந்தா நீயும் குடி என்று வாங்கி வந்து கொடுப்பது தானே. ஏன் நாங்கள் மட்டும் நிம்மதியாக இருக்கக் கூடாதா. இதில் கூட ஆம்பளைங்களுக்கு சுயநலம் தான்.''

''நீங்கள் நிம்மதியை காசு கொடுத்து வாங்குறீங்க. நாங்க வேலைக்கு போன மனிதன் எப்போ வீட்டுக்கு வருவான் என்று உயிரை கையில் பிடித்துக் கொண்டு காத்திருக்க வேண்டும். எங்க நிம்மதிக்காக விஷத்தையா குடிக்க முடியும். உங்களோட ஒரு சிறு புன்னகை தான் எங்களோட நிம்மதி என்று எத்தனை பேர் உணருறாங்க.''



''சுரீர்'' என்றது அவனுக்கு. அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். கண்கள் கலங்கியிருந்தன.

அவள் வெளியே சென்றுவிட்டாள்.

காலையில் அவனுக்கு சீக்கிரம் காபி கொண்டு வந் தாள்.

அவன் காபியை வாங்கி குடித்தான். ''நீ குடிச்சியா காபி'' என்றான்.

''இல்லை. இனிமேல்தான்.''

''எல்லாருக்கும் கொடுத்திட்டியா...?''

''ம். கொடுத்திட்டேன்.''

அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

''நல்லாயிருக்கா'' என்றாள்.

''பேஷ்.. பேஷ்... ரொம்ப நன்னாயிருக்கு'' என்றான்.

''உங்களுக்கு நல்லாயிருக்கா'' என்றேன்.

''பரவாயில்லையே..'' என்றான்.

இவள் பார்வையை தழைத்துக் கொண்டாள்.

கீதாவும் அவள் அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டாள். வேலைக்காரியும் மகளுக்கு முடியவில்லையென்று போய்விட்டாள். அத்தனை வேலையும் விசுதா தான் பார்த்தாள்.

இப்படியே ஒரு மாதம் ஓடியது.

தேவிக்கு ஆண் குழந்தை பிறந்தது. கீதாவும் வீட் டுக்கு வந்துவிட்டாள். எல்லோரும் பார்க்க கிளம்பினர்.

விசுதாவுக்கும் போக ஆசைதான். யாரும் சொல்லாமல் இவள் எப்படிக் கிளம்ப முடியும். இவள் மாமனார் பார்த்து வாம்மா என்றால் தான் இவள் போக முடியும்.

விசுதாவைப் பார்த்து ''நீயும் வாம்மா'' என்றார்.

''சரி'' என்று அவளும் கிளம்பினாள்.

ஒரு காரில் கீதாவும் ராம்மோகனும். மறுகாரில் ஜனார்த்தனன், அமுதா, சரவணன் ஏறிக் கொண்டனர்.

இவளுக்கு எதில் ஏறுவது என்று தயக்கமாக இருந்தது. ஜனார்த்தனன் ''நீ அந்தக் காரில் வாம்மா'' என்றார்.

விசுதா அங்கு போகவும் கீதா ''இங்கு நாங்கள் இரண்டு பேர் மட்டுந்தான் உட்கார முடியும். குழந்தை வேறு இருக்கு. நீ வந்து எங்கு உட்காருவாய். எங்க இரண்டு பேருக்கும் நடுவிலா... இது எனக்கு எங்க வீட்டில் வாங்கி கொடுத்த கார் கண்டவங்களும் போவதற்கில்லை'' என்றாள். முகத்தில் அடிப்பது போல.

''சரிங்கக்கா நீங்க போய்ட்டு வாங்க'' என்று உள்ளே செல்லத் திரும்பினாள்.

''யாரைக் கேட்டுடி நீ கிளம்பினே...'' கோபத்தில் கண்கள் சிவக்க நறுக்கென குட்டினான் கார்த்திக்.

ஜனார்த்தனன் இறங்கி வந்தார். ''நான் தான்டா கிளம்பச் சொன்னேன்.''

''எதுக்கு அவளைக் கிளம்பச் சொன்னீங்க. காரில் இட மில்லை என்று தெரிந்தும். அவ என்ன அப்பன் வீட்டில இருந்து கார் கொண்டு வந்தாளா..? இல்லை நீங்கள் தான் வாங்கிக் கொடுத்தீங்களா..?'' என்றான் கோபமாக.

''சரிடா. நீதான் நாங்கள் வந்த பிறகு கூட்டிட்டுப் போய்ட்டு வாடா. நான் போன பிறகு எதுவும் திட்டாதே'' என்றார்.

அமுதா அதற்குள் ''கிளம்பும் போதே இவளால் பிரச் சனை. என்னிக்கு இந்த வீட்டுக்கு வந்தாளோ அப்போ



யிருந்தே பிரச்சனைதான். நல்லபடியா போய்ச் சேர்ந்த மாதிரிதான்'' நொடித்தார்.

கார்த்திக்குக்கு வந்ததே கோபம் ''என்னம்மா அவளாலே உங்களுக்குப் பிரச்சனை'' பக்கத்தில் நின்ற விசுதாவை இரண்டு போட்டு உள்ளே அனுப்பி வைத்தான்.

''அவ உங்களுக்கெல்லாம் வேலைக்காரி மாதிரி வேலை பார்த்து ஆக்கிப் போடவும் தான் நேரத்திற்கு சாப்பிடுறீங்க. ஏன் உங்க பெரிய மருமகளை ஆக்கிப் போடச் சொல்ல வேண்டியது தானே. பிரச்சனை இல் லாத மருமகளை. அவ என்ன பிரச்சனை பண்ணினாள். நான்தான் பண்ணினேன்.''

விசுதா அவள் அறைக்குள் சென்று படுத்துவிட்டாள். அவன் பேசியது மனது வலித்தது.

மறுநாள் விசுதா சாப்பிட்டு கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த கார்த்திக் ''சுதா என்னுடைய மோதிரத்தை கழட்டி டேபிள் மீது வைத்திருந்தேன் காணவில்லை. நீ பார்த்தியா'' என்றான்.

அவளுக்கு வாயில் வைத்த இட்லி விக்கியது. வாய்க்கு கொண்டு போன கை பாதியில் அப்படியே நின்றது. அவள் வழியும் நீரோடு அவனைப் பார்த்தாள்.

அவன் அப்போது தான் தன் தவறை உணர்ந்தான். அவன் எதார்த்தமாகத்தான் கேட்டான். முன்னாடி நடந் ததையெல்லாம் அவன் மறந்துவிட்டான். தான் இப்படிக் கேட்டால் இவள் தப்பாக நினைப்பாளே என்ற எண் ணமேயில்லை.

அவள் அழுவதைப் பார்த்து ''சாரி சுதா. நான் சாதா ரணமாகத்தான் கேட்டேன். நீ தப்பாக எடுத்துக் கொள் ளாதே'' என்றான்.

''.......''

இரவு அவன் வரும் போது அவள் கீழே இல்லை. சமையல்காரம்மா ''இன்று கீழே வரவேயில்லை. சாப்பிடவுமில்லை'' என்றாள்.

இவன் வேகமாக மேலே வந்தான். தான் காலையில் கேட்டது தான் அவள் இப்படிச் சாப்பிடாமே இருக்காள். உண்மையிலேயே அவன் வேறு எண்ணத்தில் கேட்கவில்லை. நான் கேட்டது அவள் மனதைப் பாதித்துவிட்டது. அவளை நான் சந்தேகப்பட்டுத்தான் கேட்டேன் என்று நினைத்துவிட்டாள்.

அன்று பேசியது கூட கோபத்தில் குத்தி காட்டத்தான் அப்படிப் பேசினானே தவிர, உண்மையில் அவள் மேல் திருட்டுப் பட்டம் கட்டவில்லை.

அவள் அறைக் கதவைத் தட்டினான். சிறிது நேரத்திற்குப் பிறகு கதவைத் திறந்தாள்.

இவன் வேகமாக உள்ளே போனான். கட்டிலில் ஒரு பெரிய பேக் ஒன்று இருந்தது.

''சுதா நீ காலையில் இருந்து ஒன்றும் சாப்பிடவில்லையாமே ஏன்..? நான் சாதாரணமாகத்தான் கேட்டேன். எப்பவும் அங்கு தான் வைப்பேன். இன்று பாத்ரூமிலேயே வைத்திருக்கேன். அதை மறந்து தான் உன்னிடம் கேட்டேன். நீ தப்பாக எடுத்துக் கொண்டாய்.''

''சரி. பரவாயில்லை விடுங்க. உண்மையைத்தானே சொன்னீங்க. எனக்கு ரோசம் வரலாமா..? நான் இங்கு வந்ததே தப்புத்தான்.''

''என்ன பேக் எல்லாம் எடுத்து வச்சிருக்கே..?''

''நான் ஊருக்கு போறேன் அதான்'' என்றாள். எங்கோ பார்த்துக் கொண்டு.



''எந்த ஊருக்கு..?''

''எங்க ஊருக்கத்தான்.''

''அங்கு யார் இருக்கா...? அங்கு எங்கு போவே...? வீட்டைக் கூட வித்துட்டேயில்லை.''

''ஆமாம். அதான் எங்கு போவதென்று தெரியவில்லை. அந்த ஊர்தான் எனக்குத் தெரிந்த ஊர். நான் வேறு எங்கு போக முடியும்'' முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

கார்த்திக் பக்கத்தில் போய் அவளை சட்டென அணைத்தான்.

''ப்ளீஸ் சுதா. நான் கேட்டது தப்புத்தான். இதை நீ இவ்வளவு தூரம் பெரிசு பண்ணுவே என்று நான் நினைக்கவில்லை. நீ வீட்டை விட்டுப் போக வேண்டாம்.''

''நான் எப்படி இனி இந்த வீட்டில் இருக்க முடியும். நீங்களே.. என்னை நம்பாத போது. இப்படியே காணவில்லை என்றவுடன் என்னைத்தான் சந்தேகமா பார்க்கிறீங்க. என்னால் அதைத் தாங்க முடியவில்லை.

''நான் ஊருக்குப் போய் விடுகிறேன். ஒரு ஸ்கூலில் வேலை பார்த்தேன். அது மாதிரி பார்த்துக் கொண்டு ஹாஸ்டலில் தங்கிக் கொள்கிறேன்'' என்றாள்.

கார்த்திக்கே என்னவோ போல் இருந்தது. ''நீ அப்பா கூப்பிடவும்தானே வந்தே. இப்போ அவர் இல்லை. நீ போய்விட்டால் அவருக்கு என்ன மரியாதை.''

''மாமா வந்தால் என்னை விடமாட்டார். அதனால் அவர் வருவதற்குள் போய் விடுகிறேன்.''

''அப்போ நான்தான் உன்னை விரட்டிவிட்டேன் என்று என் மீது பழி வரவேண்டும் அப்படித்தானே...?''

''நான் உங்களை காட்டிக் கொடுக்க மாட்டேன்.''

''ஏன்...?''

''......''

''சுதா என்னை புரிஞ்சுக்கடா. நீ இங்கேயே இரு. இனி இது மாதிரி நான் பேசமாட்டேன்.''

அவளை இறுக அணைத்தான். அவள் அவனைப் பிடித்து தள்ளினாள். ''என்னை விடுங்க'' என்று.

''சரி வா சாப்பிடப் போகலாம்'' என்றான்.

''நான் வரலை. நீங்கள் போய் சாப்பிடுங்க'' என்றாள்.

இவன் கீழே போய் இருவரும் சாப்பிட டிபன் எடுத்து வந்தான்.

பிளேட்டில் எடுத்து வைத்து அவளிடம் நீட்டினான். அவள் வாங்க மறுத்தாள். ''சரி நானும் சாப்பிடலே... நல்ல பசியோட வந்தேன். வீட்டில் நம் இரண்டு பேர்தான் ஏதாவது நல்ல டிபன் பண்ணி வைத்திருப்பே'' என்று எழுந்து போனான்.

அவள் இட்லியை எடுத்து சாப்பிட்டாள். அழுது கொண்டே....

''சுதா. நீ அழுவதை நிறுத்து. எனக்கு மனசு கஷ்டமாயிருக்கு'' என்றான்.

''ஏன் சந்தோசப்பட வேண்டியதுதானே. நான் இப்படி காலம்பூராம் அழணும் என்று தானே.. என்னை இப்படிப் பண்ணினீங்க..?''

''என் இடத்தில் இருந்து யோசித்துப் பார். உன் அப்பா செய்தது சரியா...?''

''ஆமா. இரண்டு பேரும் என்னை கேட்டுத்தானே செய்தீங்க. நான் சொல்வதற்கு. அதற்குத்தான் பழிவாங்



கிட்டீங்களே... எப்பேர்ப்பட்ட பழி. அன்று என் அப்பா துடித்த துடிப்பு... ஐயோ..'' என்று கதறி அழுதாள்.

''அத்தனை பேர் முன்னாடி என்னை நடத்தை கெட்டவள், என் அப்பா பணத்துக்காக கூட்டிக் கொடுத்தார் என்றீங்களே... அதையெல்லாம் கேட்டுக் கொண்டு இன்னும் நான் உயிரோட தானே இருக்கேன்.''

அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு மௌனமாக இருந்தான்.

''என் அப்பா பணத்தை எடுத்தது தப்புத்தான். உங்க மீது பழி போட்டிருக்கக் கூடாதுதான். அதுக்காக நான் என்ன தப்பு செய்தேன். என் கண் முன்னாடியே என் அப்பா... கொஞ்சம்... கொஞ்சமாக செத்தார். அதைப் பார்த்த எனக்கு எப்படியிருக்கும்.''

அவன் உதடு ஏளனமாக வளைந்தது.

''இவ்வளவு எல்லாம் செய்தீங்களே.. எங்கப்பா சொன்னது இல்லைனு ஆயிடுச்சா... சொன்னது சொன்னது தானே...?

''அதற்குப் பிறகு இரண்டு வருடம். எனக்கு உங்க முகங்கூட நினைவில்லை. என்றாவது ஒரு நாள் வரமாட்டீங்களா... என்று எப்படி எதிர்பார்த்தேன்.

''உங்க அப்பா வந்து கூப்பிட்டு வரலைன்னா. என்னோட நிலைமை என்ன..? எனக்குத் தெரியும். இங்க வந்தாலும் என்னைச் சேர்த்துக்க மாட்டீங்கன்னு. முதல் தடவை வரும்போது கொஞ்சம் எதிர்பார்ப்போடு தான் வந்தேன்.

''இரண்டு வருடம் உங்களை மாற்றி இருக்கும் என்று பிறகு தான் தெரிந்தது நீங்கள் மாறவில்லை என்று. இனி

இந்த வீட்டுக்கு யாருக்காக நான் வரணும் என்று தான் நினைத்தேன்.''

''..........''

''என் அப்பா கூடவே போய்விடணும் என்று தான் முடிவெடுத்தேன். உங்கப்பா விடவில்லை என்னை. எந்த உரிமையிலே நான் இந்த வீட்டில் இருக்க முடியும். உங்கப்பா ஆயிரம் சொல்லலாம். உங்களை வைத்துத் தானே நான்... உறவு. அதான் நான் சாப்பிடும் சாப்பாடு சும்மா கிடைக்குமா..? அத்தனை வேலையும் செய் கிறேன். நான் நெருப்பின் மீது இருப்பது போலத்தான் இங்கு இருக்கிறேன். இனி நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் இங்கு வரவில்லை.''

கண்களை இறுக மூடினான்.

''நான் முதலில் இங்கு வந்த போது என் அப்பா போகாதே என்றார். நான் கேட்காமல் வந்தேன். இங்கேயே இரு என்று சொல்லமாட்டீங்களா...? என்ற ஒரு நப் பாசைதான்.

''ஒருத்தரும் சொல்லவில்லை. நான் அங்கு போனதும் என் அப்பா வீட்டுக்குள் விடவில்லை. இரவு முழுவதும் வெளியில் தான் உட்கார்ந்திருந்தேன். நான் என்ன செய்ய முடியும். இரண்டு வீட்லேயும் வராதே என்றால்... நான் எங்கு போவேன். பின் என் அப்பாவுக்கு சத்தியம் செய்து கொடுத்தேன்.''

''..........''

''இனி நான் அங்கு போகமாட்டேன். என்னை வீட்டுக் குள் விடுங்கப்பா என்று. நான் சத்தியம் செய்த போது என் மனசு எப்படித் துடித்தது தெரியுமா..? தாலி கட்டிய



புருசன் வீட்டுக்குப் போக மாட்டேன் என்று சொல்ல. இரண்டு பேரும் என்னை எப்படி இக்கட்டான சூழ்நிலை யில் என்னை நிறுத்தியிருக்கீங்க பார்த்தீங்களா. அதை யும் மீறி வளைகாப்பிற்கு வந்தேன். என் மனசெல்லாம். ஒரு வார்த்தை பேசமாட்டீங்களா.... நீ நல்லா இருக்கியா என்று கேட்க மாட்டீங்களா... இங்கேயே இரு என்று சொல்ல மாட்டீங்களா... என்று தவிக்கும். அதான் கூப் பிட்டதும் ஓடி வந்தேன். அப்போதும் இரு என்று யாரும் சொல்லவில்லை.''

உதட்டை இறுக கடித்தான்.

''அப்போ போன போது என் அப்பா என்னை அடித் தார். சிறு வயது முதல் நான் அப்பா முகத்தை பார்த்துத் தான் வளர்ந்தேன். என் அப்பா என்னை ஒரு நாள் கூட அடித்ததில்லை. அன்று அடித்தார். ஒரு அப்பா கேட்க கூடாத கேள்வியெல்லாம் கேட்டார். நான் உங்..க..ளு..க் காகத்தான் உ..ட..ம்..பை வி..ற்..கப் போ..னியா'' என்று திரும்பி நின்று விசும்பினாள்.

''சுதா'' என்று இறுக அணைத்தான்.

தன்னை விடுவித்துக் கொண்டு ''அத்தனையும் பொறுத்தேன். அவர் கோபத்தை உங்க மீது காட்ட முடி யாமல் தான் என்னை இப்படி பேசுகிறார் என்று புரிந்து கொண்டேன். வாயே திறக்கமாட்டேன். நீங்கள் சொல் லித்தான் என் தாய் ஓடிப்போனவள் என்று எனக்குத் தெரியும். அதுவரை எனக்குத் தெரியாது. பின் என் அப்பாவிடமும் கேட்டேன். எந்த பதிலும் இல்லை. இதைக் கேட்டு அவரை நோகடித்து, தெரிந்து நான் என்ன பண்ணப் போறேன் என்று விட்டு விட்டேன்.''

''சாரிடா.. கண்மணி..'' அவள் கையை எடுத்து அதில் இதழ் பதித்தான்.

''உங்களையும் நான் புரிந்து கொண்டேன். வீட்டினர் முன் உங்களை பணத்தை எடுத்தியா... என்று கேட்டால் எப்படி இருந்திருக்கும். எனக்கு நீங்க கேட்ட போது எப்படி என் உயிர் துடித்ததோ... அது மாதிரித் தானே உங்களுக்கும் துடித்திருக்கும்.''

''ஆமாம் சுதா. நான் அப்படித்தான் துடித்தேன். அதை அந்த நிமிடத்தை என்..னால் மறக்க முடியாது'' கண்களை மூடித் திறந்தான். அதில் அத்தனை வேதனை படர்ந்திருந்தது.

''நீ இத்தனை வேதனை பட்டிருப்பாய் என்று நான் நினைக்கவில்லையடா.. கோபம் என் கண்ணை மறைத்தது. சாரிடா'' என்றான்.

''நான் ரமேசை காதலித்தேன் என்று சொன்னீங்க. ஊர் சுற்றினேன் என்று சொன்னீங்க. ஏன் இப்படியெல்லாம் இல்லாததை சொன்னீங்க..? இது மட்டும் எப்பேர்ப்பட்ட பழி. இந்தக் களங்கத்தை துடைக்க முடியுமா..? அத்தனை பேர் முன்னாடி சொன்னீங்களே...'' நடுங்கும் உதட்டை இறுக கடித்தாள்.

அந்த உதட்டில் பார்வையை பதித்து, பின் ''உன் அப்பா தான் ரமேஷை விரும்பினாள்'' என்று சொன்னார்.

''ஒரு தடவை ரமேஷ் என்ற பெயரை சொன்னா... இவரை மாப்பிள்ளை பார்க்கலாமா..? என்றார். அதுதான் எனக்குத் தெரியும். நான் அவரைப் பார்த்தது கூட இல்லை.''

''சாரிடா சுதா. என் மீது தப்புத்தான். நடந்ததையெல்லாம் மறந்து விடுவோம். என் அன்பு முழுவதும் உனக்



குத்தான் என்றால் இனி வீட்டில் பிரச்சனை இருக்காது. இந்த வீட்டில் இருக்க பிடிக்கவில்லையென்றால் வேற வீட்டுக்கு நாம் தனியாக போய்விடலாம். நான் உனக்கு சோறு போடும் அளவிற்கு சம்பாதிக்கிறேன். நீதான் தயவு பண்ணி மன்னித்து எனக்கு வாழ்வு கொடுக்கணும்'' என்று முறுவலித்தான்.

அவனை முறைத்துப் பார்த்தாள்.

அவன் கண்களில் சிரிப்பைக் காணவும் அவளையறியாமல் புன்னகை புரிந்தாள். அந்த கன்னத்தில் அழகாக குழி விழுந்தது.

நிமிண்டினான் அந்த குழியை. அவள் கன்னத்தில் ரோஜாக்கள் பூத்தன. ரசனையுடன் பருகினான்.

''நீ யார்..? நீ யார்..? என்று எத்தனையோ தடவை கேட்டீங்க. இப்ப நான் யார்..? உங்களுக்காக இங்கு இருக்க...?''

''நீ என் மனைவிடா..'' என்று படக்கென்று அவள் இதழில் இதழ் பதித்தான். சில நிமிடங்களுக்குப் பிறகு விடுவித்தான்.

அவனை நிமிர்ந்து பார்த்தாள். நீர் வழியும் கண்களோடு.

அவளை அப்படியே தூக்கிக் கொண்டு படுக்கைக்கு போனான்.

''உன் மாமனார் அன்று உன்னிடம் என்ன சொன்னார். நான் முரடன். அவள் சொல்வதையெல்லாம் கேட்கச் சொன்னார் இல்லையா...? இப்போ நான் சொல்வதை கேள்'' என்று அவளை புரட்டி தன் மீது போட்டான்.

அவன் வளைத்த வளைப்புக்கெல்லாம் வளைந்தாள். இத்தனை நாள் மறைத்து வைத்திருந்த உணர்வுகளுக்

கெல்லாம் வடிகால் கிடைத்தது. அத்தனை மென்மையாகக் கையாண்டான்.

அவள் முகத்தில் வியர்வை முத்துக்கல். வெற்றியின் களிப்பில் ஆனந்தமாக அணைத்தான்.

அவள் சிணுங்கலுடன் மீசையை பற்களால் மெல்ல கடித்தாள்.

''என்னடா...'' என்றான்.

''நீங்கள் ஏன் அன்று மகாபலிபுரம் கூட்டிப் போய் விட்டு சு...ம்..மா கூட்டி வந்தீங்க.''

''சும்..மா...வா... நான் உன் டிரஸ்சை கழட்டலையே... நீ டிரஸ்சோட தானே வந்தே...'' வெண் பற்கள் தெரிய சிரித்தான்.

''சீ..ய்.. நான் அதைச் சொல்லலை...''

''வேற எதைச் சொல்றே.. சீண்டினான். ''எனக்குப் புரியவில்லையே'' என்றான்.

''ஆமா. சின்ன பப்பா. ஒண்ணும் புரியலே...'' காலை அவன் மேல் தூக்கிப் போட்டு இறுக்கினாள்.

அவன் சிரித்தான். ''எனக்கு புரியுதுடா. நான் அன்று இது மாதிரி கூப்பிட்டால் நீ வருவியா..? வரமாட்டேல்ல... அது எனக்கும் தெரியும். அதனால்தான் நான் சும்மா.. கூட்டி வந்தேன். நீ இப்ப உன் மனதில் உள்ளதையெல்லாம் பேசியாகிவிட்டதா. இப்போ மனம் லேசான மாதிரி இருக்குமே. அதான் அப்படி நடந்துக்கிட்டேன்.''

''ஏன்..? நீ இப்படி எதிர்பார்த்தியா..?''

''ஆமாம். ஆனால் நீங்கள் சொல்வது போல் என்னால் அன்று இதை ஏற்க முடியாது. சண்டை போட்டிருப்பேன்.''



''என்னை வேண்டாம் என்று சொன்ன நீங்க.. இன்று எப்...ப..டி'' என்றாள் முகம் சிவக்க,

சிவந்த முகத்தை உதடுகளால் கோலம் போட்டான்.

''வேண்டாம் என்று வாய் தானே சொன்னது. மனசு இல்லையே... முதலில் உன் மேல் எந்த அபிமானமும் இல்லைதான். கல்யாணத்தன்றே.. உன் அழகு என்னை லேசா பாதித்தது. பிறகு அதை நினைக்கவில்லை. என் நண்பன் சொல்வான். என்னடா இத்தனை பிடிவாதம். சிஸ்டரோட அழகுக்கு முன் இதெல்லாம் எம் மாத்திரம். இத்தனை அழகையும் ரசிக்காமல் விட்டுவிட்டு வீம்பு பிடித்து அலைகிறான். எப்படிடா உனக்கு மனசு வருது நீ அனுபவிக்க வேண்டிய சொர்க்கத்தையே விட்டு விட்டு'' என்பான்.

இருவரும் அவசரமாக கட்டியணைத்தனர். இருவரும் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

''முதலில் நீ வந்தாய் பார். அதுவும் கல்யாணத்துக்கு கிளம்பி நீ கீழே வரும்போது. நான் அசந்துவிட்டேன். எளிமையிலும் இத்தனை அழகா என்று. என் ஈகோ உன்னைப் பாராட்ட முடியாமல் கோபத்தை கொட்டினேன் உன் மீது. நீ ஊருக்குப் போனதும் எனக்கு என்னவோ போல் இருக்கும். நீ இருக்கும் போது ஆபீஸ் முடிந்ததும் வேகமாக வருவேன் உன்னைப் பார்க்க. அந்த ஆவலை மறைக்க பெரும்பாடு படுவேன். அந்த உண்மை உனக்குத் தெரிந்துவிட்டால் என்னைக் கேவலமாக நினைப்பாய். இவ்வளவு ஆணவமாகப் பேசிவிட்டு என் அழகுக்கு நீ அடிமைதான் என்ற கர்வம் உனக்கு வந்துவிடும். பிறகு நீ என்னை மதிக்கமாட்டாய் என்று நினைத்தேன்.''

''சாரிடா..'' அவள் மார்பில் முகத்தை புதைத்தான்.

''மறுமுறை வரும்போதுதான் அந்த அணைப்பு, முத்தம் எல்லாம் என்னிடம் சொல்லாமலேயே.. நீ ஊருக்குப் போய்விட்டாய். அதை நினைத்து ரொம்ப ஆத்திரப்பட்டேன்.''

அவள் கிளுக்கிச் சிரித்தாள்.

''இப்போ உன்னிடம் முழுமையாகச் சரண் அடைந்து விட்டேன். இனி தேவிதான் கருணை காட்ட வேண்டும்'' என்றான் வேண்டும் குரலில்.

''தினமும் என் தரிசனம் கிடைக்கும் பக்தா... கவலைப் பட வேண்டாம்'' என்றாள். கையை உயர்த்தி ஆசீர்வாதம் பண்ணுவது போல்.

''என் கட்டித் தங்கமே...'' என்று மூச்சு திணற அடித்தான்.